

அஜ்மலின் தடைக்கு வட்சன் காரணம்?

பக்கம் 27


# உதயன்

சுடர்: 29 கதிர்: 292 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 29, ஞாயிறு 14.09.2014

stay connected with: uthayan.print uthayanprint *Uthayan - A lively National Tamil Daily*

32 பக்கங்கள்

யாழ். - 30/=

வன்னி - 20/=


தெளிவான வானிலை

காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று km/h

ஈரப்பதம்: 48%

காற்றழுத்தம்: 1008 hPa


வெளிச்சத் தெளிவு: மிக நன்று

சூரியோதயம்: 05:23

சூரியஸ்தமனம்: 18:04

# உண்மையை கண்டறிவதை தடுக்கக்கூடாது கொழும்பு

## உண்மையை நிலைநாட்டுவது துரோகச் செயலாக அமையாது வடக்கு மாகாண முதலமைச்சர் தெளிவாக எடுத்துரைப்பு



### எம்மை மீறி எவருமே இல்லை

இதுவே இராணுவத்தினர் விடுக்கும் செய்தி முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.14

"எவரும் எங்களை மீறியவர்கள் அல்லர் என்பதுதான் இராணுவத்தினர் சொல்லும் செய்தியாகவுள்ளது. அதனால்தான் எமது மக்களின் பாதுகாப்புக் குறித்து நான் கருத்துக்களைத் தெரிவித்தேன். எனது பாதுகாப்பு பற்றி எதையும் நான் சொல்லவில்லை"- இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

"தன்னை ஒளிப்படம் எடுக்கின்றார்கள் என்று முதலமைச்சர் கூறுகின்றார். ஆனால் அது தொடர்பில் பாதுகாப்பு பிரச்சினை இருந்தால் ஏன் பொலிஸில் முறைப்பாடு செய்யவில்லை" என்று சிரேஷ்ட பொலிஸ் அத்தி

25 ஆம் பக்கம் பார்க்க

யாழ்ப்பாணம், செப்.14

"இலங்கையின் இறுதிக் கட்டப் போரில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பிலான விசாரணைக்கு, ஐ.நா. மன்றம் உட்பட எந்தவொரு குழுவையும் அனுமதிப்பதில்லை என்ற கொழும்பு அரசின் முடிவு தொடர்பில் வடக்கு மாகாண சபை சில விமர்சனங்களைக் கொண்டுள்ளது. உண்மை நிலைநாட்டப்படுவதற்கு குறுக்கே கொழும்பு நிற்கக் கூடாது என்றுதான் நாங்கள் கேட்கின்றோம். உண்மையை நிலைநாட்டுவது என்பது எப்படி துரோக நடவடிக்கையாக அமைய முடியும்?"- இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன். வடக்கு மாகாணசபையின் கடந்த அமர்வில் நிறைவேற்றப்பட்ட, ஐ.நா விசாரணைக் குழுவை இலங்கைக்குள் அனுமதிக்க வேண்டும் என்று இலங்கை அரசைக் கோரும் பிரேரணை தொடர்பில் ஸ்ரீ

25 ஆம் பக்கம் பார்க்க

## மூன்றாவது தடவையாகவும் களமிறங்குவார் மஹிந்த?

யாழ்ப்பாணம், செப். 14

மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதில் எந்த வித சட்டச் சிக்கலும் இல்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அதனால் எதிர்வரும் ஜனவரி மாதம் 7 ஆம் திகதிக்கும் 11 ஆம் திகதிக்கும் இடையே தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி தயாராகி வருகின்றார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதியாக ஒருவர் எத்தனை தடவைகள் வேண்டுமானா

25 ஆம் பக்கம் பார்க்க



## சரியான இடம் காட்டப்படாததால் கொழும்பு திரும்பிய அதிகாரிகள்

குருக்கள்மடம் மனிதப் புதைகுழி விடயத்தில் தடுமாற்றம்

யாழ்ப்பாணம், செப். 14

குருக்கள் மடத்தில் முஸ்லிம் மக்கள் கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் இடத்தை அடையாளப் படுத்துவதற்காக கொழும்பில் இருந்து நிபுணர்கள் குழு நேற்று வந்திருந்தபோதும், குறித்த இடத்தை அடையாளப்படுத்துவதில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக அவர்கள் தமது பணிகளைச் செய்யாது திரும்பிச் சென்றுள்ளனர்.

1990 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 12 ஆம் திகதி, கல்முனையிலிருந்து காத்தான்குடிக்கு திரும்பிக் கொண்டிருந்த முஸ்லிம்களை குருக்கள் மடத்தில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் கொலை செய்தனர் என்று தெரிவிக்கப்

25 ஆம் பக்கம் பார்க்க

## மஹிந்தவை சந்திப்பாரா இந்தியப் பிரதமர் மோடி?

சாத்தியம் குறைவு என்கிறது புதுடில்லி



புதுடில்லி, செப்.14

அமெரிக்காவின் தலை நகர் நியூயோர்க்கில் இந்த மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. பொதுச்சபையின் கூட்டத்தொடரில் பங்கேற்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்திப்பாரா என்பது தொடர்பில் புதுடில்லி சந்தேகம் வெளியிட்டுள்ளது.

25 ஆம் பக்கம் பார்க்க

## பாப்பாமோட்டையில் சிக்கியது கஞ்சா

மன்னார், செப்.14

மன்னார் விடத்தல் தீவு பொலிஸ் பிரிவில் உள்ள பாப்பாமோட்டைப் பகுதியில் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்று விடத்தல் தீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து, இரவு 9.30 மணியளவில் குறித்த பகுதிக்குச் சென்ற விடத்தல் தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜீ. ஜே. குணதிலக்க தலைமையிலான பொலிஸ்

25 ஆம் பக்கம் பார்க்க



*கைப்பற்றப்பட்ட கஞ்சாவுடன், பொலிஸ் குழு*

## கரையொதுங்கிய உடல் இந்திய மீனவருடையது

யாழ்ப்பாணம், செப்.14

ஊர்காவற்றுறை மண்கும்பான் பகுதியில் உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்ட ஆணின் சடலம் அடையாளம் காணப்பட்டது. கடந்த வாரம் இராமேஸ்வரத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்று, காணாமற்போயிருந்த இந்திய மீனவரான எம்.ஞானப்பிரகாசம் (வயது-40) என்பவரே சடலமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

குறித்த சடலத்தின் வலது

25 ஆம் பக்கம் பார்க்க






மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழ் வேட்பாளரை களமிறக்க மேற்கு நாடுகள் தீவிர முயற்சி

## இலங்கையில் ஆட்சி மாற்றமே அவற்றின் இலக்கு இப்படிக் கூறுகின்றார் அமைச்சர் விமல் வீரவன்ஸ



கொழும்பு, செப்.14
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவதற்கு மேற்கு நாடுகள் முயற்சி எடுத்து வருகின்றன என்று தெரிவித்துள்ளார் வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ஸ.
இலங்கையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் முனைப்புகளில் சில வெளிநாட்டுத் தூதரகங்கள் கூடுதல் அக்கறை காட்டி வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
"உள்நாட்டுக் கிளர்ச்சி ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் அரசைக் கவிழ்ப்பதே மேற் குலக நாடுகளின் தீவிர முயற்சியாகும். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பல வேட்பாளர்களைக் களமிறக்கி வாக்குகளை சிதறடிக்கச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. குறிப்பாக அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் வாக்குக் கணக்கெடுப்பை இரண்டாம் சுற்று வரையில் முன்னெடுக்கும் வகையில் வேட்பாளர்கள் நிறுத்தப்பட உள்ளனர்"- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
"வடக்கின் வாக்குகள் தெற்கின் வாக்குகள் என பல்வேறு வழிகளிலும் ஆளும் கட்சிக்கான வாக்குகளைச் சிதறடிக்க முயற்சிக்கப்படுகின்றது. எந்தவொரு வேட்பாளரும் அறுதிப் பெரும்பான்மையை பெற்றுக் கொள்ளக் கூடாது என்பதே மேற்குலக நாடுகளின் இலக்காக அமைந்துள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 51 வீதமான வாக்குகளைப் பெற்றுக் கொள்ளாவிட்டால், இரண்டாம் தவணைக்கான வாக்கு எண்ணும்பணிகள் மேற்கொள்ளப்படும்"- என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது, "இரண்டாம் கட்ட வாக்கு எண்ணும் பணிகள் நடைபெறும் தருணத்தில் நாட்டில் பெரியளவிலான கிளர்ச்சி ஒன்றை முன்னெடுக்கும் சதி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சமூக வலைத்தளங்கள் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் பரப்புரை செய்து மக்களை வீதியில் இறக்கி போராட்டம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## தற்கொலை செய்வதில் ஆண்களே முதலிடம்

கொழும்பு, செப்.14
இலங்கையில் பெண்களை விடவும் ஆண்களே அதிகளவில் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என்று பொலிஸ் திணைக்களம் நடத்திய ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.
இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 359 பெண்களும், ஆயிரத்து 267 ஆண்களும் தற்கொலை செய்துள்ளனர். தற்கொலை செய்து கொண்டுள்ள ஆண்களில் 71 வயதுக்கு மேற்பட்ட 142 பேரும் அடங்குகின்றனர் என்றும் அந்த ஆய்வு கூறுகின்றது. பெரும்பாலானவர்கள் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளனர் என்றும், 17 வயதுக்கும் 20 வயதுக்கும் உட்பட்டவர்களே அதிகம் என்றும் அந்த ஆய்வின் முடிவுகள் கூறுகின்றன.
2013 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 703 ஆண்களும் 752 பெண்களும் தற்கொலை செய்துள்ளனர். 2012 ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 721 ஆண்களும் 805 பெண்களும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் எனவும் அந்த ஆய்வில் மேலும் தெரியவந்துள்ளது. (ற)

## மனைவியை காரில் விட்டு தப்பியோடினார் கணவன்

கொழும்பு, செப்.14
அதி சொகுசு கார் ஒன்றில் போதைப்பொருள் 'விற்பனை செய்யும் தம்பதி ஒன்றைப் பொலிஸார் கைது செய்ய முயன்றபோது, காருக்குள் மனைவியைக் கைவிட்டுதப்பியோடியுள்ளார் கணவர். இந்தச் சம்பவம் காலி பொத்தல பொலிஸ் பிரிவில் நடந்துள்ளது.
சிக்கிக் கொண்ட மனைவியிடம் இருந்து பொலிஸார் ஒரு கிராம் 50 மில்லிகிராம் போதைப் பொருளையும், காரில் இருந்து 5 கிராம் 150 மில்லிகிராம் போதைப் பொருளையும் கைப்பற்றியுள்ளனர். அத்துடன் அந்தப் பெண்ணிடம் இருந்து 1 லட்சத்து 49 ஆயிரத்து 700 ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
தப்பியோடியவரைக் கைது செய்யும் நடவடிக்கைகள் தற்போது முடுக்கிவிடப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

## பலவந்தமாக வாக்குப் பெற அரசு முயற்சி

கொழும்பு, செப்.14
மிகவும் அநீதியான சூழ் நிலையிலேயே ஊவா மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுகின்றது என்று பௌபிம மக்கள் கட்சியின் தலைவர் ஹேமகுமார நாணயக்கார தெரிவித்துள்ளார்.
"அரசு முழு அரச அதிகாரத்தையும் பயன்படுத்தி அரசின் அனுசரணையுடன் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. ஊவாவில் இருக்கும் அப்பாவி மக்களின் ஜனநாயகத்தை அரசு அடுப்பில் போட்டுள்ளது"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## கசிப்பு உற்பத்தி செய்த மூவர் சிக்கினர்

### உற்பத்தி உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன



முள்ளியவளை, செப்.14
முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மதலாளசிங்கன்குளம் பகுதியில், காட்டுக்குள் கசிப்பு உற்பத்தி செய்த மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 3 பரல் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளது. அத்துடன் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் பொருள்களும் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-433)

## கிடுகிடுவென மேலேறும் வாழைப்பழத்தின் விலை

### நுகர்வோர் பெரும் திண்டாட்டம்

யாழ்ப்பாணம், செப்.14
யாழ். குடாநாட்டில் வாழைப் பழத்தின் விலை தினம் தினம் அதிகரித்துச் செல்கின்றது. நேற்றுமுன்தினம் சந்தை நிலவரப்படி ஒரு கிலோ கதலி வாழைப்பழம் 120 ரூபாவைத் தாண்டியுள்ளது.
தற்போது ஆலய உற்சவங்கள், சுபவைபவங்கள் போன்றவை இடம்பெற்றுவரும் வேளையில் வாழைப்பழத்தின் பாவனை அதிகரித்துள்ளது. கடும் வறட்சி, வெப்பம் போன்ற காரணத்தினால் அனேகமானோர் வாழைச் செய்கையில் ஆர்வம் காட்டவில்லை. அதனைவிட குடாநாட்டில் இருந்து தென்பகுதிக்கும் கூடுதலான வாழைக்குலைகள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.
இவற்றால் குடாநாட்டுச் சந்தைகளுக்கு போதியளவு வாழைக் குலைகள் வருவதில்லை என்று கூறப்படுகின்றது. கடந்த வாரத்தில் கிலோ 80 ரூபாவாக விற்கப்பட்ட கதலி வாழைப்பழம் நேற்று 120 ரூபா வைத் தாண்டியுள்ளது. (ற-17)

## திறன்மிக்க ஆசிய் நாடு இலங்கை

கொழும்பு, செப்.14
திறன்மிக்க ஆசிய நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடங்கியுள்ளது என்று ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது. நாட்டின் பொதுமக்கள் தொடர்பிலான பொருளாதாரம் மற்றும் புதிய கொள்கைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இது குறித்து நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட சுட்டெண்ணின்படி ஆசிய நாடுகளிலும் உலகளாவிய ரீதியிலும் ஜப்பான் முதலிடம் பெற்றுள்ளது. மக்களுக்கான பொருளாதாரம், அறிவு பூர்வமான பொருளாதார அறிவு உட்பட்ட 36 விடயங்கள் இந்த சுட்டெண்ணுக்கு ஆதாரமாக எடுக்கப்பட்டுள்ளன.
உலகளாவிய ரீதியில் பின்லாந்து இரண்டாம் இடத்தையும் அமெரிக்கா நான்காம் இடத்தையும் பெற்றுள்ளன. தென்கொரியா மூன்றாம் இடத்தையும் சீனா 11ஆவது இடத்தையும் பெற்றுள்ளன. இலங்கை 19ஆவது இடத்தையும் இந்தியா 14ஆவது இடத்தையும் பெற்றுள்ளன. (ற)


## நவிப்பிள்ளையின் பிரதியே ஹுசைன்

### பிரதியமைச்சர் வீரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, செப்.14
புதிய ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அல் ஹுசைன், முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை விட மோசமானவர் என்று தெரிவித்துள்ளார் பிரதியமைச்சர் வீரகுமார திஸாநாயக்க.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
"அல் ஹுசைன் நவநீதம்பிள்ளையின் காபன் பிரதிக்கு அப்பால் சென்ற ஸ்கேன் பிரதி. அவர் பதவியேற்று முதலில் ஆற்றிய உரையிலேயே இதனைக் காண முடிந்தது. அவர் என்ன செய்யப் போகிறார் என்பது எமக்குப் புரிந்துள்ளது.
புதிய ஆணையாளர் இலங்கைக்கு நியாயத்தை நிறைவேற்றப் போவதில்லை. இலங்கைக்கு எதிராக முனைப்புகளை அவர் மேலும் வலுப்படுத்தப் பார்க்கின்றார். மனித உரிமைப் பிரச்சினைகள் காணப்படும் நாடுகள் மீது அனுதாபப்பட்டு ஐ.நா. மனித உரிமை ஆணையாளரை மாற்றவில்லை"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## ஆணையாளரை சந்தித்தாலும் ஐ.நாவின் விசாரணை நடக்கும்

### அரசுக்குக் கூறுகின்றது ஐ.தே.க.



கொழும்பு, செப்.14
"சர்வதேச விசாரணையை தவிர்க்க அரசு என்ன செய்தாலும், யாரைச் சந்திக்க முயற்சித்தாலும் விசாரணை நடைபெறுவதை இனித் தடுக்க முடியாது. இலங்கைக்கு பல சந்தர்ப்பங்கள் இருந்த போதும் அதை தற்போதைய அரசு பயன்படுத்தத் தவறி விட்டது" - இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல.
"ஐ.தே.க. சர்வதேச விசாரணையையோ அல்லது தலையீட்டையோ விரும்பவில்லை. போரை முடிவுக்கு கொண்டு வர நாமும் விரும்பினோம். ஆனால் பொது மக்களைத் தண்டிப்பதை நாம் விரும்பவில்லை, போர் முடிந்தபின் அரசு வடக்குப் பகுதியைக் கையாண்ட விதமே அவ்வாறான சர்வதேச விசாரணைக்கு முகம்கொடுக்கும்சூழ்நிலையை ஏற்படுத்தி விட்டது"- என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
"சர்வதேசம் இந்த அரசுக்கு பல சந்தர்ப்பங்களைக் கொடுத்த போதும் தனது பக்க நியாயத்தைத் தெரிவிக்காது, அரசு போர் வெற்றி விழாக்களில் தனது கவனத்தைச் செலுத்தியது. சர்வதேசத்தின் ஆதரவின்றி இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது என்பதை அரசு புரிந்து கொள்ளவில்லை. நாட்டின் ஆட்சியை அரசு கைப்பற்றி மக்களை ஏமாற்றிக் கொண்டு தன் பக்கம் நியாயம் உண்டென நாட்டையும் நாட்டு மக்களையும் காட்டிக் கொடுத்து விட்டது"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# புதிய அரசமைப்பு தொடர்பில் கலந்துரையாடப்படவில்லை

## வடக்கு மாகாண சபை தீர்மானம் குறித்து ஆராயப்படுகிறது அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

கொழும்பு, செப்.14
புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான எவ்விதமான கலந்துரையாடல்களும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மட்டத்திலோ அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மட்டத்திலோ இடம்பெறவில்லை என்று தெரிவித்துள்ள சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய நாடுகள் மனித உரிமை விசாரணைக் குழுவினரை இலங்கைக்குள் அனுமதிக்கவேண்டும் என்று வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணை தொடர்பில் ஆழமாக ஆராய்ந்துவருகின்றோம். அடுத்தவாரம் சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவில் இது குறித்து ஆராய்ந்துவிட்டு எமது தீர்மானத்தை அறிவிப்போம் என்றும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

"நாட்டில் உள்ள ஒன்பது மாகாண சபைகளும் அரசியலமைப்புக்கு உட்பட்டே செயற்படவேண்டும். அரசியலமைப்பை மீறி எந்தவொரு மாகாண சபையும் செயற்பட முடியாது. அரசியலமைப்புக்கு எதிராகவோ சவால் விடும் வகையிலோ எதனையும் செய்ய முடியாது.

நாட்டின் அரசியலமைப்பில் காணப்படுகின்ற 13 ஆவது திருத்தம் மற்றும் மாகாண சபைகள் சட்டம் என்பனவற்றில் தெளிவான முறையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படியே மாகாணசபைகள் செயற்படவேண்டும்.


இந்த நிலையில் வட மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணை குறித்து மிக ஆழமாக தற்போது ஆய்வு செய்துவருகின்றோம்.

அடுத்தவாரம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு கூடவுள்ளது. அதன் போது வட மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை குறித்தும் விரிவாக கலந்துரையாடப்படவுள்ளது. வட மாகாண சபை பிரேரணை தொடர்பில் சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவில் கலந்துரையாடி எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் தொடர்பில் அடுத்தவாரம் நாங்கள் அறிவிப்போம்.

புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான எவ்விதமான கலந்துரையாடல்களும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மட்டத்திலோ அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மட்டத்திலோ இடம்பெறவில்லை. புதிய அரசியலமைப்பு விவகாரம் குறித்து ஆராயப்படுவதாக ஊடகங்களில் நானும் செய்திகளை பார்த்தேன். ஆனால் கட்சி மட்டத்தில் எதுவும் கலந்துரையாடப்படவில்லை."- என்று தெரிவித்துள்ளார். (ற)

# ஜனாதிபதி ஆட்சியை ஒழிக்க கோருவது வேடிக்கையானது

## அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க கூறுகிறார்



கொழும்பு, செப்.14
ஜனாதிபதி ஆட்சி முறைக்கு ஆதரவு வழங்கிய ரணில் விக்ரமசிங்க இன்றுதான் ஜனாதிபதியாக வரமுடியாததை உணர்ந்து ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க வேண்டும் என்று கூறுவது வேடிக்கைக்குரிய விடயமாகும்- இவ்வாறு தெரிவித்துள்ளார் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பாமர மக்களுக்காக உருவாக்கப்பட்ட கட்சியாகும். அதன் ஆட்சிக் காலத்தில் மக்கள் செல்வச் செழிப்போடு வாழ்ந்தார்கள். பின்னர் 1977 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த ஐ.தே.கட்சி அறிமுகப்படுத்திய பொருளாதாரத் திட்டத்தால் மக்கள் மீண்டும் வறுமைக் கோட்டுக்குத் தள்ளப்பட்டனர். இவ்வாறு நாட்டை மாறி மாறி ஆட்சி புரிந்த தலைமைகளால் எந்தப் பிரயோசனமும் ஏற்படவில்லை. அதிர்ஷடவசமாக ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் போர் முடிவுக்கு கொண்டவரப்பட்டது. நாடு என்றும் காணாத அளவுக்கு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைக் கண்டு வருகின்றது.

ஜனாதிபதி மஹிந்த தலைமையிலான ஆட்சியைக் குறை கூறி வரும் ஐ.தே.கட்சி இனி இந்த நாட்டை ஆளப்போவதில்லை. இந்நாட்டு மக்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது வைத்திருக்கும் நம்பிக்கையை யாராலும் இல்லாதொழிக்க முடியாது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# அரசுக்கு வாக்குகள் குறையும்

*- ராஜித*

கொழும்பு, செப்.14
ஊவா மாகாண சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கணிசமான வாக்குகளை இழக்கும் என்று எதிர்வு கூறியுள்ளார் மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரத்ன. அரச பத்திரிகை ஒன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது, "மொனராகலையில் 58 முதல் 60 வீத வாக்குகளும் பதுளையில் 52 முதல் 53 வீத வாக்குகளும் கிடைக்கும்."- என்று கூறியுள்ளார்.

அமைச்சர் வெளியிட்டுள்ள இந்த தகவல் மூலம் அரசுக்குக் கிடைக்கும் வாக்குகள் குறையும் என்பது தெளிவாகியுள்ளது. 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற ஊவா மாகாண சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 72.39 வீத வாக்குகளை பெற்றது. மொனராகலையில் 81.32 வீத வாக்குகளையும் பதுளையில் 67.79 வீத வாக்குகளையும் ஆளும் கட்சி பெற்றிருந்தது. (ற)

# வடிகால்களைத் துப்புரவு செய்யும் பணிகள் மும்முரம்

## யாழ்ப்பாணம் மாநகரப் பகுதிகளில்

யாழ்ப்பாணம், செப்.14
டெங்கு ஒழிப்பு செயற்பாட்டு வாரத்தை முன்னிட்டு யாழ். மாநகரப் பகுதியில் உள்ள கழிவு நீர் ஓடும் வடிகால்களுக்கு இரசாயன மருந்து வகைகள் விசிறப்பட்டு துப்புரவாக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



மாநகரப் பகுதியில் உள்ள பிரதன வடிகால்கள் பல நாள்கள் துப்புரவு செய்யப்படாத நிலையில், அவற்றுள் கழிவுப்பொருள்கள் தேங்கி கழிவு நீர் ஓடுவது தடைப்பட்டிருந்தது. தற்போது தேசிய டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், யாழ்.மாநகரப் பகுதியில் உள்ள வடிகால்களைத் துப்புரவு செய்யும் பணிகள் நேற்றுமுன்தினம் முதல் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் வடிகால்களுக்கு "அபேற்", "சங்" ஆகிய இரசாயன மருந்துகள் விசிறப்பட்டு நுளம்பு குடம்பிகள் அழிக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை, மக்கள் நெருக்கமாக வதியும் குருநகர் பகுதி வாய்க்கால்கள் கழிவுப் பொருள்களால் தடைப்பட்டு, கழிவு நீர் ஓடுவது தடைப்பட்டிருந்தது. அங்கும் வடிகால்களைத் துப்புரவு செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குருநகர் ஓடக்கரை வீதி, சென்.மேரிஸ்வீதி, ஐஸ் பிளாண்ட் வீதி, மத்திய கிழக்கு, மேற்கு வீதிகள், தண்ணீர் தாங்கிவீதி போன்ற வீதிகளில் காணப்பட்ட பிரதான வடிகால்கள் துப்புரவு செய்யப்பட்டுள்ளன. (ற-17)

# இனப்பிரச்சினை தீர்வு குறித்து சிறுபான்மைக் கட்சிகள் பேச்சு

## சிங்கள ஊடகம் ஒன்று கூறுகின்றது

யாழ்ப்பாணம், செப். 14
இனப்பிரச்சினைக்கான தீர்வு எவ்வாறு அமைய வேண்டும் எனவும், அதற்கு ஏற்ற வகையில் அரசமைப்பில் எவ்வாறு மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என்பது தொடர்பாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட சிறுபான்மைக் கட்சிகள் மற்றும் சிங்கள முற்போக்கு சக்திகள் ஒன்றிணைந்து பேச்சு நடத்தவுள்ளன என்று சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வவுனியாவில் தமிழரசுக் கட்சியின் மாநாடு கடந்த வாரம் நடைபெற்றது. அதில் சிறுபான்மை கட்சித் தலைவர்கள் மற்றும் தென்னிலங்கையின் முற்போக்கு சக்திகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர். அந்தச் சந்தர்ப்பத்திலேயே மேற்கண்டவாறான முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஹசன் அலி குறித்த சிங்கள ஊடகத்துக்கு குறிப்பிட்டுள்ளார்.

ஊவா மாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் 20 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதன் பின்னரே இது தொடர்பான பேச்சு ஆரம்பிக்கப்படும் என்று ஹசன் அலி குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை தமிழரசுக் கட்சியின் மாநாட்டிலும், இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அரசியலமைப்பை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. அத்துடன் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பின் போது இலங்கையிலுள்ள சகல சிறுபான்மைக் கட்சிகளையும், தென்னிலங்கை முற்போக்கு சக்திகளையும் ஒன்றிணைத்து செயற்படுமாறு கூட்டமைப்புக்குத் தெரிவித்திருந்தார். (ற-5)

# தங்கம் கடத்திய ஐவர் கைது

கொழும்பு, செப்.14
இரண்டு கோடி ரூபா பெறுமதியான தங்கத்தை சட்ட விரோதமாக இலங்கைக்குக் கொண்டு வந்த 5 பெண்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மர்ம உறுப்புகளில் மறைத்து வைத்து தங்கத்தைக் கடத்தியுள்ளனர் என்று சுங்கப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார். (ற)

# மீனவரையும், படகுகளையும் விடுவிக்கக் கோரி போராட்டம்

சென்னை.செப்.14
இலங்கையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள படகுகளையும், கைது செய்யப்பட்ட மீனவர்களையும் விடுவிக்கக்கோரி நாகை மாவட்ட மீனவர்கள் நேற்று முதல் காலவரையறையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இராமேஸ்வரம் மற்றும் நாகை மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் 78 பேரும், அவர்களுடைய படகுகள் உட்பட, முன்னர் பறிமுதல் செய்யப்பட்ட 72 படகுகளும் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் மீனவர்களையும் படகுகளையும் விடுவிக்கக் கோரி நாகை மாவட்ட மீனவர்கள் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

இந்தநிலையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா மீனவர்களையும் படகுகளையும் விடுவிக்க உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று இந்தியப்பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

"இலங்கை அரசின் போக்கு தற்போது கடுமையாகியுள்ளது. இந்திய மீனவர்களுக்கு பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் வகையில் நிரந்தர பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற் கொண்டு வருகின்றது"- என்று தமிழக முதலமைச்சர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பறிமுதல் செய்யப்பட்ட படகுகள் விடுவிக்கப்படாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். "படகுகளை விடுவிப்பு செய்தால் மீளவும் மீனவர்கள் மீன்பிடிக்க வந்து இலங்கைக் கடலில் பெரும் ரோலர் படகு களைக் கொண்டு வளத்தை அழிப்பதால் எமது மீனவர்களது வாழ்வாதாரம் பாதிக் கும். எனவே படகுகள் விடுவிப்பு செய்யப்பட மாட்டாது"- என்று இந்திய நாளிதழ் ஒன்றுக்கு அவர் தெரிவித்துள்ளார். (ற-14)

இது வெறும் வாய்ச்சவடால் அல்ல.
வென்று வந்த விசாக்களை
நேரில் எவரும் வந்து
ஆய்வு செய்யலாம்.
செங்கன் விசா-சுவிஸ், பிரான்ஸ்,
நோர்வே, இத்தாலி, ஜேர்மனி... உட்பட
26 நாடுகள் 2 வருட விசா
படிக்கவும் உழைக்கவும் அரியவாய்ப்பு.
17.09.2014 வரை.
சில நிபந்தனைகளுக்கமைவாக 100% விசா உறுதிப்பாடும்
சனி, ஞாயிறு உட்பட 7 நாள்களும் திறந்திருப்போம்.
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
அரசாங்க பதிவு -PV82703
முன் மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090
(52246) (6.4.3)



# மரண அறிவித்தல்



## சரவணமுத்து சுப்பிரமணியம்

அளவெட்டி வடக்கு அரசொல்லையை பிறப்பிடமாகவும் அளவெட்டி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சுப்பிரமணியம் கடந்த (12.09.2014) வியாழக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-மாரிமுத்து தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை -சிவகாமிப்பிளை தம்பதியரின் மருமகனும், சிதம்பரேஸ்வரியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 15.09.2014 திங்கட்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியை க்காக கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(52267) தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## திரு சுப்பிரமணியம் வரதராஜா (VTS)

(உரிமையாளர் : ஸ்ரீமலர் ஸ்ரோர்ஸ், களுத்துறை)

புளியங்கூடல் வடக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் வரதராஜா (10.09.2014) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான, சுப்பிரமணியம் - செல்லக்கண்ணு தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பராசக்தி (பரமேஸ்வரி) அவர்களின் அன்புக்கணவனும், றஞ்சன், ஸ்ரீ மலர், ஸ்ரீ நந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஞானகரன் சித்திரலேகா, ஸ்ரீ தரன், காலஞ்சென்ற ஜெயரூபி ஆகியோரின் அன்பு மாமனாரும், திலகேஸ்வரி, நாகேஸ்வரி, அருமைநாயகம், ராஜகுமார் காலஞ்சென்றவர்களான சொர்ணகாந்தி, செல்வகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற கனகசபாபதி மற்றும் ராஜலட்சுமி (காந்தி), சியாமிளா ஆகியோரின் அன்பு மைத்துனரும், அன்னலட்சுமி, சறோஜினிதேவி, காலஞ்சென்ற கலைவாணி ஆகியோரின் அன்பு அத்தானும், பேரின்பநாதன் (அருள்), ராஜலிங்கம் ஆகியோரின் அன்பு சகலனும், அபிநயா, சாகித்தியன், மதுளா, மிதுறா, கனிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.09.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியக்காக சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.
T.P. 077 869 0705

புளியங்கூடல் வடக்கு.
ஊர்கவற்றுறை. (52269)

### மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தில் பிறந்த 1983.05.21 பூர நட்சத்திரம், 3இல் சூரியன் செவ்வாய், பாவம் 16 உடைய வங்கியில் பணி யாற்றுகின்ற பட்டதாரி மணமகளுக்கு அரச உத்தியோகத்தில் பணியாற்றுகின்ற மணமகன் தேவை.

(52264) தொடர்புகளிற்கு: 077 9[illegible]6 1535

### கணக்கு உதவியாளர் தேவை



பம்பலப்பிட்டி பகுதியில் அமைந்துள்ள ஒரு பிரபல பத்திரிகை அலுவலகத்துக்கு உயர்தரத்தில் கணக்கியல் பாடத்தை கற்ற ஒரு பெண் லிகிதர் தேவை.

சம்பளம்பேசித்தீர்மானிக் கப்படும். விரும்புவோர் 0714273035 இலக்கத் துக்கு தொடர்புகொள்ளவும்.

# கம்பஹாவில் எலிக்காய்ச்சல்

கொழும்பு, செப்.14

கம்பஹா மாவட்டத்தில் மீண்டும் எலிக்காய்ச்சல் நோய் மிக வேகமாக பரவி வருகின்றது என்று மேல் மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கம்பஹா, மினுவாங்கொடை, மீரிகம, நீர்கொழும்பு, திவுலுப்பிட்டிய ஆகிய பிரதேசங்களிலேயே எலிக்காய்ச்சல் நோய் பல பேருக்கு தொற்றியிருப்பது தெரிய வந்துள்ளது என்று சுகாதார அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

எலிக்காய்ச்சல் காரணமாக நீர்கொழும்பு மாவட்ட ்வைத்தியசாலையில் நீர்கொழும்பைச் சேர்ந்த 63 வயதுடைய நபரொருவர் கடந்த புதன்கிழமை உயிரிழந்துள்ளார். இந்த நிலையிலேயே மேல் மாகாண சுகாதார அமைச்சு மேற் கண்டவாறு தெரிவித்துள்ளது. (ற)

# அறிவித்தல்

இன்று 14-09-2014 ஞாயிற்றுக்கிழமை யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி முகப்பில் நடைபெறவிருந்த சாத்வீகக் கவனயீர்ப்புப் போராட்டம், எமது சமூக பெரியார்களாலும், நலன்விரும்பிகளாலும் வேண்டப் பட்டதற்கு அமைவாகப் பிற்போடப்பட்டுள்ளது என்பதனைத் தாழ்மையுடன் அறியத்தருகின்றேன்.

தங்கள் உண்மையுள்ள
(52266) இராசநாயகம் ஸ்ரீரங்கன் - ஏற்பாட்டாளர்

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

### விற்பனைக்கு

★ பழைய கனோன் A.C
★ 6அடி நீளம் , 3அடி அகலம் கொண்ட இரும்புக்கதவு
★இனிப்புத் தொழிற்சாலைக்கு உகந்த முழு நீளமுள்ள இரும்பு மேசையும் அரைவாசி இரும்புமேசையும் விற்பனைக் உண்டு.

தொடர்பு: 0771880017 (52247)

### விற்பனைக்கு

RB xxxx Jhon Deere உழவு இயந்திரம் மற்றும் பெட்டி, ரொட்டபிற்றர் கலப்பை விற்பனைக்கு உண்டு

(52258) தொ.பு: 0770799411

### வீடு வாடகைக்கு

சுண்டுக்குளி அச்சக ஒழுங்கையில் மேல் மாடி வீடு உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு:0774397612 (52253)

### வாடகைக்கு

Room வாடகைக்கு உண்டு.
ஸ்ரேசன் றோட் கோண்டாவில்
தொடர்புகளுக்கு:- 077 6634010

### உடனடி வேலை வாய்ப்பு

எமது நிறுவனத்துக்கு பின்வரும் வேலையாட்கள் தேவை

1) கூலியாள்
2) சாரதி
3) விற்பனைப் பிரதிநிதி

தகமை உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(52262) T.P 021 224 0574

### தேவை

வீணை, வயலின், நடனம் ஆகிய வகுப்புக்கள் நடத்துவதற்கு வீடு வாடகைக் குத் தேவை. பகுதியாக இருப்பினும் பரவாயில்லை.யாழ் நகர் அண்டிய பகுதிகளில் விரும்பத் தக்கது.

தொடர்புகளுக்கு: 0771703647 (52248)

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், இராமநாதன் வீதியில் பல்கலைக் கழகத்திற்கு முன்பாக சுற்றுமதிலுடன் அமைந்த ஒன்றரைப்பரப்புக் காணியில் மூன்று அறைகள், இரு வரவேற்பறைகள் , சமயலறை, குளியலறை யுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 077 3042055 /
(52263) 021 222 7484 / 071 573 2289

### வீடுகள் வாடகைக்கு

யாழ்.நகரில் வைத்தியசாலை வீதியில் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக Mother Care Building இற்கு அருகில் வாகன தரிப்பிடம் கொண்ட நல்ல காற்றோட்ட வசதிகளுடன் கூடிய நான்கு வீடுகள் வாடகைக்கு உண்டு. மேலதிக விபரங்களுக்கு.

தொடர்பு: 021 222 8024 / 0770172319

### வீடு காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கில் 1½ பரப்பு காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு (தரகர் தேவையில்லை)

(52260) தொடர்பு: 077 7178279

# எதிர்காலத்தில் பசுமை உலகம் (தனியார்) நிறுவனம் வரைவுள்ளது
## இஞ்சி பயிர்ச்செய்கை

இலங்கையின் முன்னணி நிறுவனமாக இயங்கும் எதிர்காலத்தில் பசுமை உலகம் நிறுவனமாகிய நாங்கள் எமது திட்டங்களில் ஒன்றான விவசாயத்தை ஊக்குவிக்கும் பொருட்டு இஞ்சி பயிர்ச்செய்கையினை அறிமுகப்படுத்தவுள்ளோம். வருமானத்தை மேம்படுத்தும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த விரும்புபவர்கள் எம்மோடு 076 531 0421 எனும் இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளும்படி வேண்டப் படுகின்றீர்கள்.

*இஞ்சி பயிர்ச்செய்கையின் நன்மைகள்:*

* இஞ்சி ஓர் உத்தரவாதத்துடன் கூடிய முதலீடு
* விவசாய ஆராய்ச்சி நிபுணர்களின் ஆலோசனை
* உங்களது நிலத்தில் பயிரிட்டு பராமரிக்க முடியும்
* உவர்நிலம் மற்றும் களிநிலம் போன்றவற்றிலும் பயிரிட முடியும்
* அறுவடை வரை தொடர்ச்சியான பராமரிப்பு, மேற்பார்வை, ஆலோசனைகள் வழங்கப்படும்.
* சந்தையில் இஞ்சிக்கான கேள்வி கூடுதலாக காணப்படுகின்றது
* சிறியளவு முதலீட்டுடன் அதிகளவு இலாபத்தை ஈட்ட முடியும்
* இயற்கை திரவ உரத்தைப் பயன்படுத்த முடியும்
* அறுவடைக் காலம் 8 தொடக்கம் 10 மாதங்கள். இதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்.
* பணத்தை தவணையடிப்படையில் பகுதி பகுதியாகச் செலுத்த முடியும்
* தவணைக் கட்டணத்துக்கு எவ்வித வட்டியும் அறவிடப்படமாட்டாது
* மீளப்பயிரிடப்படும்போது செலவு குறைவாகக் காணப்படும்.

| காணியின் அளவு | பயிரிடப்படும் இஞ்சியின் அளவு | 8 -10 மாத அறுவடைப் பெறுமதி | தற்போதைய சந்தைப் பெறுமதி | முதலீடு |
|---|---|---|---|---|
| 01 பரப்பு | 60kg | 1400kg | 1,400,000.00 | 210,000.00 |
| 02 பரப்பு | 100kg | 2800kg | 2,800,000.00 | 420,000.00 |
| 03 பரப்பு | 150kg | 4200kg | 4,200,000.00 | 630,000.00 |

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது*
திட்ட அமுலாக்கல் பிரிவு
எதிர் காலத்தில் பசுமை உலகம் (தனியார்) நிறுவனம் வரைவுள்ளது.
இல. 133, கண்டி வீதி, சச்சேரி, யாழ்ப்பாணம். (52254)(7.6.3)

# கண்ணீர் அஞ்சலி



சுன்னாகம் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவின் வைத்திய அதிகாரி Dr.பவானி பாஸ்கரன் அவர்களின் அன்புத்தாயார்

## பரமேஸ்வரி பாலசுப்பிரமணியம்

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்

நோயாளர் நலன்புரிச் சங்க உறுப்பினர்கள்
மருத்துவ நிலைய ஊழியர்கள்
சுன்னாகம் ஆரம்ப மருத்துவ நிலையம்

(52255)

# மரண அறிவித்தல்

## திருமதி தர்மலிங்கம் அன்னலெட்சுமி

( ஒக்கட்டுப்பிள்ளை )

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், கரம்பொன்கிழக்கு காளிகோயிலடி ஊர்காவற்றுறையை வதிவிடமாகவும் கொண்ட தருமலிங்கம் அன்னலெட்சுமி 13.09.2014 சனிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லத்தம்பி தருமலிங்கத்தின் அன்பு மனைவியும், தருமலெட்சுமியின் அன்புத்தாயாரும், நடராசாவின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று 14.09.2014 ஞாயிற்றுக் கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக கோட்டைவாசல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகள்
தருமலெட்சுமி

காளிகோயிலடி, கரம்பொன் கிழக்கு.
ஊர்காவற்றுறை. (52265)

# டெங்கிலிருந்து எம்மை பாதுகாப்போம்...

■ மருத்துவர் வி.கமலநாதன்,
பிரதேச வைத்திய அதிகாரி
பிரதேச வைத்தியசாலை ,வரணி.

எதிர்வரும் மாதங்களில் வட கிழக்கு பருவப் பெயர்ச்சி மழை ஆரம்பிக்கவுள்ளமையால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதன் காரணமாக டெங்கு நோயின் தாக்கமும் அதிகரிக்கக்கூடும்.

இதனால் மத்திய சுகாதார அமைச்சு செப்ரெம்பர் 10 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியை நாடு முழுவதும் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. இந்தக் காலப் பகுதியில் டெங்கு நோயைப் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே அதன் நோக்கமாகும்.

இலங்கையின் பல பாகங்களில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்ற நிலையில் அந்த நோய் சம்பந்தமான தகவல்களை அறிந்திருப்பது காலத்தின் தேவையாகும். டெங்கு நோயானது வருமுன் தடுக்கக் கூடியதும், சரியான நேரத்தில் சிகிச்சையளித்து காப்பாற்றக் கூடியதும் ஆகும். டெங்குக் காய்ச்சல் ஒரு வைரஸ் நோயா கும். இது ஏடிஸ் எஜிப்டி என்னும் நுளம்பினால் பரப்பப்படுகின்றது. டெங்கு மனிதரில் இரண்டு விதமாகப் பாதிப்புக்களை ஏற்படுத்தலாம்.

1.சாதாரண டெங்குக் காய்ச்சல்
2. குருதியிழப்பை ஏற்படுத்தக்கூடிய டெங்குக் காய்ச்சல்

டெங்கு வைரசால் தொற்றுக்குள்ளான 10,000 பேரில் 9000 பேர் எவ்வித அறிகுறியுமில்லாமல் காணப்படுவர். 1000 பேரில் மட்டுமே அறிகுறிகள் காணப்படும்.

**சாதாரண டெங்குக்
காய்ச்சலின் அறிகுறிகள்**

1.காய்ச்சல்
2.கடுமையான தலைவலி
3.மூட்டுக்கள் மற்றும் தசைகளில் வலி
4.கண்ணை அசைக்கும் போது கண்ணுக்குப் பின்புறமாக வலி
5.வாந்தி
6.உடல் சோர்வு.


**குருதி இழப்பை ஏற்படுத்தக்கூடிய
டெங்குக் காய்ச்சலின் அறிகுறிகள்**

1.2-7 நாள்கள் தொடர்ச்சியான காய்ச்சல்
2.குருதி வெளியேறும் சந்தர்ப்பங்கள்
* மூக்கிலிருந்து
* முரசிலிருந்து
* வாந்தியுடன் குருதி வெளியேறுதல்

3.தோலின் கீழ் சிவப்பு புள்ளிகள் தோன்றுதல்.
4.மலம் தார் போன்று கறுப்பு நிறமாக வெளியேறல்
5.ஈரல் வீங்குதல்
6.டெங்கு அதிர்ச்சி (Dengue Shock)
* கடுமையான வயிற்று நோ
* அதிகமாக வியர்த்தல்
* கை, கால் பகுதிகள் குளிருதல்

**இந்த நோயினால் கூடுதலாகப்
பாதிக்கப்படக்கூடிய பிரிவினர்**

1.குழந்தைகள்
2.அதிக உடற் பருமன் உடையவர்கள்



3.ஏற்கனவே வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள்
* நீரிழிவு
* உயர் குருதி அமுக்கம்.

**வைத்தியசாலைகளில்
அனுமதிக்கப்பட வேண்டியவர்கள்**

1.குருதிப் பரிசோதனையில் குருதிச் சிறுதட்டின் எண்ணிக்கை 100,000 குக் குறைவாக உள்ளோரும் கடுமையான காய்ச்சலால் பாதிக்கப்பட்டோரும்.
2.காய்ச்சல் தொடங்கி மூன்று நாள்களுக்குப் பின்னரும் ஆபத்தான அறிகுறிகள் காணப்படுதல்(டெங்கு அதிர்ச்சி)
3.இந்த நோயால் கூடுதலாகப் பாதிக்கப்படக் கூடிய பிரிவினர்.
4.ஆளுதவி இல்லாதவர்கள்
5.வைத்தியசாலையிலிருந்து தொலைவில் உள்ளவர்கள்.

**நோய் பரவும்முறை**

இந்த நோயானது நுளம்பினால் பரப்பப்படுகின்றது. இந்த நுளம்பு காலை, மாலை வேளைகளில் மனிதரைக் கடிக்கின்றது. காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட மனிதர் ஒருவர் முதல் மூன்று நாள்களும் தொற்றை ஏற்படுத்தக் கூடியவராக இருப்பார். தொற்று ஏற்பட்ட ஒருவரைக் கடித்த நுளம்பு இரு வாரங்களுக்கு பின்பு தொற்றை ஏற்படுத்தக் கூடிய நிலையை அடையும்.

வைத்தியசாலைகளில் டெங்குக் காய்ச்சலின் அறிகுறிகளை தீர்ப்பதற்கான சிகிச்சையும் உயிராபத்தைத் தடுப்பதற்கான ஆதார சிகிச்சையும் வழங்கப்படுகின்றது.

**செப்ரெம்பர் 10 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை தேசிய டெங்கு ஒழிப்பு வாரமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. அதனையொட்டி இந்தக் கட்டுரை வெளியிடப்படுகிறது**

வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படாத ஒரு டெங்கு நோயாளிக்கான சிகிச்சையின் போது பின்வரும் அம்சங்கள் கவனிக்கப்பட வேண்டும்.

1. நிறைய நீராகாரங்கள் உட்கொள்ளுதல்
சாதாரண நீரை விட செவ்விளநீர், பழச்சாறு, கஞ்சி போன்றவற்றை அருந்துதல் உகந்தது.
2. போதுமான ஓய்வு
காய்ச்சல் தணிந்த பின்னரும் ஓய்வு எடுத்தல் சிறந்தது.
இந்த நிலைமையில் மாணவர்கள் விளையாட்டுக்களில் ஈடுபடுவதைத் தவிர்த்தல் வேண்டும்.
3. காய்ச்சல் உள்ளபோது பரசிற்றமோல் மருந்தை வைத்திய ஆலோசனைப்படி உட்கொள்ள முடியும். பரசிற்றமோல் மாத்திரை வடிவிலும்
(ஒரு மாத்திரை 500 mg) திரவ நிலையிலும் (1 மில்லி லீற்றர் 24mg ஐயும் கொண்டுள்ளது) காய்ச்சல் உள்ள ஒருவர் ஒருவேளை உட்கொள்ளக்கூடிய பரசிற்றமோல் (ஒரு 10-15mg/kg கிலோகிராம் நிறைக்கு 10 தொடக்கம் 15mg மருந்து) குழந்தைகளுக்கு syrap paracetamol ம் வயது வந்தோர்க்கு Paracetamol மாத்திரையும் வழங்கப்படலாம். காய்ச்சல் தொடர்ச்சியாக இருக்குமானால் பரசிற்றமோல் ஆறு மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை சரியான அளவுகளில் வழங்கப்படலாம். காய்ச்சல் நிலைமையின்போது வலிநிவாரணிகளையோ (NSAIDS) ஸ்ரீரொய்ட்ஸ் (Steroids) மருந்துகளையே உட்கொள்ளக் கூடாது.


**டெங்கு நோய் வராமல்
தடுக்கக் கூடிய முறைகள்**

இந்நோயானது நுளம்பால் மட்டும் பரவலடையக் கூடியதால் பின்வரும் வழிமுறைகள் மூலம் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்துதல்
இந்நோயைப் பரப்புகின்ற நுளம்பானது தூய நீரில் வாழுகின்றது. நுளம்புக் குடம்பிகள் விருத்தியாகின்ற இடங்களை தேடியழிப்பதே தற்போது உள்ள மிகவும் செயல்திறனுள்ள மாற்றுவழியாகும்.
3.பொது இடங்களில் நுளம்பு பெருகும் இடங்களையும் நீர் தேங்கி நிற்கும் இடங்களையும் துப்புரவு செய்தல், நுளம்பு பெருக்கத்தைத் தடுப்பதற்குரிய மருந்துகளைத் தெளித்தல், ஒவ்வொரு வீட்டிலும் நுளம்பு பெருகக் கூடிய வெற்றுக் கொள்கலன்கள் அழிக்கப்பட்டு சுத்திகரிப்புப் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.
4.நுளம்புகளை விரட்டுவதற்கு புகையூட்டல் செய்யப்பட வேண்டும்.
5.லாவிவோரஸ் மீன், டிராகன் பூச்சிகள் போன்றவற்றைப் பயன்படுத்தி உயிரியல் முறையில் நுளம்புகளைக் கட்டுப்படுத்தல்.

**நுளம்புக்கடியிலிருந்து
எம்மைப் பாதுகாத்தல்**

நுளம்புக் கடியிலிருந்து தம்மைப் பாதுகாப்பதற்கான தற்பாதுகாப்பு முறைகளை ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டும்.
1.நுளம்பு வலைகளைப் பயன்படுத்துதல்
2.நுளம்புத்திரிகள், நுளம்பை விரட்டும் சாதனங்களைப் பயன்படுத்துதல்
டெங்கு பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துதல் டெங்குக் காய்ச்சல் பற்றிய அடிப்படைக் கருத்துகளையும் பரவுவதைத் தடுக்கின்ற முறைகளையும் சுகாதாரப் பிரிவினர் மக்கள் மத்தியில் எடுத்துரைக்க வேண்டும்.
அத்துடன் குறிப்பிட்ட காலங்களில் டெங்கு அதிகளவில் பரவுவதைத் தடுப்பதற்கு, நுளம்புகளின் தொகையைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை இடைப்பட்ட காலங்களில் (டெங்கு நோய் அதிகம் பரவாத காலங்களில்) மேற்கொள்வது கூடிய பயனைத் தரும்.
இறுதியாக நாம் ஒவ்வொருவரும் டெங்கு நோயைத் தடுப்பதற்குரிய வழிமுறைகளில் பங்கு கொள்வதோடு, உரிய நேரத்தில் தகுந்த சிகிச்சையைப் பெற்று ஏற்படத்தக்க உயிரிழப்பைத் தடுக்க முன்வர வேண்டும்.



# ராதா கிருஷ்ணா
## திருமண சேவை

கொழும்பு, வெள்ளவத்தையில் இயங்கிவந்த எமது திருமணசேவை தென்மராட்சி சாவகச்சேரியிலும் தனது கிளையைத் திறந்துள்ளது.



10ஆம் திகதி முதல் அமிர்தாம்பிகை வித்தியாலயத்திற்கு அண்மையில் எமது புதிய கிளை இயங்கி வருகிறது.

ராதா கிருஷ்ணா திருமண சேவை
A9 வீதி, நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

TP: 011 552 2084,
077 831 2287


## இலங்கை புகையிரத சேவை
## வீடு வாடகைக்கு பெறுவதற்கான கேள்வி மனுப்பத்திரம் (TENDER)

இலங்கை புகையிரத சேவையின் வடபகுதிக்கான புகையிரத சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதால் புகையிரத திணைக்கள உத்தியோகத்தர்கள் தங்குவதற்கான வசதிகளை வழங்குவதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள புகையிரத நிலையங்களுக்கு ½ கி.மீ தூரத்தில் 1000 சதுர அடிக்கு குறையாத நீர், மின்சாரம் மற்றும் மலசலகூட வசதிகளுடன் நான்கு (04) அல்லது அதற்குக் கூடிய அறைகள் கொண்ட வீடுகள் வாடகை ஒப்பந்தத்தில் பெற்றுக்கொள்வதற்கு கேள்வி மனுப்பத்திரம் கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| 01. யாழ்ப்பாண புகையிரத நிலையம் | 06 வீடுகள் |
| 02.நாவற்குழி புகையிரத நிலையம் | 01 வீடு |
| 03. சாவகச்சேரி புகையிரத நிலையம் | 01 வீடு |
| 04. கொடிகாமம் புகையிரத நிலையம் | 01 வீடு |

கேள்விப்பத்திரங்கள் 2014.09.26ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் வந்து ஒப்படைக்கலாம்.

*முகவரி :*

போக்குவரத்து அத்தியட்சகர்
போக்குவரத்து அத்தியட்சகர் காரியாலயம்
புகையிரதத் திணைக்களம்,
அநுராதபுரம்.
போக்குவரத்து அத்தியட்சகர்
அநுராதபுரம்.

(52115) (7.6.3)

### காணி விற்பனைக்கு

கைதடி நுணாவில், சாவகச்சேரியில்
A9 இற்கு அருகில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 695 3725 (சி.16476) (45.6.3)

### வீடு வாடகைக்கு (நிறுவனங்களுக்கு)

யாழ்.Old Park Road இல் அமைந்துள்ள 6 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும்.
(Store, Clinic)
தொடர்பு: 075 854 1571 (52205) (45.6.3)

### விற்பனைக்கு

நல்லின சணல், யமுனா பாரி ஆடுகளும், மைனர் கார், சைக்கிள், 29" சொனி T.V என்பன விற்பனைக்குண்டு. (52205) (45.6.3)
தொடர்பு: 077 918 1018,077 168 5179

### விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 318 8016 (52143) (7.6.3)

### வீடு, காணி விற்பனைக்கு

* மருதனார்மடம், கே.கே.எஸ் வீதியில் இராமநாதன் கல்லூரிக்கு எதிரில் 318/5 ஆம் இலக்கத்தில் 2 பரப்பு 12.5 குழி காணி விற்பனைக்குண்டு.
* சுன்னாகம், கே.கே.எஸ். வீதியில் தில்லையட்டி ஒழுங்கையில் இல.11/5, 7 பரப்பு 3குழி காணி விற்பனைக்குண்டு. புகையிரத நிலையம், கே.கே.எஸ். வீதி மிகவும் அண்மையிலுள்ளது.

(T/16481) (4.6.3) தொடர்பு:076 520 4577

### தேவை

சுத்தப்படுத்தும் திரவம் மற்றும் குடிதண்ணீர் போத்தல்களை விநியோகம் செய்வதற்கு, யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவுப் பிரதேசங்களில் விற்பனை முகவர்கள் மற்றும் விற்பனைப் பிரதிநிதிகள் தேவைப்படுகிறார்கள். (48997)(7.6.3)
தொடர்பு : 077 412 5890, 037 555 9293

### மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தில் தாதி (நேர்ஸ்) உத்தியோகத்தராகப் பணிபுரியும் 1984ஆம் ஆண்டு பிறந்த மணமகனுக்கு படித்த நற்குணமுள்ள மணமகள் தேவை.
(52217) (12.3.6) தொடர்பு: 077 850 0395

### கணி விற்பனைக்கு

சங்கானை மரக்கறிச் சந்தையில் இருந்து தென் கிழக்குப் பக்கமாக 300m தொலைவில் இரண்டு பக்க மதில், 20 தென்னை காய்க்கும் நிலையில் 4½ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.
(52212) (12.3.6) தொடர்பு: 077 444 7905

### வாகனதாரருக்கு ஓர் அரிய வாய்ப்பு

கிளிநொச்சியில் அமைந்துள்ள பிரபல்யமான ஆடைத் தொழிற்சாலையின் பணியாளர் போக்குவரத்திற்காக சிறந்த நிலையில் உள்ள Hight Roof-Dual A.C வான் தேவை.
வார நாள்கள்: கிளிநொச்சி போக்குவரத்து
வார இறுதி நாள்கள்: கொழும்பு, பன்வல, குளியாப்பிட்டிய
(47875) (4.6.3) தொடர்பு: 077 358 6119/077 238 0167


# கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரர்



இருப்பகற்றல் மற்றும்
மலிவு விற்பனையை முன்னிட்டு
ஜெயசாயி இல் விற்பனை செய்யும் அனைத்து
பொருள்களும் குறித்த விலையில் இருந்து
அரைவாசி விலைக்குப் பெற்றுக் கொள்வதுடன்
13, 14, 15 ஆகிய தினங்களில் 3000/=
ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்யும்
அனைத்து வாடிக்கையாளர்களும்
பரிசுப் பொதிகளைப்
பெற்றுக் கொள்ளலாம்.



114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 221 9393
(52206)(7.6.3)


### கடை வாடகைக்கு

கொடிகாமம் நகர் பகுதியில் ஏ9 வீதியில் 51x25 அடி அளவுடைய கட்டடம் அரச, தனியார் நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு : 077 542 5028/077 127 5235 (47269) (4.6.3)

### சிவாச்சாரியாரும் உதவியாளரும் தேவை

300 வருடங்களுக்கு மேலே தொன்மை வாய்ந்ததும், திருகோணமலை நகரத்தின் மத்தியில் அமைந்துள்ளதுமான திருவிஸ்வநாத சிவன் ஆலயத்திற்கு சிவாச்சாரியார் ஒருவரும் அவருக்கு உதவியாகச் செயற்படும் வண்ணம் உதவியாள் ஒருவரும் அவசிய தேவையாக உள்ளதால் ஆலய விதிகளுக்கு அமைவாக சேவையாற்ற வல்ல தகுதி வாய்ந்த சிவாச்சாரியார் ஒருவருக்கும் உதவியாள் ஒருவருக்கும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இருப்பிட வசதி செய்து தரப்படும். கொடுப்பனவுகள் நேரடியாகப் பேசித் தீர்மானிக்கப்படும். விண்ணப்பங்கள் 2014.09.30ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக செயலாளர், ஆலய அறங்காவலர் சபை, திருவிஸ்வநாத சிவன் தேவஸ்தானம், திருகோணமலை என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.
தொ.பே : 026 222 6439 (சி/16203) (7.6.3)


# ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ற்மென்ஸ் பி.எல்.சி.



-Q....
-59-...
-K....
மேல்

வாகனப் புத்தகங்களிற்கு
120 நிமிடங்களில்
உங்கள் கையில் பணம்




தொடர்புகளிற்கு:-
74, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 9997/9998
கோபி - 0774825355
சஜீ - 0757182184
ஜேசு - 0774022755
(சி.16217)


## JAFFNA COLLEGE, VADDUKODDAI ADMISSION - 2015

### FOR GRADE 1, 4, 6, & 10
### மாணவர் அனுமதி - 2015
### தரம் 1, 4, 6, & 10

1. (அ) விண்ணப்பப் படிவங்களை 15.09.2014 முதல் 15.10.2014 வரை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

   (ஆ) எமது விண்ணப்பப் படிவம் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப் படமாட்டா.

   (இ) விண்ணப்பப் படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 31.10.2014 குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் பிண்ணப்பப் படிவங்களை நிராகரிக்கும் உரிமை நிர்வாகத்திற்கு உண்டு.

2. பிழையாக நிரப்பப்பட்டவையும் பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படலாம்.

3. தரம் 1 இற்கான விண்ணப்பப் படிவத்துடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் நிழற்பிரதியும் (Photostat Copy) இணைக்கப்படல் வேண்டும்.

4. விண்ணப்பப்படிவங்கள் ஞாயிற்றுக்கிழமை, விடுமுறை தினங்களும் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

5. ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 1000/=

6. வயதெல்லைகள்:
   (1) தரம் 1 விண்ணப்பதாரி 01.02.2009 இற்கும் 31.01.2010இற்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   (2) தரம் 4 விண்ணப்பதாரி 01.02.2006இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
   (3) தரம் 6 விண்ணப்பதாரி 01.02.2004இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
   (4) தரம் 10 விண்ணப்பதாரி 01.02.2000 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

(சி.15683) (12.3.6)

அதிபர்.

# யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் சிறப்புற நடந்த தொழில் தெரிவு சந்தை






உலக வங்கி உதவியுடனான 21 ஆம் நூற்றாண்டுக்கான உயர்கல்வி வேலைத்திட்டத்தின் (Higher Education for the Twenty First Century - HETC) ஒரு பிரிவான மேம்பட்ட புத்தாக்க மானியங்களின் Quality Innovation Grant - QIG அனுசரணையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விஞ்ஞானபீட பௌதீக விஞ்ஞானக் கற்கை நெறிக்கான நிதியுதவியுடன் பல்கலைக்கழக மாணவர்களுக்கான தொழில் தெரிவு சந்தை Career Fair 2014 கடந்த ஓகஸ்ட் 16 ஆம் திகதி விஞ்ஞான பீடத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு இந்த நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றில் முதற் தடவையாக இடம்பெற்ற இத்தகைய தொழில் தெரிவு கண்காட்சியில் தென்னிலங்கையைச் சேர்ந்த பத்து தொழில் தரு நிறுவனங்களும் பிரிட்டிஷ் கவுன்ஸில் நிறுவனமும் பங்குபற்றின. நிகழ்வின் ஆரம்பத்தில் தொழில் தரு நிறுவனங்கள் தமது நிறுவனங்களைப் பற்றிய அறிக்கைகளைக் காண்பித்தனர். அதன் பின்னர் மாணவர்கள் தொழில்தரு நிறுவனங்களைத் தனித்தனியே சந்தித்து உரையாடும் நிகழ்வும் இடம்பெற்றது. இதன்போது தொழில் வாய்ப்பை எதிர்நோக்கியுள்ள மாணவர்கள் தமது சுயவிபரக்கோவைகளைத் தொழில் தரு நிறுவனங்களுக்கு கையளித்தும் வேலை தேடுவதற்கான நேர்முகத் தேர்வுகளிலும் தொழில் தரு நிறுவனங்களின் அமைப்பு அவற்றின் செயற்பாடுகள், இயங்கு முறைகள் ஆகியவற்றை அறிந்து கொள்ளும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டனர். மாணவர்கள் நேர்முகத் தேர்வுகளில் விடும் தவறுகள், அவர்களின் சுயவிபரக் கோவைகளை மேலும் மேம்பட்டதாக ஆக்கும் வழிமுறைகள், தொழில் தரு நிறுவனங்களில் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்காக எவ்வாறு தம்மைத் தாமே தயார்படுத்திக் கொள்ளலாம். நிறுவனங்களின் எதிர்பார்ப்புக்கள் எவை என்பது போன்ற பின்னூட்டங்களும் (Feed back) அந்த நிறுவனப் பிரதிநிதிகளால் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு விஞ்ஞான பீடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் இந்த நிகழ்வில் பெருமளவு கலை, முகாமைத்துவ மாணவர்களும், வவுனியா வளாகத்தைச் சேர்ந்த மாணவர்களும் கலந்து கொண்டனர். தொழில் தருநர்களை மிகவும் சுமுகமான ஒரு சூழ்நிலையில் தாம் சந்திக்கக் கூடியதாக இருந்ததாக இதில் கலந்து கொண்ட மாணவர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் உடனடி பெறுபேறாகப் பல மாணவர்கள் தொழில்தரு நிறுவனங்களால் நேர்முகத் தேர்வுகளுக்கு உடனடியாக அழைக்கப்பட்டுள்ளனர் என்று அதன் இணைப்பாளரும் விஞ்ஞான பீட சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி க.தபோதரன் தெரிவித்தார்.

இதுபோன்ற நிகழ்வுகள் எதிர்காலத்திலும் நடத்தப்படவேண்டும் என்று மாணவர்களும், தொழில்தரு நிறுவனப் பிரதிநிதிகளும் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

## 3 தொழில் முயற்சியாளருக்கு தேசிய சாதனையாளர் விருது

யாழ்ப்பாணம்.செப்.14

இலங்கை தேசிய கைத்தொழில் சம்மேளனத்தினால் வருடாந்தம் வழங்கப்படும் சாதனையாளர் விருது யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று தொழில் முயற்சியாளர்களுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது.

விசேட மாவட்ட வகையின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட தொழில் முயற்சியாளர்களுக்கான சாதனையாளர் விருது கடந்த வாரம் கொழும்பில் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

ஜனா கட்டட பொறியியல் நிர்மாண நிறுவனம், வரையறுக்கப்பட்ட ரூலின்ஸ் தனியார் நிறுவனம், வரையறுக்கப்பட்ட லூமன் என்ரபிறைசஸ் தனியார் நிறுவனம் ஆகிய மூன்று தொழில் முயற்சியாளர்களுக்குமே இந்த விருது கிடைக்கப்பெற்றுள்ளது.

ஒவ்வொரு வருடமும் அகில இலங்கை ரீதியாக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிபுணத்துவமிக்க மதிப்பீட்டாளர் குழுவால் விருதுகளுக்கான வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர். தொழில் முயற்சியின் வகை, நிர்வாக கட்டமைப்பு, வருடாந்த புரள்வு வீதம், தரமுகாமைத்துவம், வினைத்திறன், தொழிலாளர் நலன்கள், விரய முகாமைத்துவம், சுற்றாடல் இசைவாக்கம் போன்ற பல்வேறு காரணிகள் கவனத்திற்கொள்ளப்படுவதுடன் பல்வேறு மதிப்பீட்டு படிமுறைகளுடாக வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர். யாழ் மாவட்டத்தில் இந்த வருடமே அதிகளவான வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-14)

## சர்வதேச சந்தையில் எம்.டியின் தயாரிப்புகள்

பிரித்தானியாவின் ரெஸ்கோ சுப்பர் மார்க்கெட் தொடருடன் உடன்படிக்கையை ஏற்படுத்தியுள்ளதைத் தொடர்ந்து பிரித்தானியாவிலும் இலங்கையின் எம்.டி தயாரிப்புகளை விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைவாக எம்.டி தயாரிப்புகளாக ஜாம் வகைகள், சோஸ் வகைகள், பழரசங்கள் போன்றவற்றை பிரித்தானியாவின் ரெஸ்கோ சுப்பர் மார்க்கெட்களிலிருந்து வாடிக்கையாளர்கள் பெற்றுக் கொள்ள முடியும். (த)




# வாடிக்கையாளர்கள் எண்ணிக்கையில் துரித வளர்ச்சி கண்டுள்ளது எயார்ரெல்



உலகளாவிய ரீதியில் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கையில் துரித கதியில் இடத்தைப் பிடித்துள்ள பார்த்தி எயார்ரெல் லங்கா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், முகாமைத்துவப் பணிப்பாளருமான சுரேஷ் குணவர்தனவுடன் இடம்பெற்ற நேர்காணல்:-

**கேள்வி:-** பார்த்தி எயார்ரெல் பற்றிக் கூறமுடியுமா?

**பதில்:-** பார்த்தி எயார்ரெல் நிறுவனம் ஆசிய, ஆபிரிக்க நாடுகள் உட்பட 20 நாடுகளில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உலகளாவிய ஒன்றிணைந்த பிரபல தொலைத்தொடர்பு ஸ்தாபனமாகும். இந்தியாவின் புதுடில்லியில் தலைமை அலுவலகத்தைக் கொண்டுள்ள இந்த நிறுவனம், வாடிக்கையாளர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் உலகளாவிய நான்கு கைத்தொலைபேசி சேவைகளை வழங்கும் முதன்மை நிறுவனங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது.

**கே:-** இலங்கையில் பார்த்தி எயார்ரெலின் வகிபாகம் என்ன?

ப:- இலங்கையில் 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12ஆம் திகதி அதன் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்தது. அடுத்த ஜனவரி மாதத்தில் ஆறாவது அகவையில் கால் பதிக்கவுள்ளது. இலங்கையில் ஒரு மில்லியன் வாடிக்கையாளர்கள் என்ற இலக்கையடைந்த துரித நடவடிக்கை ஸ்தாபனம் என்ற புகழையும் பெற்றது. மூன்றாண்டு காலப் பகுதியில் இலங்கையின் கேந்திர நிலையங்களில் கால்பதிக்கக்கூடிய வகையில் நாடெங்கிலும் பரந்துள்ள வலைப்பின்னலைக் கொண்டுள்ள எயார்ரெல் நிறுவனமானது. இலங்கையில் மிக வேகமாக விஸ்தீரணமடையும் வலைப்பின்னலாக மாறியுள்ளது. அத்துடன், இது இலங்கையில் முதலீட்டுச் சபையில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனமாகும்.

**கே:-** அண்மையில் இலங்கையின் LMD சஞ்சிகையால் 50 தலைசிறந்த நிறுவனங்களுள் ஒன்றாக எயார்ரெல் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக சில குறிப்புகள் தரமுடியுமா?

ப:- பார்த்தி எயார்ரெல் லங்கா நிறுவனம் 2009ஆம் ஆண்டில் ஒரு மில்லியன் வாடிக்கையாளர்கள் என்ற கணிசமான தொகையோடு தொலைத்தொடர்புத் துறையில் பிரவேசித்தது. இந்தச் சாதனையைப் புரிந்த துரிதமான தொலைத்தொடர்பு நிறுவனம் இதுவாகும். இதன் தொடர்ச்சியான செயற்பாடுகள் காரணமாக வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை இன்று 1.7 மில்லியனையும் தாண்டி நிற்கின்றது. இதன் காரணமாக ஸினிம் சஞ்சிகையின் மிகவும் கௌரவத்துக்குரிய நிறுவனங்களை உள்ளடக்கிய பட்டியலில் விண்ணப்பித்த முதல் ஆண்டிலேயே அதிசிறந்த 50 நிறுவனங்களுள் ஒன்றாக இடம்பிடித்துள்ளது. நிறுவனம் மேற்கொண்ட ஆறு வருடகால செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்டே இச்சிறப்பை வென்றுள்ளது.

**கே:-** இலங்கையில் 'எயார்ரெல்' கையடக்கத் தொலைபேசி சந்தையில் தாமதமாகக் கால்பதித்தது. இது விற்பனையில் ஏதேனும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதா?

ப:- இல்லை. இலங்கையில் பார்த்தி எயார்ரெல் கால்பதித்த காலந்தொட்டு நாட்டின் தொழில்துறை வரலாற்றில் கௌரவம் மிக்க கூட்டிணைப்பு நிறுவனம் என்ற பெயரைப் பெற்றுக் கொண்டுள்ளது. பெறுமானங்கள் மற்றும் வாக்குறுதிகள் என்பவற்றை ஈடுசெய்வதோடு போட்டி அடிப்படையிலானதும் சவால்மிக்கதுமான எதிர்காலத்துக்கெனத் தன்னைத் தயார்செய்து வருகிறது.

இதன் காரணமாக இலங்கையில் தொலைத் தொடர்பு சந்தையில் எம்மால் துரித வளர்ச்சியடைய முடிந்துள்ளது.

**கே:-** போருக்குப் பின் வடக்கு, கிழக்குக்கான உங்கள் பங்களிப்பைப் பற்றிக் கூறமுடியுமா?

ப:- இலங்கையில் பொறுப்புவாய்ந்த நிறுவனம் என்ற வகையில் போருக்கு முன்பும், பின்பும் வடக்கு, கிழக்கில் எமது சேவையை வழங்கியுள்ளோம்.

**கே:-** வடக்கில் உங்கள் சேவை எவ்வாறு உள்ளது?

ப:- யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் எங்கள் கிளை நிறுவனம் உள்ளது. மேலும் எமது வாடிக்கையாளர்களுக்குப் பல சேவைகளை வழங்கும் நோக்கில் ஸ்ரான்லி வீதியில் கிளையொன்றை விரைவில் திறக்கவுள்ளோம். யாழ்.மாவட்டத்தில் 200இற்கும் மேற்பட்ட கடைகளில் விற்பனை நிலையங்கள் உள்ளன.

**கே:-** எயார்ரெல் நிறுவனத்துக்கு விருதுகள் கிடைத்துள்ளனவா?

ப:- 2012ஆம் ஆண்டில் HRM விருது வழங்கும் நிகழ்ச்சியில் வெள்ளி விருதைப் பெற்றதற்கு நிறுவனத்தின் உலகளாவிய மனிதவள வழிமுறைகளும் காரணமாக இருந்ததையிட்டு எமது நிறுவனத்தின் சார்பாகப் பெருமையடைகிறோம். மேலும் 2013ஆம் ஆண்டு SLIM நீல்சன் விருது வழங்கும் நிகழ்ச்சியில் மூன்று வேட்புமனுக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதன் மூலம் நிறுவனத்தின் ஜனரஞ்சகத்தன்மை உறுதிசெய்யப்பட்டது.

பங்காளிகளின் கௌரவத்தைப் பெறுவது மனச்சாட்சியின் அடிப்படையிலேயே பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

**கே:-** இந்தியா மிகப்பெரிய நாடு. இலங்கை ஒரு சிறிய நாடு. இலங்கையின் எயார்ரெல் சந்தையின் ஏற்றத்தாழ்வுகள் எவ்வாறு உள்ளன?

ப:- இந்தியா மிகப் பெரிய நாடு. 120 கோடி மக்கள் சனத்தொகையைக் கொண்ட நாடு. இலங்கையின் சனத்தொகை 2 கோடி. இந்தியாவின் சனத்தொகைக்கு ஏற்றவாறு - இந்தியாவின் தொலைத்தொடர்பு சந்தைக்கு ஏற்றவாறு அந்நாட்டின் வியாபாரமும், இலங்கையின் தொலைத்தொடர்பு சந்தைக்கு ஏற்றவாறு இலங்கையின் வியாபாரமும் உள்ளன. இதில் எதுவிதமான ஏற்றத்தாழ்வுகளும் இல்லை.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கனவுகளைக் கொண்டுள்ள மக்கள் அதை அடையாமல் ஓய்ந்ததில்லை

ஸ்கொட்லாந்து மக்களின் 300 வருடக் காத்திருப்புக்கு விடை கிடைப்பதற்கு இன்னும் நான்கு நாள்கள் மட்டுமே இருக்கின்றன. அற்புதமான அந்தத் தருணத்துக்காக உலகம் முழுவதும் விடுதலை விரும்பிகள் காத்துக்கிடக்கிறார்கள். கிட்டத்தட்ட தமிழர்கள் பிரிட்டிஷாரிடம் அடிமைப்பட்டதுபோலவே ஸ்கொட்லாந்து மக்களும் அவர்களது விருப்பங்களுக்கு மாறாக கிரேட் பிரிட்டன் பேரரசுக்குள்ளும் பின்னர் அயர்லாந்தையும் உள்ளடக்கிய ஐக்கிய இராச்சியத்திற்குள்ளும் (யுனைட்டட் கிங்டம்) பிணைக்கப்பட்டார்கள். அதிலிருந்து விடுபடுவதற்கான போராட்டங்கள் - வன்முறை நிறைந்த போராட்டங்கள் உட்பட - மிக நீண்ட காலமாக நடந்து வந்திருக்கின்றன. இப்போது ஸ்கொட்லாந்து மக்கள் ஐக்கிய இராச்சியத்திலிருந்து பிரிந்து தனித்துச் செல்வதா இல்லையா என்று எதிர்வரும் வியாழக்கிழமை முடிவு செய்யப் போகிறார்கள்.

அன்றைய தினத்தில் ஸ்கொட்லாந்து தனிநாடாக வேண்டுமா என்கிற கேள்விக்கு ஆம் அல்லது இல்லை என்கிற பதிலை மட்டும் மக்கள் வழங்கினால்போதும். ஒரேயொரு வாக்குப் பெரும்பான்மை இருந்தால்கூட ஸ்கொட்லாந்து தனிநாடாகப் பிரிந்து சென்றுவிடும். அனேகமாக அதுதான் நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

300 வருடங்களாகத் தனிநாட்டுக்கான கனவைத் தாங்கி நின்ற மக்களுக்கு அதன் முடிவு இன்னும் சில தினங்களுக்குள் தெரிந்துவிடப்போகிறது. எத்தனை இடர்கள் வந்தபோதும் எடுத்துக்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வி அடைந்தபோதும் தமது கனவை மட்டும் மறந்துவிடாமல் சந்ததிகளிடம் கையளித்து வந்தவர்கள் இப்போது கனவை நனவாக்கிவிடும் நுனியில் நின்றுகொண்டிருக்கிறார்கள். உன்னதமான கனவுகள் எவையும் சோடைபோனதில்லை என்பதற்கு ஸ்கொட்லாந்து மிகச் சிறந்த உதாரணம். எத்தனை துயரும் தோல்விகளும் வந்தபோதும் கனவைச் சுமந்து செல்வதற்கு மட்டும் மறுத்துவிடக்கூடாது என்பது ஸ்கொட்லாந்து நமக்குச் சொல்லித் தரும் பாடம்.

வரலாற்றின் மத்திய காலத்தில் ஸ்கொட்லாந்துக்கான வேர் ஊன்றப்பட்டு தேசமானது. 14ஆம் நூற்றாண்டில், இங்கிலாந்து அரசர் ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்காக பல சண்டைகளை ஸ்கொட்லாந்து அரசர்கள் நிகழ்த்தியிருக்கிறார்கள். 1707ஆம் ஆண்டில் ஸ்கொட்லாந்தையும் இங்கிலாந்தையும் இணைத்து பிரிட்டிஷ் பேரரசை நிறுவினார்கள். 1801இல் அயர்லாந்தையும் இணைத்துக்கொண்டு ஐக்கிய இராச்சியமாக்கினார்கள். அதிலிருந்து முதலில் அயர்லாந்து பிரிந்து சென்று தனி நாடானது. இப்போது ஸ்கொட்லாந்தும் பிரிந்து செல்லும் சூழல் ஏற்பட்டுள்ளது.

ஸ்கொட்லாந்தில் 40 லட்சம் மக்கள் வசிக்கிறார்கள். அவர்களில் 16 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் வாக்களிப்பதற்கான தகுதியைப் பெற்றிருக்கிறார்கள். அங்கு தற்போது ஆட்சியில் இருக்கும் ஸ்கொட்லாந்து தேசியக் கட்சி, 2007இல் வெளியிட்ட தனது தேர்தல் அறிக்கையில் 2010ஆம் ஆண்டில் ஸ்கொட்லாந்து சுதந்திர தனி நாட்டுக்கான வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று அறிவித்தது. அதன் விளைவாக அது நாடாளுமன்றத்தில் அதிக ஆசனங்களைக் கொண்ட தனிக் கட்சியாக வந்தது. சிறுபான்மை ஆட்சியை அமைத்தது. சொன்னபடி 2010ஆம் ஆண்டில் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பை நடத்த முடியாவிட்டாலும் ஸ்கொட்லாந்தின் எதிர்காலம் என்ற பெயரில் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு தொடர்பான பிரேரணையின் வரைவை வெளியிட்டது. பின்னர் இங்கிலாந்துடனான தொடர் நடவடிக்கைகளின் அடிப்படையில் வாக்கெடுப்புக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டன. ஐக்கிய இராச்சியம் என்ற பெயரில் இன்று தனித்திருக்கும் இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து பிரிந்து செல்வதை விரும்பவில்லை. பிரதமர் டேவிட் கெமரூனும் முக்கிய அரசியல்வாதிகளும் பிரிந்து செல்வதை எதிர்த்து பரப்புரை செய்கிறார்கள். ஆனால் ஜனநாயக வழியில் ஸ்கொட்லாந்து மக்களின் முடிவை ஏற்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். வெளியாகிவரும் கருத்துக்கணிப்புகள் ஸ்கொட்லாந்து சுதந்திரத் தனி நாடு ஆகிவிடும் என்றே கட்டியங்கூறுகின்றன. அப்படி நடந்தால் இரத்தம் இன்றி வன்முறையின்றி ஸ்கொட்லாந்து என்ற புதிய நாடு பிறக்கும்.

காத்திருப்பு முக்கியமானது; கனவுகளை உடைய மக்கள் அதனை அடையாமல் விட்டதில்லை என்கிற பாடம்தான் விடுதலை விரும்பும் அனைத்து மக்களுக்கும் பிறக்கும் புதிய ஸ்கொட்லாந்து சொல்லித் தரும் பாடம்.

# காழ்ப்புணர்ச்சியை விடுவோம் தமிழர் விடிவுக்கு ஒன்றுபடுவோம்

## அரசின் பசப்பு வார்த்தைகளை நம்பி, நம்பி ஏமாறலாமா...?

கந்தவனம் கோணேஸ்வரன்

ஓர் அரசுக்கு இருக்கவேண்டிய மிகச் சிறந்த பண்பு என்னவென்றால், நாட்டின் குடிமக்களைக் குறைகள் எதுவுமின்றிப் பேணுவதுதான். அரசு வகுக்கும் கொள்கைத் திட்டங்கள், செயற்பாடுகள் என்பவை இந்த இலக்கை நோக்கியதாகத்தான் அமைய வேண்டும். ஆனால், இலங்கை அரசிடம் இந்தப் பண்பு இருப்பதாகத் தெரியவில்லை. சிங்கள மக்களாயினும் சரி, தமிழ் மக்களாயினும் சரி நடுநிலையில் நின்று சிந்திப்போரால் இந்த உண்மையைப் புரிந்துகொள்ள முடியும்.

நாடு சுதந்திரமடைந்த காலந்தொட்டே இலங்கை அரசு இனவாதத்தை மூலதனமாகப் பயன்படுத்தித்தான் தனது ஆட்சியைப் பாதுகாத்து வந்திருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான ஆட்சியாயிருப்பினும், சுதந்திரக்கட்சியின் தலைமையிலான ஆட்சியாயிருப்பினும் இந்த நடைமுறை பாதுகாக்கப்பட்டே வருகிறது. இதனால்தான் அமைதியான - ஆரோக்கியமான இலங்கையை வெறுமனே கோஷங்கள் மூலமும் விளம்பரங்கள் மூலமும் மட்டுமே கற்பனை பண்ணிப் பார்க்கவேண்டியிருக்கிறது.

1956 தொடக்கம் இன்றுவரை இலங்கையின் ஆட்சிபீடத்துக்கு வந்த அனைத்துத் தரப்பினரும் இனவாதத்தையே தேர்தல் பரப்புரையின்போது முன்னிலைப்படுத்தி வந்திருக்கிறார்கள். சிங்களமொழியை ஆட்சிபீடம் ஏற்றுகின்றோம் என்றார்கள். பௌத்த மதத்தை உயர்நிலையில் வைத்துப் பாதுகாக்கின்றோம் என்றார்கள். இப்படி இனவாதம் பேசியே ஆட்சியைப் பிடித்தார்கள். இத்தகைய மோசமான பரப்புரைகளாலும் அவற்றின் பாதிப்புகளாலும் ஏற்பட்ட துயரங்களால் தமிழர்கள் வெகுண்டெழுந்தபோது அவர்களை நாட்டின் விரோதிகளாகக் காட்டி ஆட்சியைப் பிடிக்கும் புதிய உத்திகளையும் வகுத்துக்கொண்டார்கள். சிங்கள மக்கள் சற்றே கண்ணை மூடினாற்கூட தமிழர்கள் இலங்கை முழுவதையும் கபளீகரம் செய்துவிடுவார்கள் என்று சாதாரண சிங்கள மக்களை நம்பவைத்து அரசியல் செய்தும் வருகிறார்கள்.

இதுதான் இன்றும் இலங்கையில் இடம்பெற்று வருகிறது. அரசு எவ்வளவுதான் அலங்காரமாக வாய்ப்பந்தல் போட்டாலும் உண்மை அதுவாகத்தான் இருக்கிறது. இந்த அரசுடன் போராடவேண்டிய நிர்ப்பந்தத்தில்தான் இலங்கைத் தமிழர்கள் இருக்கிறார்கள். போராடாவிட்டால் தாங்கள் நிச்சயம் அழிக்கப்பட்டுவிடுவோம் என அவர்கள் அஞ்சுகிறார்கள். தங்கள் தாயகப்பூமி சிங்களக் குடியேற்றங்கள்மூலம் சிதைத்தழிக்கப்பட்டுவிடுமென அஞ்சுகின்றனர். வடக்கு, கிழக்கில் இடம்பெற்றுவரும் சிங்களக் குடியேற்றங்களும் காணி அபகரிப்புகளும் அவர்களை அவ்வாறுதான் நம்பவைக்கின்றன.

வடக்கு மாகாணசபைக்கு 5,831 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டதாகக் காட்டிவிட்டு, 1,876 மில்லியனை மாத்திரமே அனுமதிக்கின்ற கேவலமான அரசின் போக்கும், மீதி 3,955 மில்லியன்ரூபா நிதியைத் தன்மடியிலேயே வைத்துக்கொண்டு ஒதுக்கப்பட்ட பணம் செலவழிக்கப்படாமல் திரும்பி வருகிறதே என்று பொய்கூறும் அமைச்சர்களின் நடிப்பும் தமிழர்களுக்கு அரசுமேலிருக்கும் அவநம்பிக்கையை மேலும் அதிகரிக்க வைக்கின்றது. இத்தகைய நியாயமான அச்சங்களையும் அவநம்பிக்கைகளையும் போக்கித் தமிழர்களை அரவணைத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. ஆனால், அதற்கான அக்கறை எவையும் அரசிடம் இருப்பதாகத் தெரியவில்லை. மாறாகச் சிறுபான்மை மக்களை மேலும் ஒடுக்குகின்ற மோசமான செயற்பாடுகள்தான் பல்வேறு உபாயங்களுடன் இடம்பெற்று வருகின்றன.

> சிங்களமொழியை ஆட்சிபீடம் ஏற்றுகின்றோம் என்றார்கள். பௌத்த மதத்தை உயர்நிலையில் வைத்துப் பாதுகாக்கின்றோம் என்றார்கள். இப்படி இனவாதம் பேசியே ஆட்சியைப் பிடித்தார்கள்.

அரசியல் தலைவர்களுக்கு இருக்கவேண்டிய சிறந்த பண்பைத்தான் தந்தை செல்வா தமிழர்கள் மத்தியில் விதைத்தார். போராட்டப் பாதையிலிருந்து விலகிச் செல்பவர்களைத் தமிழர்கள் ஒருபோதும் தங்களவர்களாக மதிப்பதில்லை. அவர்கள் ஆளுநரின் பதவிக் காலத்தை நீடிக்கவைக்கும் அதிகாரத்தைக் கொண்டிருந்தாலும் சரி, காணி, பொலிஸ் அதிகாரங்களை வடக்கு மாகாணசபைக்கு மீட்டுத்தரவல்ல வல்லமையைக் கொண்டிருந்தாலும் சரி, கிழக்கில் தமிழ் மக்கள் தன்னால் மாத்திரமே பாதுகாக்கப்பட்டு வருகிறார்கள் என்ற பெருமையைப் பேசிக்கொண்டிருப்பவராக இருந்தாலும் சரி மக்கள் இவர்களை ஒரு போதும் கண்டுகொள்வதில்லை. ஏனெனில், இவர்கள் பேசுவதில் உண்மையோ, நியாயமோ கிஞ்சித்தும் இருப்பதில்லை என்பது மக்களுக்கு நன்றாகத் தெரியும். தங்கள் வசதிவாய்ப்புகளைப் பாதுகாத்துக்கொள்வதற்காகவே இவர்கள் போராடுகிறார்கள் என்பதும் அவர்களுக்குப் புரியும்.

இணக்க அரசியல் செய்கின்ற தமிழ் அமைச்சர்களாலும் தமிழ்க் கனவான்களாலும் தமிழ் மக்களுக்கு விளைந்த நன்மை எதுவுமில்லை. முள்ளிவாய்க்கால் அவலம் நிகழ்ந்துகொண்டிருக்கும்போது அரசின் கொடூரச்செயலுக்கு நியாயம்கூறிக்கொண்டிருந்தவர்கள் இவர்கள்.

இலங்கை அரசின் நியாயமற்ற நடவடிக்கைகளால்தான் தமிழ் மக்கள் சர்வதேச உதவிகளை நாடவேண்டிய தேவைக்குத் தள்ளப்பட்டார்கள். கறுப்பு ஜூலையை அரசு நிகழ்த்தும்வரை இலங்கை சுதந்திரமடைந்து முப்பத்தைந்து ஆண்டுகளாகத் தமிழர்கள் வெறுமனே உள்நாட்டுப் பொறிமுறையே போதுமென்றுதான் நம்பியிருந்தார்கள். அந்த நம்பிக்கை பயனற்றது என்பதை காலம் நிரூபித்தது. ஆயுதமேந்திய இளைஞர்களின்பால் தமிழர்களின் சிந்தனையைச் சாயவைத்தது. பிறந்த நாட்டிலேயே வாழ முடியாத நிலையில் தமது உயிரைப் பாதுகாத்துக்கொள்ள இந்தியாவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் தமிழர்கள் ஏதிலிகளாகச் சென்றார்கள். இப்போது அமைச்சர்களாக இருந்துகொண்டு அறிவுரை சொல்பவர்கள்கூட அரச அட்டூழியங்களுக்கு முகங்கொடுக்க முடியாமல் பிறநாடுகளில் தஞ்சம் புகுந்து திரும்பி வந்தவர்கள்தாம்; ஆயுதப் பயிற்சியைப் பெற்று அரசை அடித்து நொருக்குகிறேனா இல்லையா பார் எனக் களமாடியவர்கள்தாம்.

தமிழர்கள் பிற நாடுகளில் தஞ்சம் புகுந்தபோது இலங்கை ஆட்சியாளர்கள் மகிழ்ந்தார்களே தவிர, தன்னாட்டுக் குடிமக்கள் ஏதிலிகளாக அலைவது பற்றிச் சற்றேனும் வெட்கப்படவோ, வேதனைப்படவோ இல்லை. பிற நாடுகளில் மக்களைத் தஞ்சம் புகவைப்பது தாய் நாட்டுக்கு அவமானம் என்பதை அரசு உணர்ந்து, பொருத்தமான செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தால் இன்று தமிழர்கள் பிறநாட்டு அரசுடன் இணைந்து ஆட்சியைக் கவிழ்க்க முனைகிறார்கள் என்கின்ற வீண் பரப்புரைகளோ, வேண்டாத அச்சங்களோ அரசுக்குத் தோன்றியிரா. தமிழர்களால் ஏற்றுக்கொள்ளத் தக்க ஒரு தீர்வை அரசு ஏற்படுத்தியிருந்தால் பிரச்சினை என்றோ தீர்ந்திருக்கும்; இலங்கை மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ்ந்திருப்பார்கள்.

போராடுகின்ற தமிழர்கள் தங்களுக்குச் சாத்தியமான அத்தனை உபாயங்களையும் நடைமுறைப்படுத்த முயல்வதில் எவரும் தவறு காணமுடியாது. இலங்கை அரசால் தமிழர்களின் உணர்வலைகளைப் புரிந்துகொள்ள முடிந்திருந்தால் எந்தப் பிரச்சினையும் வெளிநாடு சென்றிருக்காது. சரியான ஒரு தீர்வை அரசு நடைமுறைப்படுத்தியிருந்தால் எந்த நாடும் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிட வாய்ப்பு ஏற்பட்டிருக்காது. அரசின்மேல் நம்பிக்கை உள்ளவர்களும், இணக்க நடவடிக்கைகள்மூலம் அரசியல் வெற்றிகளைப் பெறலாமெனக் கருதுபவர்களும் அரசுக்குப் புத்திசொல்லி அதனை வழிபடுத்த முயல்வதுதான் தர்மம். அதைவிடுத்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐ.நாவுக்குப் போகிறது; அமெரிக்காவிடம் முறையிடுகிறது என்று புலம்புவதில் எந்த இலாபமும் இல்லை.

இந்தியா சென்று வந்ததால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத்தான் பாதகம் என்று நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்திருக்கிறார். இலங்கை அரசுக்கு முட்டுக்கொடுத்து வரும் நாணயக்காரவால் இன்றுவரை தமிழர்களுக்குச் சாதகமான ஒரு நடவடிக்கையேனும் எடுக்கமுடிந்ததா என்பதற்கு அவர்தான் பதில் கூறவேண்டும். கடந்த திங்களன்று ஆரம்பமாகியுள்ள ஜெனீவா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் உலக நாடுகளைச் சமாளிக்கும் பொறி முறையை இலங்கை கைக்கொள்ளுமானால், அது இலங்கைக்கே பாதகமாக முடியும் என்று அரசிடம் சொல்வதற்கு ஏன் தன்னால் முடிவதில்லை என்பதை அவர் சிந்திக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவுக்கு சென்றுவந்தமை யார் என்ன சொன்னாலும் இலங்கை அரசுக்கு உள்ளூர அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதுதான் உண்மை. இதன் தாக்கங்கள் பல்வேறு வடிவங்களில் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன.

தமிழர்கள் அரசினதோ அமைச்சர்களினதோ பசப்பு வார்த்தைகளை நம்பமுடியாது. தமிழர்கள் தொடர்ந்தும் போராடியேயாகவேண்டும். ஜெனிவாக் கூட்டத் தொடரால் ஏற்படுகின்ற நெருக்கடி, அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் கண்டனங்கள், புலம்பெயர் தமிழர்களின் எழுச்சி, இந்திய அரசின் மனமாற்றம் என்பவற்றுக்கும் அப்பால் அவர்கள் இலங்கையில் தொடர்ந்தும் போராடவேண்டும். வடக்கு, கிழக்கு மாகாண அரசின் முன்னாள் முதல்வர் வரதராஜப்பெருமாளின் அனுபவங்களையும் ஆற்றல்களையும் இணைத்துக்கொண்டு போராடுவதற்கு என்ன தடையிருக்கிறது என்பதைக் கண்டறிந்து அதனை நிவர்த்தி செய்ய வேண்டும்.

போராட்ட உணர்வுள்ள வலியசக்திகளை அரசியல் காழ்ப்புணர்வுகள் காரணமாகப் புறத்தே வைத்திருப்பது நல்லதல்ல. அவர்களையும் ஒன்றுதிரட்டிப் பயன்படுத்துவதில்தான் தமிழர்களின் விடிவு தங்கியிருக்கிறது. இதற்குத் தேவையானது பொது நலச்சிந்தனையுடனான மனப் பக்குவமே. முயன்றால் முடியாதது எதுவுமில்லை.

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 184

# தற்கொலை அற்ற வாழ்வை நோக்கி.....

தூக்கில் தொங்கிய நிலையில் யுவதியின் சடலம் மீட்பு, பல்கலைக்கழக மாணவன் தற்கொலை.... போன்ற செய்திகள் அண்மைக் காலமாக அதிகரித்து வருவதை எம்மில் பெரும்பாலோர் அறிவர். உலகில் சராசரியாக 40 செக்கன்களுக்கு ஒரு தற்கொலையும், 3 செக்கன்களுக்கு ஒரு தற்கொலை முயற்சியும் இடம்பெறுகின்றன. இலங்கையில் வருடாவருடம் 30,000 செக்கன்களுக்கு ஒரு தற்கொலை இடம்பெறுவதாக கூறப்படுகிறது. தற்கொலை வீதம் கூடிய நாடுகளில் இலங்கையும் ஒன்று. உலக சுகாதார நிறுவனத்தினுடைய அறிக்கையின் படி உலகிலுள்ள 127 நாடுகளில் இலங்கை தற்கொலை செய்து கொள்பவர்கள் எண்ணிக்கையில் 4ஆவது இடத்தில் உள்ளது. இலங்கையில் சராசரியாக நாளொன்றுக்கு 50 தற்கொலைகள் இடம்பெறுவதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. போரின் பின்னரான காலப்பகுதியில் எமது மாவட்டத்தில் தற்கொலை மரணங்கள் அதிகரித்து வருகின்றன.

தற்கொலை என்பது வாழ்ந்தது போதும் என்ற எண்ணமே அன்றி இறப்பதற்கான விருப்பம் அல்ல" என்பது ஊடவியலாளர்களின் கருத்து. தாங்கள் வாழ்வதை விட இறப்பது மேலானது என்ற எண்ணத்தில் திட்டமிட்டு தமது உயிரைத் தாமே அழித்துக் கொள்கின்றனர். தமது வாழ்க்கையுடன் தொடர்புபட்ட மிக முக்கியமானவர்களுக்கு தமது நிறைவேற்றப்படாத ஆசைகளையும், உள்ளத்தின் தேவைகளையும் தெரியப்படுத்துவதற்காக எடுக்கும் தவறான முடிவே தற்கொலையாகும். இதனால் இவர்களைச் சார்ந்தவர்களுக்கும், உறவினர்களுக்கும் தாங்கமுடியாத வேதனையைக் கொடுக்கின்றனர். தற்கொலையில் ஈடுபடுபவரில் சிலர் ஒரு கண நேரத்தில் இவ்வாறான முட்டாள்தனமான முடிவை எடுத்துவிட்டு, இறுதியில் தாம் காப்பாற்றப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் வைத்திய சேவைகளை நாடுகின்றபோதும் சிகிச்சைபயனளிக்காத நிலையில் இறக்கின்றனர்.

**தற்கொலைக்கான காரணங்கள்**

எதுவித உதவியுமற்ற நிலையில், முற்றுமுழுதாகநம்பிக்கை இழந்த நிலையில் தனக்கு யாருமே இல்லை. தான் தனித்துப் போய்விட்டேன் என்ற எண்ணத்தில் ஒருவர் தற்கொலையில் ஈடுபடுகின்றார். பிரச்சினையிலிருந்து எவ்வாறு விடுபடலாம் என்று வழிதெரியாதவர்களில் 20 வீதமானோரும், மது போதைப் பொருளுக்கு அடிமையானவர்களில் 40 வீதமானோரும், உளநோயினால் 40 வீதமானோரும் தற்கொலையில் ஈடுபடுகின்றனர். இவற்றைவிட

1. கணவன் மனைவியிடையிலான குடும்பப் பிரச்சினைகள்
2. காதல் தோல்விகள்
3. விரும்பத்தகாத கர்ப்பம்/கருக்கலைப்பு
4. வறுமை மற்றும் கடன்தொல்லை
5. பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்கள் மற்றும் சுரண்டல்கள்
6. அன்புக்குரியவர்களின் இழப்பு/உயிரிழப்பு

போன்றனவும் தற்கொலைகளுக்குக் காரணங்களாகின்றன.

மேற்குறிப்பிட்ட பிரச்சினைகள் ஏற்படும்போது இலகுவில் மனம் புண்படும் தன்மையுடையவர்கள், பிரச்சினைகளைத் தாங்கும் சத்தியற்றவர்கள், நண்பர்கள் அதிகமில்லாதவர்கள், தங்களது பிரச்சினைகளைப் பகிர்வதற்கும், சொல்லி ஆறுதல் கேட்பதற்கும் வழியற்றவர்கள் உடனடியாகத் தற்கொலை ஒன்றே நிரந்தரத் தீர்வு என்று நினைத்து தற்கொலையில் ஈடுபடுகின்றனர்.

**தற்கொலை அபாயம் உள்ளவர்கள்**

இவர்களில் பின்வரும் அறிகுறிகள் காணப்படும்.

1. குடும்ப நண்பர்களுடன் தொடர்பாடலைப் பேணாமல் ஒதுங்கி இருத்தல்.
2. அன்றாட காரியங்களில் ஆர்வமின்றி இருத்தல். உ+ம்: கல்வி, தொழில், உணவு உண்ணல்.
3. தற்கொலை பற்றியும் மரணம் பற்றியும் அதிக அள்வில் கதைத்த வண்ணம் இருத்தல்.
உ+ம்: நான் செத்தால் நல்லது, நான் செத்தால் ஒருத்தருக்கும் பிரச்சினை இல்லை எனக் கூறுதல்.
4. ஏற்கனவே தற்கொலை முயற்சியில் ஈடுபட்டவர்கள்.
5. நடக்கும் எல்லாப் பிழைக்கும் தாமே காரணம் என்று கூறுபவர்கள்.
6. தனிமையில் இருந்து அழுபவர்கள் அல்லது அழ முடியாமல் தவிப்பவர்கள்.

> **வருடா வருடம் செப்ரெம்பர் 10 ஆம் திகதி உலக தற்கொலை எதிர்ப்புத் தினமாக கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது.**

எனவே இவ்வாறான அறிகுறிகள் உள்ளவர்கள் குறித்து பெற்றோரும், உறவினர்களும், அண்டை அயலாரும், சமூகமும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

**தற்கொலையைத் தடுப்பதற்கான வழி முறைகள்**

1. தற்கொலை எண்ணம் உடையவர்கள் தமது தற்கொலைபற்றிய எண்ணத்தை மிக நெருங்கியவர்களிடம், மறைமுகமாகவோ நேரடியாகவோ கூறவே செய்கின்றனர். எனவே அவ்வாறான சந்தர்ப்பங்களில் பாராமுகமாக இருக்காமல் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அவசியமான புத்திமதிகளை சொல்லி ஆற்றுப்படுத்த வேண்டும்.
2. வாழ்க்கைக்குத் தேவையான பிரச்சினை தீர்த்தல் திறன் போன்ற திறனாற்றல்களைக் கற்றுக்கொடுக்க வேண்டும்.
3. குடும்ப உறவுகளிடையே சரியான புரிந்துணர்வு, தொடர்பாடல், கலந்துரையாடல்கள், பிரச்சினைகளைப் பேசித் தீர்த்தல் போன்ற ஆரோக்கியமான உறவு முறையைப் பேண வேண்டும்.
4. நல்ல நண்பர்களை உருவாக்கி மனச்சுமை, மனப்பாரத்தை இறக்கி வைப்பதற்கு அவர்களின் துணையை நாடுதல்.
5. நல்ல பொழுதுபோக்கு அம்சங்களில் ஈடுபடுதல். உ+ம்: மனதுக்குப் பிடித்தமான இசையை ரசித்தல், இயற்கையை ரசித்தல், கவிதை எழுதுதல்.
6. பிரச்சினைகள் ஏற்படும் போது தகுந்த உளவளத்துணை சேவைகளை நாடுதல். பிரதேச செயலகங்களில் உள்ள மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவின் உத்தியோகத்தர்களை நாடுதல்.
7. தியானம், யோகாசனம் போன்ற சாந்த வழிமுறைகளில் ஈடுபடுதல்.
8. மனச்சுமை நீக்கும் அருமருந்தாகிய தெய்வ வழிபாடு, இறைபாசுரங்களைப் பாடுதல், இறைவனிடம் குறைகளைச் சொல்லி அழுதல் போன்றவற்றில் ஈடுபடலாம்.
9. விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
தற்கொலையால் ஏற்படுகின்ற பாதிப்புகள் தொடர்பில் சமூக மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். பாடசாலைகள், பல் கலைக்கழகங்கள் மற்றும் சமூகத்தளங்களில் இதனை மேற்கொள்ளலாம். ஊடகங்களாகிய பத்திரிகைகள் மற்றும் இலத்திரனியல் ஊட கங்கள், சமூக வலைத்தளங்களில் இவ்வா றான விழிப்புணர்வுகளை பரந்தளவில் முன்னெடுக்கலாம்.
10. தற்கொலை எண்ணம் உடையவர்கள் பின்வரும் இலவசத் தொலைபேசிச் சேவைகளுக்கு தொடர்புகளை ஏற்படுத்தி தமது பிரச்சினைகள் குறித்து கலந்தாலோசித்து உளவளத்துணை சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம். உதவி தேவைப்படும் ஒருவரை நீங்கள் இனங்காணும் போது வழிகாட்டுங்கள்.

நேயம் உதவி அழைப்பு எண் :- 021 222 6666 (சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்)

கைகொடுக்கும் நண்பர்கள் :- 021 222 8117 (104 சுமித்திரயோ, யாழ்.கிளை நான்காம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்)

வலியில்லாமல்வாழ்க்கை இல்லை. எந்தக் காயத்தையும் காலம் என்னும் மருந்து ஆற்றிவிடும். எனவே தற்கொலை என்பது எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வாகாது என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும். தற்கொலை என்பது ஒரு கணநேரத்தில் எடுக்கும் முடிவு. அந்தக் கணநேரத்திலிருந்து வெளியே வந்து விட்டால் போதும். அங்கத்தை இழந்தவர்களே சாதனைச் சிகரத்தைத் தொடும்போது, எதற்காக இந்த அழகிய வாழ்வை நாம் அவசரப்பட்டு அழித்துக்கொள்ள வேண்டும்? சோதனைகளைச் சாதனைகளாக்கி வளமான வாழ்வுக்கு பாதை அமைப்போம்.

கு.கௌதமன்,
சிறுவர் பாதுகாப்பு அதிகாரி,
உளநல சமூக கலாசார அதிகாரி,
யாழ்.மாவட்டம்.

# மருத்துவரைச் சந்திக்கும் பொழுது

நீங்கள் மருத்துவரைச் சந்திக்கும் பொழுது சில விடயங்களைத் தெரிந்து வைத்திருப்பீர்களாக இருந்தால் அது உங்களுக்கு மிகவும் பயனுடையதாக இருப்பதுடன் அநாவசிய தாமதம், அலைச்சல், செலவு என்பவற்றைக் குறைத்துக் கொள்ளவும் உறுதுணையாக இருக்கும்.

உங்கள் மருத்துவம் சம்பந்தமான குறிப்புகள் துண்டுகள், புத்தகங்கள், சோதனை முடிவுகள் அனைத்தையும் ஒரு பைல் கவரில் அல்லது பை ஒன்றில் போட்டு பாதுகாப்பாக வைத்திருங்கள். வைத்தியரைச் சந்திக்கும் பொழுது அவை அனைத்தையும் உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள். அவை உங்களுக்குப் பொருத்தமான மருத்துவப் பராமரிப்பை தீர்மானிப்பதற்கு பெரிதும் உதவியாக இருக்கும். இவற்றை எடுத்துச் செல்ல நீங்கள் தவறினால் உங்களுக்குப் பொருத்தமான சிகிச்சையை ஆரம்பிப்பதில் தாமதங்கள் ஏற்படலாம். சில முக்கியமான ஆவணங்களை போட்டோ பிரதிகள் எடுத்து வைத்துக் கொள்வது உங்கள் மருத்துவ தகவல்கள் தொலையும் சந்தர்ப்பங்களில் மிகவும் பயனுடையதாக அமையும்.

வைத்தியர் சோதிக்கும் கருவியை (ஸ்ரெதஸ்கோப்) காதில் மாட்டியிருக்கும் பொழுது அவருடன் பேசுவதைத் தவிர்த்தல் வேண்டும். காரணம் அந்தச் சந்தர்ப்பத்தில் நீங்கள் கதைப்பது வைத்தியருக்கு கேட்காது. நீங்கள் கதைத்துக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இந்தக் கருவியினால் உங்களை சோதித்துப் பார்ப்பதும் கடினமாக இருக்கும். எனவே வைத்தியர் காதில் ஸ்ரெதஸ்கோப்பை மாட்டியிருக்கும் நேரத்தில் வைத்தியருடன் கதைப்பதை தவிர்த்துக் கொள்வது அவசியமாகும்.

உங்களுடைய நோய் நிலை சம்பந்தமாக நீங்களே வைத்தியருக்கு விவரிப்பது நல்லது. உங்களுக்கு இருக்கும் உண்மையான சரியான அறிகுறிகளை உங்களால் மட்டுமே முழுமையாக விவரிக்க முடியும். அதாவது ஒரு நோயாளியின் நோய் நிலை சம்பந்தமாக அவரின் குடும்ப உறுப்பினர்கள் விவரிப்பதிலும் பார்க்க அந்த நோயாளியே நேரடியாக வைத்தியருக்குச் சொல்வது சிறந்தது. நோயாளிக்கு பேசும் ஆற்றலில் அல்லது சிந்திக்கும் ஆற்றலில் தடுமாற்றங்கள் இருந்தால் அல்லது மயக்க நிலை, வலிப்பு நிலை ஏற்பட்டால் குடும்ப உறுப்பினர்கள் அவரின் நிலை சம்பந்தமாக விவரிக்க வேண்டிய தேவை ஏற்படலாம்.

நீங்கள் பாவித்துக் கொண்டிருக்கும் மாத்திரைகளின் பெயர்களை அறிந்து வைத்திருப்பது மிகவும் அவசியமாகும். மாத்திரைகளின் நிறத்தையும், வடிவத்தையும் சொல்லி அதனை அடையாளப்படுத்த முனைவது சில சமயம் ஆபத்திலும் முடியலாம். ஒவ்வொரு வகையான மாத்திரைகளும் பல்வேறுபட்ட வடிவங்களிலும், நிறங்களிலும் உற்பத்தி செய்யப்படுகின்றன. எனவே நீங்கள் குறிப்பிடும் வடிவத்தையும் நிறத்தையும் வைத்து நீங்கள் என்ன மாத்திரை பாவித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை வைத்தியரினால் கண்டறிவது சிரமம். எனவே ஒவ்வொருவரும் தாம் பாவிக்கும் மாத்திரைகளின் பெயர்களைத் தெரிந்து வைத்திருப்பது மிகவும் பயனுடையதாகும்.

வைத்தியரைச் சந்திக்கும் பொழுது உங்கள் நோய்நிலை சம்பந்தமான எல்லாத் தகவல்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். உதாரணமாக உங்களுக்கு என்ன நோய்கள் இருக்கின்றன? உங்கள் குருதி அமுக்கம் எவ்வளவு? ஒவ்வொரு மாத்திரைகளும் எதற்காக தரப்படுகின்றன? அவற்றின் பெயர் என்ன? செய்யப்பட்ட சோதனையின் முடிவு என்ன? உங்கள் உணவு முறை எப்படி அமைய வேண்டும்? நீங்கள் என்ன, வகையான உடற்பயிற்சிகள் செய்ய முடியும்? போன்ற வினாக்களுக்கான விடைகளைத் தெரிந்து கொள்வது உங்களது உரிமையும் கடமையுமாகும்.

வைத்தியரைச் சந்திக்கச் செல்லும் பொழுது எந்த நோய் நிலைக்காக வைத்தியரைச் சந்திக்கச் செல்கிறீர்களோ அந்த நோயுடன் தொடர்புடைய வைத்தியரைச் சந்தித்து சிகிச்சை பெற்றுக் கொள்வது சிறந்தது. சிறிய மருத்துவப் பிரச்சினைகளுக்கும் மருத்துவ நிபுணரை சந்திக்க வேண்டும் என்ற அவசியமில்லை. உங்கள் வீட்டின் அருகிலுள்ள அரசாங்க வைத்தியசாலையில் வைத்தியரை சந்தியுங்கள். தேவை ஏற்படின் மேலதிக சிகிச்சைக்கான ஒழுங்குகளை அந்த வைத்தியர் செய்து தருவார்.

உங்கள் நோய் நிலை சம்பந்தமாக உங்களுக்கு ஏதாவது சந்தேகம் அல்லது பயம் அல்லது நேரடியாக வைத்தியருடன் கதைப்பதில் தயக்கம் இருப்பின் உதவியாளர் ஒருவரை அழைத்துச் செல்வது நல்லது. நீங்கள் ஒவ்வொரு தடவையும் வைத்தியரை சந்திக்கச் செல்லும் போதும் அதே உதவியாளரை அழைத்துச் செல்வது நல்லது.

வைத்தியர் கூறும் மருந்துகளை பாவிப்பதற்கு உங்களுக்கு விருப்பமில்லையானால் நீங்கள் அதனை வைத்தியரிடம் தெரிவித்து அதற்கான மாற்றுவழிகளை அறிந்து கொள்ள முடியும்.

வைத்தியர் கூறும் சிகிச்சை முறைகளையும் ஆலோசனைகளையும் ஏற்றுக் கொள்வது உங்களுக்குக் கஷ்டமாக இருந்தால் அதனை திறந்த மனதுடன் வைத்தியருக்கு நீங்கள் தெரியப்படுத்த முடியும்.

வைத்தியர் உங்களுக்கு கூறுவது ஆலோசனையே தவிர உத்தரவு அல்ல. உங்களுடைய விருப்பத்துக்கு அமைவாகவும் உங்களின் அனுமதியுடன் மட்டுமே சிகிச்சை முறை இறுதியில் வடிவமைக்கப்படும். எனவே வைத்தியரின் ஆலோசனையைக் கேட்ட பின் உங்களது விருப்பத்தையும் தீர்மானத்தையும் வைத்தியருக்கு தெரியப்படுத்துவது உங்களது உரிமையும் கடமையும் ஆகும்.

வைத்தியர் பரிந்துரைக்காத மருந்துகளை பாவித்தல் கூடாது. அத்துடன் மருந்துகளை மருந்தகங்களில் வாங்கும் போது அதனைப் பாவிக்கும் முறை பற்றியும் கேட்டறிதல் வேண்டும். மருந்து காலாவதியாகும் திகதியையும் பார்த்து வாங்குதல் வேண்டும்.

ஒருவருக்கு சிக்கலான நோய் நிலைமை ஒன்று ஏற்பட்டு விட்டால் அவரின் உண்மையான உடல் நிலையையும் அவருக்கு ஏற்படக் கூடிய மற்றைய பாதிப்புக்களையும் அந்த நோயாளிக்கு தெரியப்படுத்த வேண்டிய கடமை ஒவ்வொரு மருத்துவருக்கும் இருக்கிறது. ஆனால் இந்தக் கடுமையான நோய் நிலை சம்பந்தமாக நோயாளிக்கு தெரியப்படுத்துவதில் சிக்கல்களும் இருக்கின்றன. ஆனாலும் நோயாளியின் மன நிலையையும் பொருத்தமான தருணத்தையும் அறிந்து நோயாளிக்கு அல்லது நோயாளியின் நெருங்கிய உறவினர்களுக்கு இது பற்றி வைத்தியரினால் கூறப்படும் உங்களது மருத்துவநிலை சம்பந்தமான பூரணமான நிலைமையை தெரிந்து கொள்ள நீங்கள் விருப்பப்படாதவிடத்து அதனை வைத்தியருக்கு தெரியப்படுத்த வேண்டும்.

உங்களுக்கு இருக்கும் அறிகுறிகளை கூட்டியோ மறைத்தோ அல்லது குறைத்தோ வைத்தியருக்கு தெரியப்படுத்தினால் அது உங்கள் வைத்திய முறையில் பாதிப்பை ஏற்படுத்தலாம். எனவே வைத்தியரை உங்கள் நண்பராக கருதி உண்மை நிலையை அவருக்கு தெரியப்படுத்துவது நல்லது.

உங்களது மருத்துவத் தகவல்களின் இரகசியத்தன்மை எப்பொழுதும் வைத்தியர்களால் பேணப்படும்.

சி.சிவன்சுதன்,
பொது வைத்திய நிபுணர்,
யாழ். போதனா வைத்தியசாலை.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா


**மேடம்:** குடும்பத்தில் இதமான சூழ்நிலை நிலவும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். மனக்கவலை நீங்கி எதையும் எதிர்கொள்ளும் துணிச்சல் வரும்.


**இடபம்:** அடுத்தவரை மனம் மகிழச் செய்யும் விதத்தில் பேசி காரியம் சாதிப்பீர்கள். அடுத்தவர்களுக்கு உதவி செய்யப்போய் வீண் பழி சுமக்க நேரிடலாம். கவனம் தேவை.


**மிதுனம்:** அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எந்த வகையிலாவது உழைப்பு வீணாகும். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபங்கள் ஏற்படும்.


**கடகம்:** மனக்குழப்பம் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். நல்ல இடத்தில் இருந்து ஆக்கபூர்வமான யோசனைகளும் காரிய வெற்றியும் கிட்டும். ஆனால் மற்றவர்களிடம் பழகும் போது கவனமாக இருப்பது நல்லது.


**சிங்கம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் கொடுத்த வேலைகளைக் கவனமாகச் செய்து முடித்து பாராட்டுப் பெறுவார்கள். செயல் திறமை அதிகரிக்கும்.


**கன்னி:** உறவினர் வருகை இருக்கும். எவரிடம் பேசும் போதும் நிதானமாகப் பேசுவது நன்மை தரும். திட்டமிட்டுச் செயற்படுவது வெற்றிக்கு உதவும்.

**நாளை**

ஆவணி-30 திங்கட்கிழமை 15.09.2014
திதி: ஸப்தமி மு.இ.11.46 வரை
நட்சத்திரம்: ரோகிணி பி.இ.01.42 வரை
சுபநேரம்: 12.03 - 01.33 வரை
இராகுகாலம்: 07.33-09.03 வரை


**துலாம்:** மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் கெட்ட பெயர் வாங்க நேரிடலாம். எதிலும் எச்சரிக்கையுடன் செயற்படுவது நல்லது. அடுத்தவர்களுடன் வீண் வாக்கு வாதங்களும் அதனால் கருத்து வேற்றுமையும் உண்டாகலாம்.


**விருச்சிகம்:** எதிர்பார்த்த தொழில் தொடர்பான காரியங்கள் தாமதமாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கோபத்தைக் குறைத்துக் கொண்டு செயலாற்றுவது வீண் பகை வராமல் தடுக்கும்.


**தனுசு:** அறிமுகமில்லாத நபர்களிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. வீண் வாக்கு வாதங்களைத் தவிர்த்து சாதுரியமாகப் பேசுவது நல்லது. எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மனதில் துணிச்சல் உண்டாகும்.


**மகரம்:** தேவையற்ற இடமாற்றம் உண்டாகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்த ஒரு வேலையையும் செய்து முடிப்பதில் வேகம் காட்டுவார்கள். சக ஊழியர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.


**கும்பம்:** உறவினர்கள் வருகை இருக்கும் அதே நேரத்தில் அவர்களுடன் வாக்கு வாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது. வாக்கு வாதத்தைத் தவிர்ப்பது நன்மை தரும்.


**மீனம்:** எந்த ஒரு வேலையையும் மனத் திருப்தியுடன் செய்வீர்கள். புத்தி சாதுரியமும், வாக்குவன்மையும் அதிகரிக்கும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இடமாற்றம் பதவி உயர்வு கிட்டும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | 7 | 2 | | | 8 | | |
| 2 | | | 8 | 9 | | | 4 | 6 |
| 8 | | | | 5 | 6 | 9 | | |
| 3 | | | | | | | | |
| 7 | 9 | 5 | 6 | | 3 | 4 | 1 | 8 |
| | | | | | | | | 2 |
| | | 4 | 9 | 3 | | | | 5 |
| 1 | 3 | | | 7 | 8 | | | 4 |
| | | 8 | | | 2 | 3 | | 1 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 4 | 2 | 1 | 3 | 9 | 8 | 6 | 7 |
| 6 | 8 | 3 | 2 | 4 | 7 | 5 | 9 | 1 |
| 1 | 9 | 7 | 8 | 6 | 5 | 2 | 4 | 3 |
| 3 | 1 | 5 | 9 | 7 | 6 | 4 | 8 | 2 |
| 8 | 2 | 9 | 3 | 1 | 4 | 6 | 7 | 5 |
| 4 | 7 | 6 | 5 | 2 | 8 | 1 | 3 | 9 |
| 2 | 6 | 1 | 7 | 8 | 3 | 9 | 5 | 4 |
| 9 | 3 | 8 | 4 | 5 | 2 | 7 | 1 | 6 |
| 7 | 5 | 4 | 6 | 9 | 1 | 3 | 2 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**வீடு, காணி நியாயமான விலையில் விற்பனைக்கு**

யாழ்.நகர் மத்தியில் மாட்டீன் லேனில் ஒரு பரப்புக் காணியில் 4 அறைகள் (ஒரு A/C அறை), 2குளியலறை, சமையலறை கிணற்றுடன் வீடும் மற்றும் பாதை வசதியுடன் வீடு கட்டக்கூடிய ¾ பரப்பு சதுரக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

பிரபல பாடசாலைகள், கோயில்கள், புகையிரதநிலையம், வைத்தியசாலை, பேருந்து நிலையம் என்பன அருகில் உள்ளன.

(51670)(4.6.3) தொடர்பு: 077 911 0703

**வீடு, கடை வாடகைக்குண்டு**

கோண்டாவில் சந்திக்கும், திருநெல்வேலி சந்திக்கும் இடையில் சகல வசதிகளையும் கொண்ட வீடும், கோண்டாவில் சந்தியில் இரண்டு கடைகளும் வாடகைக்குண்டு. நிறுவனங்கள், சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.

(52120) (12.3.6) தொடர்பு: 077 438 2566

**A tribute to our Iconic Figure**



He has a twin initial before his name.
On which rests his solid fame.
SO stands for softness.
PA carries with passionate.
SOPA on the whole,
A miraculous gift,
Jaffna got indeed.
A bilingual poet.

A great teacher can touch all, with his art.
Eternally he dwells as an icon in our hearts.
Without handouts his Literature,
Guidelines initiate his Psychology.
We, Palalians proudly boast:
"Blessed were we
his last 1998 - 99 batch"
An eminent Principal.

Many more stand firmly on our English.
Learning literary genres from him we relish.
GAQ, Part 1, Part 2, MA,
Technical Colleges and Higher Studies,
Governmental or non- Governmental,
Translations, Precis, Short stories,
Explanations, Elaborations, Explorations,
A great Lecturer.

Attends ceremonies, functions, rituals without fail.
Confirms his presence in the midst of many an ail.
Much sought after
At Conferences, Seminars and Forums
Chairperson on ceremonial occasions,
Confidant, Counsellor, Caregiver and well - wisher
Shows appreciation, admiration,
Shares happiness, and sadness,
A helpful Friend.

Reaching seventy five is God's blessing today,
For his yeoman services and untiring efforts every day.
May Almighty guard and guide him,
his beloved, children and grand children
In the years to come.
With lots of love,
And sincere gratitude,
Happy Birthday!

S.Pathmanathan



**S.Pathmanathan**

*Wish you a Happy Birthday*

**14.09.2014**

Past students,( English Stream)
Teachers' College, Palaly. (1998 - 99 )

(52131)(7.6.3)

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**


பூநகரி மட்டுவில் நாடு-சங்குப்பிட்டி பிரதான வீதியில் வாடியடி சந்திக்கு மிக அண்மையில் புதிதாக கட்டப் பட்டுள்ள அரசினர் வைத்திய சாலைக்கு நேர் எதிராக வீடு, கிணற்றுடன் அமைந்துள்ள 4 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. (47268)(7.6)

தொடர்பு :
077 124 7425, 077 677 1048,
021 227 0410

CEYLON THEATRES

இப்பொழுது திரையில்

MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)



Platinum 10.30am, 2.30pm, 6.30pm



Silver 10.15am, 2.15pm, 6.15pm



Bronze 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

**வேலையாள் தேவை**

வடமராட்சி அச்சகம் ஒன்றுக்கு
Code machine இயக்குநர் தேவை.
தொடர்பு:077 652 0315 (49772) (4.6.3)

**Physics Personal Classes- English Medium**

B.Sc (Hons) M.Sc (London)
தகுதிவாய்ந்த ஆசிரியரினால்
கற்றுக்கொடுக்கப்படும்.
தொடர்பு:077 443 1619 (51809) (4.6.3)

**காணி விற்பனைக்கு**

ஊரெழுப்பிள்ளையார் கோயிலுக்கு அருகில், பலாலி வீதியில் மேற்குப் பக்கத்தில் அமைந்த 6¼ பரப்புக் காணி, கடை, வியாபார ஸ்தலம் தொடங்குவதற்கு ஏற்றதுமான காணி உடன் விற்பனைக்குண்டு.

(52135) (12.3.6) தொடர்பு: 077 545 8193

**விற்பனைக்குண்டு**

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் மூன்று பரப்புக் காணிக்கு மேல் உள்ள வாகனத் தரிப்பிட வசதிகளுடன் கூடிய மூன்று மாடிக் கட்டடம் விற்பனைக்குண்டு.

(51638?) (12.3.6) தொடர்பு: 077 072 6210

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 27 வயது, நல்ல நிறம், மெல்லிய தோற்றம், உயரம் 5' 9" அச்சுவினி 3ஆம் பாதம் செவ்வாய்க் குற்றமற்றவரும், அமெரிக்க பிரஜா உரிமையுடையவரும், பவலோ பல்கலைக்கழகத்தில் Aeropace Engineering AND Mechanical Engineering பூர்த்தி செய்து அமெரிக்காவில் தொழில் புரிபவருமான மணமகனுக்கு டாக்டர், எஞ்சினியர், கணக்காளர் முதலான பதவி வகிக்கும் மண மகள் தேவை. சாதக குறிப்புடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இலக்கம் 5011
மே/பா உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(52103) (12.3.6)

இலங்கையில் மிக வேகமாக பரவி வரும் மின்பொருள்
விற்பனை வலையமைப்பின் இரண்டாம் கட்ட நடவடிக்கையின் கீழ்
ஒவ்வொரு நகரத்திற்கும் ஒரு காட்சியறை
இலங்கையின் அடையாளச்சின்னத்தோடு
நாம் எமது சொந்த இடத்தில்



softlogic
BEST IN THE BUSINESS

உங்களுக்கான இடத்தை
உங்களுக்கே உரியதாக்கித் தந்து
நீங்களும் எங்களில் ஒருவராகுவதற்கு
அழைக்கின்றோம்...

SHOWROOM MANAGER
காட்சியறை முகாமையாளர்
(நாடளாவிய ரீதியில்)

careers@softlogic.lk

Softlogic Retail (Pvt) Ltd.,
Lakshman's Building, Level 04,
No: 321, Galle Road, Colombo 3.

சிறப்பு தகுதியாக கருதப்படும் அனுபவம்

யோக பிரஷாந்த் - 0777003833
யோகராஜா - 0777644174

Panasonic NOKIA BlackBerry SAMSUNG xerox CANDY Russell Hobbs
Kelvinator Midea DELL acer softlogic MAXMO NEC EPSON

விண்ணப்பங்கள்: careers@softlogic.lk

## கொடிகாமம் கோயிலாமனை வீதிக்கு விமோசனம் கிடைக்குமா?

கொடிகாமம், செப்.14

கொடிகாமம் கோயிலாமனை வீதிக்கு விமோசனம் எப்போது கிட்டும் என்று பிரதேச வாசிகள் ஆதங்கம் தெரிவித்துள்ளனர்.

கொடிகாமம் கோயிலாமனை வீதி ஜே/320 இராமாவில் கிராம அலுவலர் பிரிவில் உள்ளது. அந்தப் பிரதே சத்தை ஊடறுத்து இரண்டு வீதிகள் கொடிகாமம் நகரை அடையும் விதத்தில் பிரதான வீதிகளாக தட்டாம்குளம் வீதியில் இருந்து செல்லும் கோயிலாமனை வீதியும், மந்துவில் ஸ்ரீ பாரதி வீதியும் உள்ளன.

குறித்த வீதிகள் இரண்டும் சுமார் 100 வருடங்களுக்கு மேலாக சம்பந்தப்பட்டோரால் புனரமைக் கப்படாததால் மக்கள் போக்குவரத்துக்கு வசதியில்லாத நிலையில் தற்போது குண்டும் குழியுமாக உள்ளன. குறித்த பாதைகள் ஊடாக மந்துவில் கிழக்கு, மந்துவில் மேற்கு, தாவளை, இயற்றாலை, தல்வளை, குடியிருப்பு, மீசாலை வடக்கு, கொடிகாமம் வடககு போன்ற 8 இற்கும் மேற்பட்ட கிராம மக்கள் நகரப்பகுதிக்கு சென்றுதிரும்ப வேண்டிய நிலையில் உள்ளனர்.

மேலும் எமது பிரதேசம் விவசாய விளை நிலங்கள் ஏக்கர் கணக்கில் உள்ள பகுதியாகும். இந்தப் பகுதியில் விளைவிக்கப்படும் காய்கறிகள் கொடிகாமம் சந்தைக்கு எடுத்துவரப்படுவதும் குறித்த வீதிகளூடாகவே ஆகும். மேலும் இந்தப் பிரதேசத்தில் பல ஆண்டுகளாக இராணுவம் நிலை கொண்டு இருந்த நிலையில் தற்சமயம் விடு விக்கப்பட்ட பிரதேசமாக ஆகியுள்ளது.

> குறித்த வீதிகள் இரண்டும் சுமார் 100 வருடங்களுக்கு மேலாக சம்பந்தப்பட்டோரால் புனரமைக் கப்படாதால் மக்கள் போக்கு வரத்துக்கு வசதியில் லாத நிலையில் தற்போது குண்டும் குழியுமாக உள்ளது.

குறித்த வீதியை புனர மைத்துத் தருமாறு இப்பகுதியிலுள்ள நாவலர் சனசமூக நிலையமும் மற்றும் தனிப்பட்ட ரீதியில் பொதுமக்களும் மனுக்கள் பல சம்பந்தப் பட்டோருக்கு சமர்ப் பிக்கப்பட்டிருந்த நிலையில் இன்று வரை குறிப்பிட்ட இரு வீதிகளும் புனரமைப்புச் செய் யப்படவில்லை.

மேலும் அவசர தேவை கருதி கர்ப் பிணிகளையோ, விபத்தால் பாதிக் கப்பட்டவர்களையோ கொண்டு செல்ல வாகனச் சாரதிகள் பின்னடிக்கும் நிலை இங்கு உள்ளது.

எனவே மேற்குறித்த 2 வீதிகளையும் சம்பந்தப் பட்டோர் புனரமைத்து மக்களின் போக்குவரத்துக்கு உதவுமாறு பிரதேச மக்கள் சம்பந்தப்பட்டோரை கேட்டுக் கொண்டுள்ளனர். (வ-122)

தரமான ஹரிஸ்சந்திர
உற்பத்திகள்




மா
அப்பளம்
உடனடி தயாரிப்பு
கோப்பி

தரத்திற்கான நம்பகரமான பெயர்
www.harischandramills.com
ரூ. 25.00 தொடக்கம்
C/16453

# அபிவிருத்தியில் புறக்கணிக்கப்படும் கிழக்கு மாகாண தமிழர் பிரதேசங்கள்

## தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் திருகோணமலை நகரசபை உறுப்பினர் சி.நந்தகுமார் கூறுகிறார்

மூதூர், செப்.14

கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழர் பிரதேசங்கள், கிராமங்கள் அபிவிருத்தியில் கிழக்கு மாகாண சபையால் புறக்கணிக்கப்படுகிறது என்று தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் திருகோணமலை நகரசபை உறுப்பினர் சி.நந்தகுமார் தெரிவித்தார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கிழக்கு மாகாண சபையால் தீர்மானிக்கப்பட்ட 419 வேலைத் திட்டங்களில் 274 வேலைத் திட்டங்கள் பூரண மாக நிறைவடைந்துள்ளதாக கிழக்கு மாகாண சபை வெளியிட்ட செய்திக் குறிப்பி லிருந்து அறியக்கூடியதாக இருந்தது. இதில் எத்தனை வேலைத்திட்டங்கள் தமிழ்க் கிராமங்களில் தமிழ் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டன? என்பதை கிழக்கு மாகாண சபை வெளிப்படைத்தன்மையாக புள்ளி விவரங்களுடன் வெளி யிடுமா?

தமிழ்ப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட குடிதண்ணீர் திட்டங்கள் எத்தனை? எத்தனை சிறு வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன? எத்தனை பூங்காக்கள், பொது மயானங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன என்று கேள்வி எழுப்பினால், விடை கவலைக்குரியதாகவிருக்கும். பாலர் கல்விக்கும், போரினால் விதவைகளாக்கப்பட்ட பெண் களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்குக் கிழக்கு மாகாண சபை முறையான செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த வில்லை.

தமிழர் பிரதேசங்களிலுள்ள பல வீதிகள் புனரமைக்கப்படவில்லை. நலனோன்பு விடயங்கள் சீராக மேற் கொள்ளப்படவில்லை. மாகாண சபையின் கீழ் நிர்வகிக்கப்படும் கிராமிய வைத்தியசாலைகளின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி செய்யப்பட வேண்டி இருப் பதோடு மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழர் பிரதேசங்களின் அபிவிருத்தியில் கிழக்கு மாகாண சபை நிர்வாகம்சிறிதளவேனும் அக்கறைகாட்டவேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட் டுள்ளது. (வ-40)




## புகைப்படப்போட்டியில் கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர் தெரிவு



யாழ்ப்பா ணம், செப்.13

அமெரிக்க தூதரகத்தின் யாழ். மையம் நடத்திய 'நகரச் சூழல் மாசடைதல்' என்ற கருப் பொருளில் அமைந்த புகைப்படப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஊடகக் கழக மாணவர்கள் முதலாம், 2 ஆம் இடங்களைப் பெற்றுள்ளனர்.

முதலாம் இடத்தை சண்முகலிங்கம் மதனராஜ், 2 ஆம் இடத்தை இராமச்சந்திரன் கலைய முதன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

மேற்படி நிறுவனத்தால் தெரிவு செய்யப்பட்ட சிறந்த புகைப் படங்களுக்கான பரிசில்களை சி.யதுஜன், சு.டிசாந், வி.விஸ்னுஜன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

குறித்த நிறுவனத்தினால் தெரிவு செய்யப்பட்ட 10 இடங் களில் கொக்குவில் இந்துக் கல்லூரி 5 இடங்களைப் பெற்றுக் கொண் டமை குறிப் பிடத்தக்கது. (வ)

## குறும்படப் போட்டி

யாழ்ப்பாணம், செப்.14

நல்லூர் பிரதேசத்தில் உள்ள கலைஞர்களையும், படைப் பாளிகள் தயாரிப்பாளர் களையும் ஊக்குவிக்கும் நோக்கில் நல்லூர் பிரதேச கலாசாரப் பேரவை பிரதேச மட்டத்திலான குறும்படப் போட்டியை நடத்தத் தீர்மா னித்துள்ளது. தெரிவு செய்யப்படும் ஐந்து குறும் படங் களுக்கு பெறுமதி மிக்க பரிசில் களும் வெகுமதிகளும் வழங் கப் படவுள்ளன. சமூகத்தில் உள்ள முரண் பாடுகள் கலாசார சீரழிவு களைத் தகர்த்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடியதாக இந்தக் குறும்படங்கள் அமைய வேண்டும் என்றும், படங்கள் 10 - 15 நிமிடங்கள் வரையுள்ளதாக இருத்தல் வேண்டும் என்றும் தெரிவிக் கப்படுகின்றது. ஒருவர் எத்தனை படங் களையும் அனுப்பி வைக்க முடியும். ஒரு படத்தின் மூன்று பிரதிகள் போட்டிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். போட்டிக்கான விண்ணப்பப் படிவங் களை நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று கிராம உத்தியோ கத்தரின் பரிந்துரையுடன் எதிர்வரும் ஒக்ரோபர் 10 ஆம் திகதிக்கு முன் னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும். (வ-7)




Whirlpool®
HOME APPLIANCES
மின்கட்டணத்தை குறைக்கும்
சுற்றாடல் தோழன்
குளிர்சாதனப்பெட்டிகளில் உள்ள
R600a குளிரூட்டி வாயு
மின்சாரத்தை சேமிக்கும் சுற்றாடல் நண்பன்.
10
உத்தரவாதம்
வட்டியில்லா
18
கொடுப்பனவு
44,400
ரூபாவிலிருந்து
மாதாந்தம் 2,850
ரூபாவிலிருந்து
செயற்திறனான கொம்ப்பிரேஷர்
கிரீன் கேஸ் தொழிநுட்பத்தினால் சிறந்த குளிர்மையை தந்து மின்சாரத்தை சேமிக்கும்.
தொழிநுட்பரீதியாக குளிர்மையாக்கும் பகுதி
2 லீற்றர் போத்தல் வைக்கும் தொகுதி
பாரிய அளவிலான 2 லீற்றர் போத்தல் அடுக்குவதற்காக தனியாக பகுதியினை பார்க்க முடியும்.
சக்திமிக்க கண்ணாடி தட்டு
பாரம் அதிகமான பாத்திரங்களை இலகுவாக வைக்க முடியும்.
6வது சென்ஸ் க்விக் ஐஸ்
205 Magic Series
Grey Titanium
Silver Fiesta
Midnight Bloom
Wine Exotica
Wine Orchid
WTA26/29 Series
Silver Fiesta
Imperia Black
Titanium
Wine Exotica
C/16454
ABS Gardner Dixon Hall
0714 020799
நாடளாவிய ரீதியில் அபான்ஸ் அன்லிமிடட், அபான்ஸ் காட்சியறைகளில்
மற்றும் அங்கீகாரம் பெற்ற முகவர்களிடமும் பெற்றுக்கொள்ள முடியும்.
Abans UNLIMITED


4rever
SKIN NATURALS
By Chandhani Bandara
Price Rs. 650/=
GOLD Fairness
Day & Night Cream
UNISEX
புதிய வடிவில்
GOLD
Fairness
Day & Night Cream
சூரிய ஒளியிலிருந்து சருமத்தை பாதுகாக்கும். சருமம் பொலிவற்று போதல் மற்றும் பருக்களை கட்டுப்படுத்தும்.
சருமத்தின் பொலிவுத்தன்மையை சரியான அளவில் பேணுகின்றது.
Make-up செய்யும் போது Foundation பூச்சாகவும் உபயோகிக்கலாம்.
சருமத்தின் ஈரலிப்பை பாதுகாப்பதோடு சருமத்தை மென்மையாக்கும்.
உங்களது பிரியமான 4rever மூலம்
பெறுமதி மிக்க பரிசில்களை
வெல்லுங்கள்
4rever பெட்டியின் மேற்புறப் பக்கத்தை
4rever, Skin Naturals, No.287/2,B,
Stanly Thilakaratna Mawatha,
Nugegoda என்ற முகவரிக்கு உங்கள்
விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.
பெயர்:..............................
முகவரி:..............................
தொ.பே.இல:..............................
தே.அ.அட்டை இல:..............................
Chandhani Bandara
4REVER FOUNDER & PROPRIETOR
(Cosmetologist)
ISO 9001:2008
CERTIFIED COMPANY
011 440 3283
shopping online
C/16455

Mahindra Rise.

மஹிந்திரா சென்ச்சுரோ
களவெடுப்பது சாத்தியமற்றது

என்ட்டி தெ.்ப்ட் எலாம் மற்றும் ரிமோட் திறப்பு அடங்கிய
இலங்கையின் ஒரே மோட்டார் சைக்கிள்

Mahindra CENTURO
IT'S GREAT TO BE ME



மஹிந்திரா நம்பிக்கை மற்றும்
சக்தியுடனான மஹிந்திரா சென்ச்சுரோ


எரிபொருள் சிக்கனமிக்க
MCi-5 எஞ்சின்




்.பைன்ட் மீ மற்றும் கைட் மீ லைட்

என்ட்டி தெ.்ப்ட் எலாம் மற்றும் ரிமோட் ்.ப்லிப் திறப்பு

இப்போது
ரூ. 169,598/-

www.mahindratwowheelers.com
Authorised Service Centre
லீஷேட லீசிங் வசதிகள்
85.4 Kmpl

2 வருட அல்லது 30,000 கி.மீ உத்தரவாதம்*

www.mahindracenturo.com http://www.facebook.com/mahindracenturo

வாடிக்கையாளர் சேவை துரித அழைப்பிலக்கம்
0772 880 555

ஐடியல் டு வீலர்ஸ் தனியார் நிறுவனம்
இல: 611, காலி வீதி, கொழும்பு 06.
தொலைபேசி: 0112 221 222
பெக்ஸ்: 0112 221 223

IDEAL 2 Wheelers

## வட்டு. இந்து வாலிபர் சங்கத்தால் மாணவருக்கு காலணிகள் அன்பளிப்பு



வலி.வடக்கு; செப்.14
வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினரால் வட்டு மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் 80 தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு காலணிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

படசாலையில் வைத்து வட்டுக் கோட்டை இந்து வாலிபர் சங்கப் பொருளாளர் க.ரகுமான் 80 ஆயிரம் ரூபா பெறுமதியான காலணிகள் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு நேற்று முன்தினம் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. வட்டு மத்திய கல்லூரி சமூகத்துடன் இணைந்து வட்டுக் கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினரால் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-86)

## சென்.பெனடிக் வித்தியின் பதக்கம் வழங்கும் நிகழ்வு



யாழ்ப்பாணம், செப்.14
மாணவர்களிடையே சுற்றுச் சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக யாழ்.சென்.பெனடிக் வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்ட சுற்றாடல் கழக செயற்பாடுகளில் வெற்றியீட்டிய வர்களுக்கான பதக்கமும் சான்றி தழும் வழங்கும் நிகழ்வு கடந்த புதன் கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடை பெற்றது. நிகழ்வுக்கு பிரதம விருந் தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். உதய குமாரும் சிறப்பு விருந்தினராக வட மாகாண மத்திய சுற்றாடல் அதிகார சபை பதில் பிரதிப் பணிப்பாளர் திருமதி விஜிதா சத்தியகுமாரும் கலந்துகொண்டனர். கௌரவவிருந்தினராகநல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ் கலந்து கொள்வார். இந்நிகழ்வில்மாணவர்களுடைய கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (வ)




அதிஷ்டத்தால்
நாடே அதிரும்
Dialog
LORD OF THE RELOAD
இலங்கையின் மாபெரும்
பரிசுத் தொகையுடன்
வெற்றி வாய்ப்புக்கள்
இன்று வரை 400,000ம் வெற்றியாளர்கள்
நாள்தோறும் இலட்சாதிபதி
மாதம்தோறும் 150 இலட்சம் சூப்பர் பரிசுகள்
டயலொக் வாடிக்கையாளராகிய உங்களுக்கு மட்டுமே
அனைத்து ரீலோட் மற்றும் காட்களுக்கும் வெற்றி வாய்ப்பு உண்டு.
Dialog
எதிர்காலம் இன்றே.
பரிசு தொடர்பான அறிவிப்பு "LOR"இன் மூலம் கிடைக்கப்பெறும் SMS வாயிலாக மட்டுமே. மேலதிக தகவல்களுக்கு 1777 இற்கு அழையுங்கள்.

# காலபோகத்துக்காக 200 புசல் விதை நெல் தருவிப்பு

யாழ். குடாநாட்டில் விதை நெல்லை உற்பத்தி செய்யும் நோக்கில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்த கார விவசாயிகளுக்கு 200 புசல் விதை நெல் தருவிக் கப்பட்டுள்ளதாக யாழ். குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமை யாளர் ரி.ரவிமயூரன் தெரி வித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

பீ.ஜி-406 இனத்தைச் சேர்ந்த இருநூறு புசல் நெல் பரந்தன் விதை உற்பத்தி பண்ணையில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளது. இந்த விதை நெல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்கார விவசாயி களுக்கு வழங்கப்பட வுள்ளன.

இந்த இன விதை நெல்லை உற்பத்தி செய்த பின்னர் அந்த விதை நெல்லையும் அடுத்த போகத்துக்கு பயன் படுத்தவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள் ளன.

இதேவேளை யாழ்.குடா நாட்டு விவசாயிகள் மேற்படி இன பிஜி 400 இன விதை நெல்லையே இந்தமுறை செய்கைக்கு பயன்படுத்த ஆர்வம் காட்டி வருகின்றனர். (வ-17)














Price Rs. 2,050,000/- + VAT

C/16455

Unimo Enterprises Limited
(A fully owned subsidiary of United Motors Lanka PLC)
No - 29, Mahathma Gandhi Road, Jaffna

web: www.unitedmotors.lk HOTLINE 077 1557378





- 1300 CC, பெற்றோல் EFI எஞ்சின்
- இலத்திரனியல் பவர் ஸ்டியரிங் (EPS)
- ஏழு ஆசனங்கள்
- 5 வேக கை இயக்க செலுத்துகை
- இரட்டை வாயு சீராக்கி (Dual A/C)

விசேட திறமையுள்ள மாணவர்களுக்கு 100% வரையான புலமைப்பரிசில்களும் உண்டு
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

சாதாரணதர (O/L), உயர்தரப் (A/L)
பரீட்சைகளின் பின் நிபுணத்துவம் மிக்க
கணக்காளராக தொழில் வாய்ப்பைப் பெறுவதை
உறுதி செய்து கொள்ளுங்கள்

K B B S
KBBS CAMPUS
CREATING PROFESSIONAL ACCOUNTANTS

Comprehensive Theory Programme

CA Sri Lanka | ACCA | CIMA | aat SRI LANKA

September 2014 முதல்...
எமது புதிய கிளை
தற்போது
யாழ் மண்ணில்

KBBS Campus நிபுணத்துவம் மிக்க தொழில்சார் வகுப்புக்களின் வரிசையில் முதலிடம் பெற்றிருப்பதற்கான விசேட காரணங்கள் எவை?

★ தொழில்சார் பாடநெறிகளில் நிபுணத்துவம் மிக்க விரிவுரையாளர்களின் பிரத்தியேகக் கவனிப்பு.

★ ஒப்பற்ற, திறமையான, அர்ப்பணிப்பு மிக்க விரிவுரையாளர்களின் சேவை.

★ அதியுயர்ந்த சித்தி விகிதங்களும் (90% வரை) பாடநெறிகளுக்கான எளிய கட்டணங்களும்

★ பரீட்சைகளுக்கான எதிர்பார்க்கைக் குறிப்புகளும், வழிகாட்டிகளும்.

★ விரிவுரையாளர்களால் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட பாடநூல்களும், வினா வங்கியும் (CA Sri Lanka, CIMA, ACCA போன்றன)

★ நவீனவசதியுடனும், இலகுவில் வந்தடையக் கூடியதுமான நிரந்தர அமைவிடம்.



**S. Thumilan**
Group Chairman & Renowned Lecturer
ACA, ACCA, ACMA (UK), CGMA, CPA (Aus)
MCSI (UK), FMAAT (SL), ACS

C/16209

KBBS CAMPUS | A Subsidiary of Blue Ocean Group of Companies
No. 281, K.K.S Road, Jaffna (Classes @ University of Jaffna)
Head Office: No. 75, Galle Road, Dehiwala, Sri Lanka Tel: +94 112 717 902 | www.kbbssl.com
0777 554 557 | 0773 028 400 | 0773 157 465

# கன்னியா விறகுத் தொழிலாளர்கள் அவல நிலை முடிவுக்கு வருமா?

திருகோணமலை மாவட்டத்தில் விறகுத் தொழிலில் ஈடுபடும் ஒரு சமூகம் மிக நீண்ட காலமாக இருந்து கொண்டே வருகின்றது. திரு கோணமலை கன்னியாவில் சுமார் 100 குடும்பங்கள் விறகு வெட்டி விற்பனை செய்யும் தொழிலை மேற் கொண்டு வந்தனர். அவர்களது பாரம்பரிய இந்தத் தொழிலை இன்று செய்ய முடியாத நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். கன்னியா வெந்நீர் கிணறுக்கு அருகில் வசிக்கும் ஆர்.ஆனந்த குமார் இந்தத் தொழில் பற்றியும் தங்களது இன்றைய நிலை பற்றியும் உதயன் நாளிதழுக்கு கருத்துத் தெரிவிக்கையில். "எனக்கு நான்கு பிள்ளைகள். விறகு வெட்டி விற்பனை செய்துதான் எனது குடும்பத்தைக்








காப்பாற்றி வந்தேன். என்னைப் போன்று விறகு வெட்டி விற்பனை செய்யும் 100 குடும்பங்கள் இங்கு வாழ் கின்றனர். எங்களை விறகு வெட்ட வேண்டாம் என்று அரசு கூறுகின்றது. எனவே நாங்கள் எப்படி எமது குடும்பத்தைக் காப்பாற்றுவது என கண்ணீர் வடித்தார். கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக தொழில் செய்ய முடியாது மிகவும் வறுமையில் இருக் கின்றோம். கன்னியாவிலிருந்து நாம் விறகு எடுத்து விற்பனைக்கு கொண்டு செல்லும் போது. வனபரிபாலன திணைக்கள உத்தியோகத்தர்கள் எங்க ளைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தார்கள். பொலிஸார் எங்களை நீதிமன் றத்தில் நிறுத்தினர்.

நீதிபதி 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் எங் களது பழைய சைக்கிளையும் கோடரியையும் பறிமுதல் செய்து விடுவித்தனர். இந்தச் சம்பவம் நடந்து ஒரு மாதத்துக்கு மேலாகின்றது. அன்றிலிருந்து எமது பாரம்பரிய தொழிலை மேற்கொள்ள முடியாது இருக் கின்றோம். இதனால் மிகவும் வறுமையில் வாடும் நாங்கள் இன்று குளத்தில் தூண்டில் மூலம் மீன்பிடித்து சீவியம் நடத்து கின்றோம்.

குளத்தில் பிடிக்கும் மீன்கள் சாப்பாட்டுக்கே காணாத நிலையில் எமது பிள்ளைகளை நாம் எப்படிக் கல்வி கற்க வைப்பிப்பது? கன்னியாவிலிருந்து 15 கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள திரு கோணமலை நகருக்கு சைக் கிளில் விறகுகளை கட்டி மிகவும் தூரப் பிரதேசத்துக்குக் கொண்டு சென்று விற்பனை செய்து எமது வாழ்க்கையை ஓரளவு சிறப்பான முறையில் மேற்கொண்டு வந்தோம். இந்த நிலையில் எமது தொழிலை செய்ய விடாமல் தடுப்பதற்கு என்ன காரணம்?

பச்சை மரம் வெட்டுவதென்பது குற்றமான செயலானால் பட்ட மரங்களை வெட்டுவது குற்றமா? விறகு வெட்டுவதை தடைசெய்த அரசு எங்களது வாழ்க்கையைப் பற்றி ஏன் சிந்திக்க வில்லை. விறகுத் தொழிலுக்கு மாற்று வழியாக வேறு தொழில்களை அரசு எங்களுக்கு ஏற்படுத்தி தந்தால் விறகு வெட்டி விற் பனை செய்யும் தொழிலை நாம் செய்ய வேண்டிய தேவையில்லை என்று விறகுத் தொழலாளியான ஆனந்தகுமார் கன்னியா விறகுத் தொழிலாளிகளின் சார்பாக தெரிவித்தார்.

கன்னியா கிராமம் போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட ஒரு பகுதியாகும். அங்குள்ள மக்கள் அடிப்படை வசதிக ளின்றி வாழ்ந்து வருகின் றனர். அங்குள்ள மக்களில் கூடுதலானவர்கள் விறகு வெட்டி விற்பனை செய்து வாழ்க் கையை நடத்திவரும் இந்த நிலையில் விறகு வெட்டுவதற்கு தடைவிதிக்கப்பட்டிருப்பதால் அவர்க்ள் தமது நாளாந்த வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர். அத்துடன் அவர்களது ஜீவனோபாயமும் இதனால் கேள்விக்குறியாகியுள்ளது.

அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு எவ்வகையான தொழில் முயற்சி அவர்கள் மத்தியில் அறிமுகப்படுத்தலாம்? என்பதனை ஆராய்ந்து இவர்களின் வாழ்வில் ஒளியேற்ற சம்பந்தப்பட்டோர் முன் வரவேண்டும்.

இதேவேளை அரச , அரச சார்பற்ற நிறுவனங்கள் இந்த குடும்பங்களின் பிள்ளைகளின் கல்வியறிவை வளர்ப்பதற்கு உதவி புரிய முன் வரவேண்டும் என்பதும் இவர்களது எதிர்பார்ப்பாகும்.




லிங்க் நெச்சுரல் புரொடக்ஸ் தனியார் நிறுவனம் ... info@linknaturalproducts.com இணையம் : www.linknaturalproducts.com

## மரண அறிவித்தல்

### திருமதி விமலாதேவி (விமலா)சங்கரப்பிள்ளை



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விமலாதேவி சங்கரப்பிள்ளை 12.09.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளையின் (இராசா) அன்பு மனைவியும், பார்த்தீபன் (தீபன்-City Ling Cooler Jaffna), பரஞ்சோதிமலர் (மலர், வட்டக்கச்சி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சூரியகுமாரி(வவி), செந்தில் நாதன்(வட்டக்கச்சி) ஆகியோரின் அன்பு மாமியாரும், மதுஜா, சிந்துஜா, வாசவன், திவ்வியம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00 மணியளவில் 83, மணிய காரன் வீதி, கொக்குவில் கிழக்கு கொக்குவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(52227)(6.4.3)

தகவல்: குடும்பத்தினர்.

## உர மானியம் பெறுவோர் விவரம்

சாவகச்சேரி, செப்.14

சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தில் உர மானியம் பெறுவோர் தொடர்பான பெயர்ப் பட்டியல்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள விவசாய சம்மேளனங்களின் பெயர் விவரம் வருமாறு:-

மந்துவில் மேற்கு, சாவகச்சேரி நகரம், அல்லாரை, கெற்பேலி, கரம்பகம், மீசாலை மேற்கு, இடைக்குறிச்சி, நாவற்காடு, கச்சாய், வரணி இயற்றாலை, எழுதுமட்டுவாழ் தெற்கு, நுணாவில் கிழக்கு என்பவையாகும். பயனாளிகள் இப்பட்டியலைப் பார்த்து தமது பெயர்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை தெரிந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-122)

## சுழிபுரத்தில் கும்பாபிஷேகம்

சுழிபுரம், செப்.14

சுழிபுரம் மேற்கு ஸ்ரீ ஹரிகர புத்திர ஐயனார் கோயில் புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை காலை 7.30 மணி முதல் 9 மணி வரையுள்ள சுப வேளையில் நடைபெறவுள்ளது. இன்று ஞாயிறு காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை எண்ணெய்க் காப்பு வைத்தல் நடைபெறும். நாளைகாலை 7.30 மணிமுதல்ஸ்தூபி அபிஷே கத்தைத் தொடர்ந்து பூர்ணாபுட்கலா சமேத ஐயனாருக்கும் விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், நாகதம்பிரான், சண்டேஸ் வரர் முதலான பரிவாரமூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் நடைபெறும். மாலை 6 மணிக்கு திருக்கல்யாண வைபவம் நடைபெற்று சுவாமி வீதியுலா வருதல் இடம்பெறும். பிரதிஷ்டா பிரதம குருவாக சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான சிவஸ்ரீ ந.சர்வேஸ்வரக் குருக்கள் கிரியைகளை நிறைவு செய்வார்.

தொடர்ந்து பதினொரு தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தரபரமாசார்ய சுவாமிகள் நல்லை ஆதீனம் நல்லாசி கள் வழங்குவார். (ஓ-28)

## யோகா பயிற்சி

நல்லூர், செப்.14

"யாழ் யோக அரங்கத்தினர்" நடத்தும் மாலை நேர யோகா பயிற்சிக்கான அறிமுக நிகழ்வு நல்லூர்த் தேரடி அருகே அறுபத்து மூன்றுநாயன்மார் குருபூசை மடத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

யோகா வகுப்புக்கள் மாலை 5 மணி தொடக்கம் 6 மணிவரை ஒரு மணிநேரம் தொடர்ந்து 45 நாள்கள் தினமும் நடைபெறும் என்று யாழ்.யோக அரங்கத்தினர் அறிவித்துள்ளனர். (ஓ)

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி பாலசுப்பிரமணியம்

(முன்னாள் ஆசிரியை யாழ்.இந்து மகளிர் கல்லூரி )



காரைநகர் களபூமியைச் சேர்ந்தவரும் மலேசியாவைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி பாலசுப்பிரமணியம் 11.09.2014 வியாழக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான மலேசியன் பென்சனியர் வேலுப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், அன்னபூரணியின் பெறாமகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் (தபாலதிபர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அன்னபாக்கியம், புனிதவதி, உமாதேவி மற்றும் திலகவதி, திருநாவுக்கரசு, வீரசிங்கம், புவனேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் சிவகாமசுந்தரி, சிதம்பரம், காலஞ்சென்ற நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், வசந்தி Dr.பவானி(ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு, சுன்னாகம்); நந்தினி (பொறியியலாளர், லண்டன்), காலஞ்சென்றவர்களான பாலசரஸ்வதி, சிவசங்கர் ஆகியோரின் அன்புத் தாயாரும், அருணகிரிநாதன், பாஸ்கரன், நாகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும், காணிலாவின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

21/1, றெயில் றோட்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (52226)(12.3.6)

தகவல்: குடும்பத்தினர்.
021 300 1207

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



(52121)(12.3)

பிறப்பு 10.09.1957

இறப்பு 17.08.2014

17.08.2014 இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

அமரர் **தங்கவேல் தில்லைநாதன்** அவர்களின்

அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (14.09.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிரியைகள் நாளைமறுதினம் (16.09.2014) செவ்வாய்க்கிழமை மு.ப.10.00 மணிக்கு எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து TCT மண்டபத்தில் (Thiyakee Food City Navalar Road) நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(தயவுசெய்து இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்)

மேலும் எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு உடனே ஓடோடி வந்து உதவிய உள்ளங்களுக்கும், தொலைபேசி, கண்ணீர் அஞ்சலி, பதாகை, மலர்வளையம், தந்தி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், தேவையான உதவிகள் புரிந்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

107, முத்தவிநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
TP: 077 075 4806

குடும்பத்தினர்.

## ஆறாம் ஆண்டு நினைவுகள்



தோற்றம் 15.02.1939

மறைவு 22.08.2008

### திருமதி வீரசிங்கம் தெய்வநாயகி

திதி: ஷஷ்டி (14.09.2014)

தென்னிய நற்கல்வி சேர் திகழ் பண்பும்
மண்ணினில் உவந்தே மாண்புறச் செய்தீர் அம்மா!
விண்ணினில் ஆறு ஆண்டுகள் வெறுமையாய்க் கழிந்ததென்றோ
அன்னையை அழைத்தீர் அம்மா ஆறுதல் பெறுவதற்கு

கௌரி கோட்டம்,
அல்வாய். (52071)(12.3.6)

குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**கமலாசனி** (ராணி)
**தில்லைநாதன்**

திதி : அபரபக்க சஷ்டி
(14.09.2014)

மலர்வு:
06.05.1953

உதிர்வு:
14.09.2012

ஆண்டுகள் இரண்டு கடந்தாலும்
ஆறாது பிரிவுத்துயர் எமக்கு
மாலையிட்ட மணவாளனையும், மக்கள்
மருமக்களுடன் பேரக்குழந்தைகளையும் விட்டு...
பிரிந்து வாழுவதை ஏதியதேன்? காலத்தின் நியதியோ...
விண்ணகத்தில் இறைபதத்தை விட்டகலா முக்திபெற
தொண்டடி நாயகனைக் கைகூப்பி வணங்குகிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

44/8, கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.



வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் நிதிப் பங்களிப்புடன் வவுனியா பிரதேச செயலர் பிரிவில் கலாசார பண்பாட்டு விழுமிய விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம்பெற்றன. அங்கு இடம்பெற்ற எங்கள் தோள்களில் என்ற விழிப்புணர்வு வீதி நாடகத்தில் பங்கு பற்றிய கலைஞர்களை வவுனியா பிரதேச செயலர் கா. உதயராசா சான்றிதழ் வழங்கி கௌரவிப்பதையும், வவுனியா பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு பண்டாரிக்குளம் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வையும் பங்கு பற்றும் மாணவர்களையும் காணலாம். (ஓ-108)







கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் போரினால் பாதிக்கப்பட்டு மன உளைச்சலுக்குள்ளான 100 பேருக்கு மன உளைச்சல் முகாமைத்துவம் தொடர்பான உளவியல்சார் ஆலோசனை வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் த.முகுந்தன் தலைமையில் இடம்பெற்றது. சிறுவர் அபிவிருத்தி பெண்கள் விவகார அமைச்சின் மகளிர் பணியகத்தின் நிதி உதவியுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட உளவளத்துணை உத்தியோகத்தர் தே.துஸ்யந்தன், யாழ். மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி ந.உதயராணி ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர். (ஓ-10)






குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் தமது முதல் நன்மையைப் பெற்றுக் கொண்ட பெண் சிறார்கள் இந்தத் திருப்பலியை நிறைவேற்றிய அருட் தந்தையர்கள், மறையாசிரியர்கள் ஆகியோர்களுடன் காணப்படுகிறார்கள். (ஓ-51)



காரைநகர் அரசடிக்காடு கதிர்காம வேலாயுத சுவாமி கோயில் வருடாந்தப் பெருந்திருவிழாவின் கொடியேற்ற நிகழ்வில்... (ஓ-250)






புனரமைப்புச் செய்யப்பட்ட துன்னாலை சதாசகாயம் மாதா தேவாலயத்தை யாழ். மறை மாவட்ட ஆயர் மேதகு தியோகுப் பிள்ளை ஆண்டகை அண்மையில் திறந்து வைத்து மந்திரித்து திருப்பலிப் பூசையை ஒப்புக் கொடுத்து பூசை, வழிபாடுகளை ஆரம்பித்து வைத்த போது... (ஓ-173)




கொக்குவில் மேற்கு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற வருடாந்த திருவிழாவில் பெரியபுராணம் பற்றி தொடர் இசைப் பேருரை நிகழ்த்திய கான கதா வாரிதி வை.நித்தியானந்த சர்மாவைப் பாராட்டி கொக்குவில் இந்து இளைஞர் மன்றம் சார்பில் த.தயாபரன் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் சமய அறிவுப் பரீட்சையில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவிக்கு சர்மா பரிசு வழங்குவதையும் காணலாம். (ஓ)



வட்டுக்கோட்டை வடக்கு, பிரமனாச்சி தோட்ட கற்பக விநாயகர் தேருக்கு எழுந்தருளுவதையும், தேரில் திருவீதி வலம் வருவதையும் காணலாம். (ஓ)



மிருசுவில் கெற்பேலி கிராமத்திலுள்ள பழமுதிர்ச்சோலை விவசாயப் பண்ணைக்கு அண்மையில் சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு பண்ணை உரிமையாளர் மா.நவரத்தினம் நினைவுப் பரிசாக மரக்கன்று ஒன்றை வழங்கினார். (ஒ-9)



யாழ்ப்பாண றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் தற்கொலை எண்ணத்தைத் தவிர்க்கும் விதமாகவும் உள நல ஆலோசனை வழங்கும் 1333 இலக்கத்தை மக்கள் மத்தியில் பிரபல்யபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட சைக்கிள் ஓட்டம் மற்றும் தெருவீதி நாடகம் கடந்த புதனன்று யாழ். மத்திய பஸ் நிலையத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் றோட்டறிக்கழக உறுப்பினர்கள். சிசிசி நிறுவனத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். நிகழ்வில் சில காட்சிகள். (ஒ-20)



நல்லூர் கந்தன் மஹோற்சவ காலத்தில் நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீனத்தில் பிரம்மஶ்ரீ சிவ. வை.நித்தியானந்த சர்மா நடத்திய கம்பராமாயண இசைப் பேருரைப் பூர்த்தியின் போது சர்மாவைப் பாராட்டி கலாபூஷணம் இராசையா ஶ்ரீதரன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்த போது... (ஒ)



வரணி இடைக்குறிச்சி ஶ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலைக்கு எல்லைச் சுவர் அமைக்கப்பட்டு அதன் கையளிப்பு வைபவத்துக்கு வருகை தந்த பிரதம விருந்தினர் தென்மராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் மற்றும் வீ.செல்வகுமார் தம்பதிகள் வரவேற்கப்படுவதையும், உரிய எல்லைச் சுவரின் நினைவுக் கல் திரையை வீ.செல்வகுமார் மற்றும் கல்விப் பணிப்பாளர் இருவரும் இணைந்து திரை நீக்கம் செய்து வைப்பதையும் காணலாம். எல்லைச் சுவரை செல்வகுமார் அமைத்துக் கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-122)



நயினை ஶ்ரீ விரகத்தி விநாயகர் ஆலய நுழைவாயில் அலங்கார மண்டபம் அமரர் சிவகாமி மகாதேவனின் நினைவாக நிர்மாணிக்கப்பட்டு அண்மையில் அன்னை சிவகாமி அறக்கட்டளை ஸ்தாபகர் சி. மகாதேவனால் திறந்து வைக்கப்பட்டது. (ஒ)



காரைநகர் தங்கோடை நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தில் பாற்குடப் பவனியில் மங்கையர்கள் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலயத்திலிருந்து பாற்குடங்களைச் சுமந்தவாறு ஆலயம் நோக்கிச் சென்ற போது. (ஒ-250)





இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை கருத்திட்டத்தின் தரவு சேகரிப்பது தொடர்பான கிராம சேவகர்களுக்கான இரு நாள் பயிற்சி கண்டாவளை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் த.முகுந்தன் தலைமையில் இடம்பெற்றது. பயிற்சியைக் கண்டாவளை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் கு.சிவலிங்கம் வழங்கினார். (ஒ-10)





வவுனியா வேப்பங்குளம் 7 ஆம் ஒழுங்கையில் அமைக்கப்படவிருக்கும் பாரதி சனசமூக நிலையத்துக்கான அடிக்கல்லை வவுனியா நகர சபைச் செயலாளர் மு.சத்தியசீலனும் மற்றும் அந்தப் பிரதேச மக்களும் நட்டு வைத்த நிகழ்வின்போது... (ஓ-421)



சுன்னாகம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி விஞ்ஞான தினம் அண்மையில் அதிபர் ஈஸ்வரதாஸன் முன்னிலையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நித்தியகௌரி ராஜனும், கௌரவ விருந்தினராக யாழ். ஆசிரிய வள முகாமையாளர் ரட்ணசிங்கமும் கலந்து சிறப்பித்தனர். மாணவர்களின் நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஓ)





யாழ்ப்பாணம் குப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு ஆலயத்தின் முன்னாள் செயலாளரும் ஓய்வு பெற்ற அஞ்சல் அதிபருமாகிய அமரர் வைத்திலிங்கம் சிவபாதத்தின் ஞாபகார்த்தமாக சமய அறிவு போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு அதில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு ஆலய முன் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் தலைவர் சிவ. கஜேந்திரகுமார், சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் கணேசநாதன், ஆலயத் தலைவர் பேராசிரியர் சுப்பிரமணியம், கிராம உத்தியோகத்தர் பரமநாதன் ஆகியோர் கலந்து பரிசில்களை வழங்கி சிறப்பித்தனர். (ஓ-421)



அனலைதீவு புளியந்தீவு நாகேஸ்வரன் ஆலயத் தேர்த் திருவிழாவில் சுவாமி வீதி வலம் வந்தபோது... (ஓ-9)



ஒட்டுசுட்டான் ஆறுமுகம் வித்தியாலயத்தில் புதிதாகப் பயிற்சி பெற்ற பாண்ட் வாத்திய அணிச் சிறார்கள். (ஓ-500)



சாவகச்சேரி மணங்குணாய் பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழாவின் போது... (ஓ)

**காணி விற்பனைக்கு**

யாழ் மாநகர சபைக்குட்பட்ட எல்லையில் பூநாறி மரத்தடிச் சந்தி, செல்வ மஹாலுக்கு அருகில் 1½ பரப்பு காணி விற்பனைக்குண்டு. (52244)(7.6.3)

தொடர்பு : 077 078 4453

**புறொயிலர் கோழிக்குஞ்சு விற்பனை**


35 நாளில் 2kgஇற்கு மேல் நிறை எடுக்கக்கூடிய Green Valley புறொயிலர் கோழிக்குஞ்சு விற்பனை. விலை 80/= பிரதி திங்கட்கிழமைகளில் விநியோகிக்கப்படும். இறைச்சிக் கோழியாக மீளக் கொள்வனவு செய்யப்படும்.
கிளிராஜ் ஊர்க்கோழிக் குஞ்சு 70/= (52241)(7.6.3)

தொடர்பு : 077 753 1344

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை நடராஜா

[புல்மோட்டை கனிப்பொருள் கூட்டுத்தாபனம்–மெக்கானிக்]



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கைதடி நுணாவிலை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை நடராஜா நேற்று (13.09.2014) சனிக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், பூமணியின் அன்புக் கணவரும், மைதிலி காலஞ்சென்ற குமுதினி மற்றும் யுதர்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராசகுமார் (தம்பி), பாஸ்கரன் (தென்மராட்சி சிற்றூர்தி சங்க மினிபஸ் சாரதி), நிரோஜி ஆகியோரின் அன்பு மாமனாரும் லலிதாதேவி (கனடா), பத்மாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் அனுசன், காலஞ்சென்ற சஞ்சுகா மற்றும் கிருஸ்ரிகா, வினோஜா, சிந்துஜா, கிருஷ்வீன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி, நுணாவில், சாவகச்சேரி.
T.P : 077 394 5889 (பி/16219)(7.6.3)

தகவல்: குடும்பத்தினர்.

## 'வோறம்' நிகழ்வு பல்கலையில் நாளை

யாழ்ப்பாணம், செப். 14

திருமறைக் கலாமன்றத்தின் அழகியல் கல்லூரியால் மாதாந்தம் நடத்தப்பட்டு வரும் வோறம் (forum) கருத்துப்பரிமாற்ற நிகழ்வு நாளை திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ் பல்கலைக்கழகத்தின் மொழி பெயர்ப்பு கற்கைகள் பிரிவின் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்துப்பரிமாற்றம் இம்முறை யாழ் பல்கலைக்கழகத்தின் மொழி பெயர்ப்பு கற்கைகள் பிரிவுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இலக்கியத்தின் அவசியம் என்னும்தலைப்பில் ஆங்கில மொழி மூலம் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கவிஞர் சோ.பத்மநாதன் கருத்துரை வழங்கவுள்ளதுடன் கலாநிதி ம.சிறீகணேசன் நிகழ்வை தொகுத்து வழங்கவுள்ளார்.

இதில்ஆர்வமுள்ளஅனைவரும் பங்குகொள்ளலாம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-10)

**மணமகள் தேவை**

யாழ்.இந்து, 33 வயது, பொறியியலாளர் U.K. PR மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு : 071 057 2519 (52245)(7.6.3)

**வீடும், கடையும் வாடகைக்குண்டு**

முஸ்லிம் கல்லூரி வீதி மாநகர சபைக்கு முன்னால் 6 அறைகள், 2 ஹோல் இணைந்த குளியலறை, வாகனத் தரிப்பிடம் என்பனவற்றுடன் வீடும், கடையும் வாடகைக்கு உள்ளன. தொடர்பு : 021 222 3212 (52243)(7.6.3)



UK, Australia, Canada, USA, New Zealand, Denmark, France, Germany, Italy, Japan, Netherlands, Norway, Switzerland, Sweden etc...

**வங்கியில் பணவைப்பு**

Saving book, Fixed Deposit, Statement

3, 6, 12 மாதங்களுக்கான (முன், பின்) பணவைப்பு (அரசவங்கிகளில் மட்டும்)

**Migration / Skill Migration / Visit Visas / Student Visas / Dependent / Business / Investment / New Applications etc...**

(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).

SKYWALK Visa Solutions

ஸ்கைவோர்க் வீசா சொலுஷன்

No.65, 1/1, Galle Road, Dehiwala. (Food City - 1st Floor)

**077-7711905** (சி.16489)

## மரண அறிவித்தல்

### திருமதி யோகம்மா மகாதேவன்



யாழ்.மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறை தையிட்டியை வசிப்பிடமாகவும் தமிழகம் சென்னை வளசரவாக்கத்தை தற்காலிக வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி யோகம்மா மகாதேவன் 10.09.2014 புதன்கிழமை இந்தியாவில் இறைவனடி சேர்ந்தார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2014) ஞாயிற்றுக்கிழமை ந.ப. 12.00 மணியளவில் இந்தியாவில் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 174 2821/919962140961 (52242)(6.4.3)

தகவல்:
ம.ஙநிவரதன்
(சாரதி.இ.போ.ச)

**இலெக்ட்ரிக் மோட்டர்**



விலை ரூபா 7,500/= இருந்து (சி.16471)


**GENERAL EQUIPMENTS (PVT) LTD.**

316 & 400, Sri Sangaraja Mw, Colombo - 12.
Tel: 2327264, 2343822, 2343823, 2430799. Fax: 2434637, 2345046.

## மரண அறிவித்தல்

# செல்லையா பாலகிருஷ்ணன்

## (பிரபல சட்டத்தரணி JPUM)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், உடுப்பிட்டி, சாவகச்சேரி, நுணாவில் மற்றும் நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா மெல்பேர்ன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பாலகிருஷ்ணன் பிரபல சட்டத்தரணி JPUM 08.09.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா- அன்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான தம்பாபிள்ளை- சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நேசமலரின் (ஆசிரியை -சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அன்புக் கணவரும், கலாநிதி மயூரன் (ஆஸ்திரேலியா), கலாநிதி ஈஸ்வரன் (ஓமான்), வாசுகன் (ஆஸ்திரேலியா), கல்பனா (ஆஸ்திரேலியா), நிர்மலராஜன் (நியூஸிலாந்து), கலாநிதி நந்தகுமார் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான கதிர்காமத்தம்பி, வீரவாகு ஆகியோரின் அன்புச் சகோதரரும், குமுதினி, கிரிஸ், கிருஷாந்தி, சேகர், வாசுகி, சாம்பவி ஆகி யோரின் அன்பு மாமனாரும், சோபி, காலஞ்சென்ற வர்களான பவளரத்தினம், குணசிங்கம் சுபத்திராதேவி மற்றும் சொர்ணமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நாகேஸ்வரன், கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகலனும், [illegible] தாரகா, நிக்கிசா, யநார்த்தனன், டானியா, தமரா, மதுரேஸ், நித்தியன், அக்சயன், திவேஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2014) ஞாயிற்றுக்கிழமை ஆஸ்திரேலியா நேரப்படி பி.ப.1.00-[illegible] மணிவரை Boyd Chapel Springvale Botanical Cemetery, 600 Princes Highway, Springvale, VIC, 3171, Australia. எனும் முகவரியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(பி/16220) (4.6.3)

தகவல்: குடும்பத்தினர்.

## அலுவலக இடம் வாடகைக்குத் தேவை

அலுவலகத் தேவைக்காக 700-800 சதுர அடியுடன் வாகனத் தரிப்பிடம் கொண்ட யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு அண்மித்ததாக யாழ்.நகரில் அவசரமாக இடம் தேவை.
நிலத்திற்கு மாபிள் பதிக்கப்பட்ட இணைந்த குளியலறை மற்றும் குளிரூட்டி வசதி (AC) விரும்பத்தக்கது. (12.3.6)

**தொடர்பு: 077 736 1457/077 772 6830**



## கேரள ஆயுர்வேத மருத்துவம்

- இருதயநோய்
- புற்றுநோய் தணிப்பு
- ஈரல் பாதிப்புகள்
- மூட்டுவலி, முதுகுவலி
- புரோஸ்ட்ரேட் பிரச்சனைகள்
- ஒற்றைத்தலைவலி
- சைனஸ் பிரச்சனைகள்
- மன அழுத்தம்
- இருமல், சளி
- படுக்கைப்புண்கள்
- நீரழிவுப்புண்கள்
- நச்சு வைரஸ் பாதிப்பு
- பாலியல் குறைபாடு

**Joint Pains???**

விரல்கள், மூட்டுகள், தோள்களில் வீக்கம், இறுக்கம் மற்றும் உடல் அசைவின் போது முதுகிலும் பாதங்களிலும் வலியா?

வலியில்லாத ஒரு வாழ்க்கைக்கு எம்மை நாடுங்கள்

Tel : 011 4388101
4388102

Hotline : 0777 555600/ 0777 708330 / 0777 708310

**Free Consultation**
Daily @ Ceylinco House
Weekdays 9.00 a.m - 5.00 p.m
Saturdays 9.00 a.m - 2.00 p.m
Monthly Clinics are conducted islandwide

FAIR PHARMA (PVT) LTD
(Kerala Ayurvedic Medicine)

Ceylinco House, 11th Floor, No : 69, Janadhipathi Mawatha, Colombo - 01.
Website : www.ayurveda.lk
E-mail : fairpharmasrilanka@yahoo.com

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA & BOI
AN ISO 9001 : 2008 QMS CERTIFIED COMPANY

தேவை

Computer,Laptop காட்சியறைக்கு Salesman & Technicians உடன் தேவை.

**i7 Computers**
124B, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 2224959, 0777 683676

## காணி விற்பனைக்கு

நுணாவில் சந்திக்கு அருகில் 3 கடைகளுடன் கூடிய 13¾ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. (52240) (4.6.3)
தொடர்பு:077 457 4244/001 416 414 7892

## சித்த ஆயுர்வேத வைத்தியம்

இன்றும் நாளையும் எமது வைத்தியர் Dr.R.Sivagurunathan அவர்களை நல்லூரில் சந்திக்கலாம்.
நாள்பட்ட வாதம், ஆஸ்துமா, இழுப்பு, நெஞ்சுச் சளி, மனநோய்கள், குழந்தை வேண்டுபவர்களின் அனைத்துவித சிகிச்சைகள். (சி/16487) (7.6.3)

தொடர்பு : 077 730 1669

## வீடு காணி விற்பனைக்கு

11 பரப்பு காணி 5 அறை, 2 பெரிய Hall, சமையல் அறை, 2 குளிக்கும் அறை, கிணறு, Tank, Pipe வசதி எல்லாம் இருக்கிறது.
தரகர் தேவை இல்லை
இணுவில் Road, Manipay
**Tel : 0112 361 036**

## சாந்திகம் வெள்ளிவிழா இன்று

வலி.வடக்கு, செப்.14
சாந்திகம் உளவள நிலையத்தின் 25ஆவது ஆண்டுவெள்ளி விழா இன்று பி.ப. 5.30 மணிக்கு சாந்திக வளாகத்தில் நடைபெற்றவுள்ளது.

ரி.விஜயசங்கர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வரவேற்புரையை சாந்திகத்தின் மூத்த அங்கத்தவர்களில் ஒருவரான திருமதிலெனாட்சிரோமி நிகழ்த்துவார். தொடர்ந்து சாந்திகத்தின் வரலாறுமற்றும்ஆவணங்கள் அடங்கிய இறுவட்டு வெளியிட்டப்படும்.

இந்தநிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத்தின் உளநல வைத்தியர் பேராசிரியர் தயா சோமசுந்தரம், அருட்தந்தை எஸ்டேமியன், வைத்திய கலாநிதிகளான எஸ்.சிவயோகன், என். சிவராஜா, ஆர்.கணேசமூர்த்தி ஆகியோரின் உரைகளும் இடம் பெறும். (ற-86)

Study & Work in **Singapore**
Learn & Earn up to Rs. 70,000/- Month
NO NEED IELTS & BANK BALANCE
குறைந்த செலவில் பயணம்
Study & Work in **Malaysia**
**Study in UK / CANADA**
UK VISA - Study / Visit / Tourist / Business Visit / Special Occasions
flex Institute
4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777 761 346
Tel : 2364157 Fax : 2501766
www.flexinstitute.lk

## உடனடி வேலைவாய்ப்புக்கள்

SAUDI OGER LTD
ரோயல் பெலஸ் - சவுதி அரேபியா

| தொழில் | அளவு | சம்பளம் |
|---|---|---|
| சுத்தம் செய்பவர்கள். | 300 | சம்பளம் 800 + இலவச உணவு +3 மாத வருடாந்த போனஸ் |

அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட கட்டணங்கள் மற்றும் சுயவிபரக்கோவையை பெற்றுக்கொள்வதற்காக மட்டுமே.

உங்கள் சுயவிபரக்கோவையை நீங்கள் விண்ணப்பிக்கும் தொழிலை தெளிவாகக்குறிப்பிட்டு அனுப்பவும் அல்லது cv@hal-group.com எனும் மின்னஞ்சல் மூலம் உங்களை பதிவு செய்துகொள்ளவும்.

ஏனைய அனைத்து விதிமுறைகளும் சவுதி அரேபிய தொழிலாளர் சட்டங்களுக்கு அமைவானதாகும்.

வெளிநாட்டு பிரமுகர்களுடனான நேர்முகப் பரீட்சை 2014 செப்டெம்பர் 18 மற்றும் 19 ஆகிய இரு தினங்களில் இடம்பெறும்.

இலவசம்

(சி/16483)(4.3.6)

துரித அழைப்பிலக்கம் - 011 7 870 870
கையடக்க தொலைபேசி - 0777 428 666, 0777 428 665

## விற்பனைக்கு

கல்வி நிலையத்தில் பாவித்த மேசை, கதிரைகள், வாங்கு, Conference Table, Multi Media, Screen, Computer, Advertisment Board மற்றும் cbz star, Pulsar-200 மோட்டார் சைக்கிள்கள் என்பன உள்ளன. (52236)(7.6.3)
தொடர்பு : 077 243 5109

## வீடு, கடை வாடகைக்குண்டு

உயரப்புலம், ஆனைக்கோட்டையில் வீடு, கடை வாடகைக்குண்டு.
தொடர்பு:077 776 1449/077 136 2122 (52237) (4.6.3)

## வீடு வாடகைக்குண்டு

கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன்பாக சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு : 077 027 8780 (52235) (7.6.3)

## மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் மொத்தமாக விற்பனைக்குண்டு

மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு கொள்விலையில் கழிவு வழங்கப்படும். (52232) (4.6.3)
தொடர்பு: 077 994 7442/077 778 1614

## வேலை ஆள் தேவை

கண்டியில் உள்ள தொழில் அதிபரின் வீட்டிற்குத் தங்கி நின்று வீட்டு வேலைகள் செய்வதற்கு 30 வயதுக்கு மேற்பட்ட பெண் ஒருவர் தேவை.
(52252) (12.3.6)
**தொடர்பு: 077 370 9898**

## நிரந்தர தொழில் வாய்ப்பு

கொழும்பை அண்மித்த நவீன தொழிற்சாலைகளான ஜாம்/டொபி/சொக்லேட்/பால்மா/கிளவுஸ்/நூடில்ஸ்/காமென்ட் போன்றவற்றுக்கு உற்பத்தி/லேபல்/பொதியிடல் களஞ்சிய பிரிவுகளுக்கு 18-50 வயது ஆண்/பெண் உடனடியாகத் தேவை. சம்பளம் 18,000/=, 38,000/= உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் வருகை அன்றே வேலைக்கு செல்லலாம். (48999) (7.6.3)
மேலதிக விவரங்களுக்கு :
077 111 6770, 077 683 8231

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1979 ஆம் ஆண்டு பிறந்த, மிருகசீரிடம் 2 ஆம் பாதம், ... எட்டில் செவ்வாய் உள்ள பட்டதாரி மணமகளுக்கு ஏற்ற மணமகன் தேவை. (47874) (4.6.3)
தொடர்பு: 077 214 3750

giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH

SRI LANKAN-GERMAN DEVELOPMENT COOPERATION

## Vacancies in Dairy Development Team (Jaffna District)

The Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) is an international cooperation enterprise for sustainable development with worldwide operations. As a federally owned enterprise, we support the German Government in achieving its objectives in the field of international cooperation for sustainable development. GIZ drives projects that support Sri Lanka's development objectives and works with stakeholders from across the spectrum in the government, public and private sectors.

The Dairy Development Project Northern Province aims at improving milk production and income for dairy farmers in Chavakachcheri division in Jaffna district. It is being jointly implemented by Tetra Laval Food for Development Office, Cargills (Ceylon) PLC and GIZ. The project uses unique methodologies developed and tested in a number of Asian countries. It is successfully working with a growing number of farmers. The objective is to replicate the successes of these pilot project in Chavakachcheri into other divisions, districts and eventually nationwide.

The project invites applications from highly motivated and committed professionals possessing a background in agriculture, ideally dairy, Tamil speaking and familiar with the local context.

Duty Station: **Jaffna District, Chavakachcheri Division**

### (1) Artificial Insemination Technician

We are searching for an extremely organized, passionate and capable individual to help expand our Dairy cow care and breeding program. She/he will be responsible for providing Artificial Insemination services to farmers who are involved in the project.

**Essential Skills and Experience:**

- An AI training received by Dept. of Animal Production & Health or any other professional institution
- At least 2+ years experience conducting Artificial Insemination Services in the field
- Must possess a good understanding of improved forage varieties, vaccinations, De-ticking treatment, De-worming treatment and Mineral mixtures
- Possess a high degree of integrity with proven competency to establish and maintain good working relations with stakeholders
- Knowledge of proper record keeping on AI system
- Willing to coordinate and share AI related information with divisional veterinary offices
- Ability to swiftly connect with farmers
- Ability to multitask and prioritize – You will be visiting several farmers per day and must be able to complete the tasks in order of priority
- Excellent communication and high level of professionalism

### (2) Extension Assistant

Incumbent will be responsible for supporting extension services to farmers, as well as assist the Extension Officers during their farmers field training and technical knowledge transmission session in the field.

**Essential Skills and Experience:**

- Completion of secondary school education
- At least 2 years of proven ability and experience in extension work of agriculture/ dairy farming
- Prior experience in community mobilization would be advantageous
- Strong ability to work within deadlines and long hours in the field
- Good communication and high level of professionalism

The selected candidate must be physically fit, since the job involves a substantial amount of time being spent on field at various small dairy farms (80% of time spent in field).

Qualified female applicants are strongly encouraged to apply for these positions.

Please write to giz-hrsrilanka@giz.de for detailed job descriptions plus a brief of the project.

Qualified applicants must submit an updated CV including *a one page-writing on their professional experience* to giz-hrsrilanka@giz.de or mail to the Human Resource Unit, GIZ-Colombo, No. 6, Jawatte Avenue, Colombo 5. **before cob 29th of September 2014.**

*We thank all applicants but only the short listed candidates will be contacted.*

## வீடு வாடகைக்கு

யாழ். K.K.S வீதி கொக்குவில் சந்தியில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு. வியாபார தல மாகப் பாவிக்கவோ/பல்கலைக்கழக மாணவர் களுக்கோ உகந்தது. தொடர்பு : 071 814 1506 (சி/15486) (7.6.3)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பிறவுண் வீதியில் (Brown Road) நல்ல அமைதியான சூழலில் காணி விற்பனைக்கு உண்டு.
(52237) (7.6.3) தொடர்பு : 072 959 6597

## கார் விற்பனைக்கு

நிசான் N 16 HE.....தொடர் இல, சில்வர் கலர், மனுவல்கியர் கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 075 668 8118 (49776) (45.6.3)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ Canada PR உள்ள 1987 இல் பிறந்த சுவாதி நட்சத்திரம் (devorced) பெண்ணுக்கு தகுந்த வரனை (மணமகன்) தேடுகின்றனர் (யாழ்ப்பாணத்தவர் விரும்பத்தக்கது)
தொடர்பு:077 679 2275 (f/16478) (4.6.3)

## வீடு, காணி விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு பிரதேச செயலகத்துக்கு அருகில் 5 பரப்புடன் கூடிய காணியும் வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 044 9243 (சி.16480) (45.6.3)

## வீடு வாடகைக்கு

இல.13/2, சேர்.பொன்.இராமநாதன் வீதி, (Raja Cream House) அருகில் 2அறை, தொலைபேசி, இணைந்த குளியலறை யுடன் வீடு உடனடியாக வாடகைக்குண்டு. நியாயமான வாடகையுடன் முற்பணம் எதிர்பார்க் கப்படும். (52229) (12.3.6)
தொடர்பு:
**077 729 4322/021 320 2359**

## அறைகள் நாள் வாடகைக்கு

ஒருவருக்கு 600/=, இருவர் 1,500/=நால்வர் 2,500/=
(Attached Bathroom)
Hotal Villa City
422, Galle Road, Wellawatte
T.P: 072 255 2222 (f/15793) (4.6.3)

## ஆதனம் கடைக் கட்டடங்களுடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில், கஸ்தூரியார் வீதி சந்திக்கு அருகில் நிலப்பரப்பு 4 (நான்கு), குழி 9.95 (ஒன்பது தசம் ஒன்பது ஐந்து) விஸ்தீரணம் உடைய ஆதனம் இரண்டு கடைக் கட்டடங்களுடன் விற்பனைக்குண்டு.
(51227) (12.3.6) **தொடர்பு: 077 395 0052**

## வீடு விற்பனைக்குண்டு

மல்லாகம் நீலியம்பனை கோயில் வட்டாரம் கைலாய வைரவர் கோயிலுக்கு அருகில் 6½ பரப்புக் காணி வான் பயிர்களுடன் கூடிய பெரிய வீடும் விற்பனைக்குண்டு. இந்து சமயத்தவர் விரும்பத்தக்கதாகும். (52230) (12.3.6)
தொடர்பு: K.S.நாதன்
மில் லேன், ஆண்டார் சீமா, மல்லாகம்.
**077 022 9428/077 724 3115**

# பிழையான வெளிநாட்டு கொள்கைகளே இலங்கையுடைய தோல்விக்கு காரணம்

## விமர்சிக்கின்றார் முன்னாள் இராஜதந்திரி தயான் ஜயதிலக்க

கொழும்பு, செப்.14

இலங்கையிடம் சரியான வெளிநாட்டுக் கொள்கைகள் இல்லாமையே, சர்வதேச ரீதியில் தோல்வி மேல் தோல்வியைச் சந்திப்பதற்குப் பிரதான காரணம் என்று தெரிவித்துள்ளார் முன்னாள் வெளிநாட்டு இராஜதந்திரியும், அரசியல் ஆய்வாளருமான கலாநிதி தயான் ஜயதிலக்க.

இலங்கைக்கு எதிராக ஐ.நா ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தொடராக கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டமைக்கு தகுதியில்லாத வெளிநாட்டுத் தூதுவர்கள் நியமிக்கப்பட்டமை ஒன்றே காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிங்கள மொழி ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கியுள்ள நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"இதுபோன்ற பல காரணங்கள் உள்ளன. சரியானதோ, பிழையானதோ பரவாயில்லை. சர்வதேச விவகாரம் தொடர்பிலான வியூகம் ஒன்று இருக்க வேண்டும். வெளிநாட்டுக் கொள்கையொன்று இருக்க வேண்டும். இந்த இரண்டும் ஆய்வின் அடிப்படையிலேயே அமையப் பெற வேண்டும். அவ்வாறானதொரு ஆய்வொன்று இருப்பதாகத் தென்படவில்லை. இலங்கைக்கு வெளிநாட்டுக் கொள்கை தொடர்பில் சரியான பார்வையொன்று இல்லை"- என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)

## தொடர்ச்சிகள்

### மஹிந்தவை

ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தொடரின் ஒரு பகுதியாக பொதுநலவாய தலைவர்களின் மாநாடொன்று நடைபெறவுள்ளது. பொது நலவாயத்தின் சீர்திருத்த நடவடிக்கைகள் உட்பட பல விடயங்கள் குறித்து விவாதிக்கவுள்ள இந்த மாநாட்டிற்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த தலைமைதாங்குகிறார்.

எனினும், இந்தியப் பிரதமர் மோடி இந்த மாநாட்டில் கலந்துகொள்ளமாட்டார் எனவும், அவர் 27ஆம் திகதி பொதுச்சபையில் உரையாற்றவுள்ளார் எனவும், 29, 30 ஆம் திகதிகளில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவை சந்திக்கவுள்ளார் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பொதுநலவாய மாநாட்டில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் கலந்துகொள்வார் எனவும் அதிகாரிகள் மேலும் கூறியுள்ளனர். .

இலங்கை ஜனாதிபதி அமெரிக்காவில் எத்தனை நாள் தங்கியிருப்பார் என்பது குறித்து தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை. அவர் செப்டெம்பர் 25 ஆம் திகதி உரையாற்றுவார் என்று மாத்திரமே தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்திய -இலங்கை தலைவர்கள் சந்திப்பார்களா? என்ற கேள்வி எழுந்துள்ளது. (ற)

### மூன்றாவது

லும் போட்டியிட முடியும். இந்தத் திருத்தம் 2010 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் கொண்டு வரப்பட்டிருந்தது. அதன்பின்னரே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரண்டாவது ஆட்சிக் காலத்தை ஆரம்பித்திருந்தார்.

இந்த நிலையில், முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதியாகப் போட்டியிட முடியாது என்பதைத் தெரிவித்துள்ளார். அத்துடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாகவும் போட்டியிட முயன்றால் அவருக்கு எதிராக வழக்குத் தொடுப்பேன் என்றும் கூறியிருந்தார்.

இந்தக் குழப்பங்களை அடுத்து, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உயர் நீதிமன்றத்திடம் விளக்கம் கேட்டிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. 'அரசமைப்பு ஏற்பாடுகள் தொடர்பிலோ அல்லது சட்ட விவகாரங்கள் சம்பந்தமாகவோ தமக்குத் தெளிவோ, விளக்கமோ தேவைப்படுகின்றன என்று ஜனாதிபதி கருதினால் அவ்விடயம் குறித்து உயர்நீதிமன்றத்திடம் அவர் கருத்துக் கேட்கலாம்' என்று அரசமைப்பின் 29 ஆவது பிரிவு கூறுகின்றது. ஆலோசனை நியாயாதிக்கம் என்ற தலைப்பில் அரசமைப்பின் கீழ் உயர்நீதிமன்றத்துக்கு இந்த விசேட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதையடுத்து ஜனாதிபதிக்கு கேட்ட விடயம் தொடர்பில் கடந்த 10ஆம் திகதி விளக்கம் வழங்கப்பட்டுள்ளது என்றும், அதையடுத்தே அவர் ஜனாதிபதித் தேர்தலுக்கான நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

எதிர்வரும் நவம்பர் 20 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலுக்குரிய அறிவிப்பு விடுக்கப்படுவதோடு, அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 7 ஆம் திகதிக்கும் 11 ஆம் திகதிக்கும் இடையில் தேர்தல் நடத்தப்படும் என்றும், ஜனவரி மாதம் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் போப்பாண்டவர் இலங்கைக்கு வருகை தருவதனால் அதற்கு முன்னதாகவே ஜனாதிபதித் தேர்தலை நடத்தி முடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்றும் மேலும் கூறப்படுகின்றது. (ற-5)

### சரியான

படுகின்றது. கொலை செய்யப்பட்ட முஸ்லிம் மக்கள் குருக்கள் மடம் கடற்கரையில் புதைக்கப்பட்டனர் என்றும் கூறப்படுகின்றது.

அது தொடர்பில் கடந்த மார்ச் மாதம் மட்டக்களப்பில் நடைபெற்ற, காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவிடம் முறையிடப்பட்டிருந்தது. கொல்லப்பட்ட தமது உறவினர்களின் சடலங்களை மீட்டுத் தருமாறும், அதனை தமது சமய முறைப்படி அடக்கம் செய்ய வேண்டும் என்றும் அந்த முறைப்பாட்டில் கூறப்பட்டிருந்தது.

அதற்கமைய, முஸ்லிம் மக்கள் புதைக்கப்பட்டனர் என்று, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மாகாணசபை உறுப்பினர் சிப்திலி பாறூக் அடையாளம் காட்டிய இடத்தை காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் உறுப்பினர்கள் நேரில் சென்றுபார்வையிட்டிருந்தனர்.

இதன்பின்னர் கடந்த ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி, இந்தச் சம்பவம் தொடர்பில் களுவாஞ்சிக்குடி நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டது குறித்த வழக்குக்கு அமைவாக, புதைகுழியைத் தோண்டுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும், அவை பல தடவைகள் ஒத்திவைக்கப்பட்டன.

இந்த நிலையில், களுவாஞ்சிக்குடி நீதிமன்ற உத்தரவின் பேரில் எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதி அகழ்வுப் பணிகள் நடைபெறவுள்ளன.

இதற்கு முன்னோடியாக குறித்த இடத்தை அடையாளப்படுத்துவதற்காக சட்ட மருத்துவ நிபுணர், புதை பொருள் மற்றும் மண்ணியல் ஆய்வுத் துறை நிபுணர் உட்பட 15 பேர் அந்த இடத்தை பார்வையிட நேற்றுச் சென்றிருந்தனர்.

புதைகுழிகள் தொடர்புடைய வழக்கொன்றின் முறைப்பாட்டாளரும் காத்தான்குடி நகர சபை உறுப்பினருமான மஜீத் ஏ. றவூப் ஒரு இடத்தை அடையாளம் காட்டினார். ஆனால் கிழக்கு மாகாண சபை உறுப் பினரான சிப்திலி பாறூக் வேறு மூன்று இடங்களை அடையாளம் காட்டினார். அதையடுத்து அந்த இடங்கள் தொடர்பாக முரண்பாடு ஏற்பட்டது.

இது தொடர்பாக நிபுணர் குழுவின் தலைவரான சட்ட மருத்துவ நிபுணர் அஜித் தென்னக்கோன், குறித்த இடம் தெளிவாக அடையாளப்படுத்தப்படும் என்ற நம்பிக்கையுடன் திட்டமிடல் பணிகளுக்காக வந்திருந்தோம். ஆயினும் அந்த இடம் தொடர்பாக ஏற்பட்டுள்ள முரண்பாடுகளால், எமது பணியைச் செய்ய முடியவில்லை"- என்று தெரிவித்தார்.

**இந்து அமைப்புகள் அச்சம்**

அதேவேளை, இந்த அகழ்வுப் பணிகளின் போது அந்தப் பகுதியில் ஏற்பட்ட சுனாமிப் பேரழிவின்போது அவசர அவசரமாக இந்து சமய ஆசாரப்படி புதைக்கப்பட்ட உடல்களுக்கு களங்கம் ஏற்படலாம் என்று இந்து அமைப்புகள் கவலை வெளியிட்டுள்ளன.

குறித்த இடத்தைப் பார்வையிட வந்த நிபுணர்களை நேற்றுச் சந்தித்த குருக்கள்மடம் இந்து இளைஞர் பேரவையின் தலைவரான எஸ். சுதர்சனன், அந்தப் பகுதியில் சுனாமியின் போது உயிரிழந்த 9 பேரின் சடலங்கள் தம்மால் அடக்கம் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார்.

அதற்குப் பதிலளித்த சட்ட மருத்துவ நிபுணர் குழுவின் தலைவரான அஜித் தென்னக்கோன், நீதிமன்ற உத்தரவின் பிரகாரமே தமது பணிகள் இடம்பெறவிருப்பதால், இது தொடர்பாக நீதிமன்றமே தீர்மானம் எடுக்க வேண்டும். அதனால் நீதிமன்றத்தை நாடுங்கள்"- என்று தெரிவித்தார். (ற-5)

### உண்மையை

லங்கா சுதந்திரக் கட்சி ஆராய்வதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். அத்துடன் அமைச்சர் தினேஷ் குணவர்தன, இது இலங்கையின் அரசியலமைப்பை மீறிய செயல் என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சரின் கருத்தை வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஒரு அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஏற்கனவே நடைமுறையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச நிறுவனம் ஒன்றிடம் எமது முறைப்பாடுகள் தொடர்பில் 'தயவு செய்து விசாரியுங்கள்' என்று கேட்டால், அதை அந்த நபரால் மேற்கொள்ளப்படும் ஒரு சட்ட விரோத நடவடிக்கையாக கொள்ள முடியுமா ?

அதே போன்று சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பும், அதன் அதிகாரிகள் குழுவும் எமது முறையீடுகள் தொடர்பில் இங்கு வந்து விசாரணை நடத்துவதற்கு அரசு அனுமதிக்க வேண்டும் என்று கேட்பது, நாங்கள் செய்கின்ற சட்டத்துக்குப் புறம்பான செயலா?"- என்று அவர் குறிப்பிட்டார்.

"இலங்கைக்குள்ளே தனிநாடு ஒன்றைக் கேட்பதற்கு ஆதரவளிக்கக் கூடாது என்று கூறும் அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தையும் இதன் போது மேற்கோள்காட்டியிருக்கின்றார்கள். இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் தொடர்பில் உலக மன்றம் ஒன்றிடம் விண்ணப்பிப்பது எந்த வகையில் தனிநாடு உருவாக்குவதற்கான முயற்சியாக முடியும். போர்க் குற்ற விசாரணைகளுக்காக நாட்டுக்குள் எந்தவொரு குழுவையும் வர விடுவதில்லை என்ற கொழும்பு அரசின் முடிவு தொடர்பில் வடக்கு மாகாணசபை சில விமர்சனங்களைக் கொண்டுள்ளது.

உண்மை நிலைநாட்டப்படுவதற்கு குறுக்கே கொழும்பு நிற்கக் கூடாது என்றுதான் கேட்கின்றோம். உண்மையை நிலைநாட்டுவது என்பது, எப்படி துரோக நடவடிக்கையாக அமைய முடியும்.

நான் மூத்த நீதிபதிகள் குழாத்தைச் சேர்ந்தவன். அமைச்சர் கூறியது தொடர்பில் அரசு சார்பாக யாராவது என்னிடம் கேட்பார்களாக இருந்தால், அமைச்சர்கள் உணர்ச்சி மேலீட்டால் கூறியது சம்பந்தமாக அவர்களின் எண்ணத்தை மாற்ற சில விடயங்களைச் சொல்லியிருப்பேன்."- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற-5)

### பாப்பாமோட்டை

குழு 12 கிலோ 500 கிராம் நிறையுடைய கேரளாக் கஞ்சாப் பொதியைக் கைப்பற்றியுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த ஜீ.ஜே.குணதிலக்க, " மீட்கப்பட்ட கஞ்சா பொதி 12 கிலோ 500 கிராம் நிறை கொண்டது. அது கேரளா கஞ்சாவாகும். இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா, ஆத்திக்குளம் பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய நபர் ஒருவரும் கைது செய்யப் பட்டுள்ளார். மீட்கப்பட்ட கஞ்சா 45 இலட்சம் ரூபா பெறுமதியானது."- என்று தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர் தற்போது விடத்தல் தீவு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றார் என்றும், விசாரணைகளின் பின்னர் அவர் மன்னார் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற-56)

### எம்மை

யட்சகர் பி.விமலசேன நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கேள்வியெழுப்பியிருந்தார். இது தொடர்பில் முதலமைச்சரிடம் 'உதயன்' வினவியது. அதற்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு முதலமைச்சர் குறிப்பிட்டார்.

"எனது பாதுகாப்பு குறித்து நான் முறைப்பாடு செய்யவில்லை. மக்களின் பாதுகாப்புக் குறித்தே முறைப்பாடு செய்திருந்தேன். பொது நிகழ்வுகளில், இராணுவத்தினர் சுற்றிவளைத்து ஒளிப்படங்களை ஏன் எடுக்கின்றார்கள் என்றுதான் கேட்டிருந்தேன். அது எங்களுடைய மக்களின் மனங்களில் பயத்தை ஏற்படுத்துவதற்காக அவ்வாறு செய்கின்றார்கள்.

இன்றுள்ள தொழில்நுட்பம், கண்டுபிடிப்புக்களைக்கொண்டு யார்வேண்டுமானாலும்என்னை எவ்வளவு ஒளிப்படங்கள் வேண்டுமானாலும் எடுக்கலாம். அத்தோடு எனது உடல் மொழிகளையும் மதிப்பீடு செய்து கொள்ளலாம். ஆனால் யார் படம் எடுக்கின்றார்கள் ? அந்தப் படங்கள் ஏன் முக்கியமானவை ? யாருக்கு அவை முக்கியமானவை என்பதை நாங்கள் கருத்தில் எடுக்க வேண்டும்.

பின்தங்கிய கிராம மக்கள் கடந்த காலங்களில் வெளிச் சொல்ல முடியாத துன்புறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளனர். 'எவரும் எங்களை மீறியவர்கள் அல்லர்' என்பதே இராணுவத்தினர் அவர்களுக்குச் சொல்லும் செய்தியாக உள்ளது.

இந்த விடயத்தை பொலிஸாரிடம் முறையிட வேண்டிய அவசியம் கிடையாது. இது இராணுவத்தினருக்கும் அவர்களது நடவடிக்கைகளுக்கு எதிராகவும் சொல்லப்படும் அரசியல் முறைப்பாடு"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-5)

### கரையொதுங்கிய

கையில் பச்சை குத்தப்பட்டிருந்தமை மற்றும் அணிந்திருந்த ஆடைகள் குறித்த தகவல் உட்பட மீனவரது புகைப்படம் என்பன இந்தியத் துணைத் தூதரகத்திடம் இருந்து இராமேஸ்வரம் மீன்வளத் துறையினருக்கு அனுப்பி வைக்கப்பட்டதை அடுத்து மீனவரது உறவினர்கள் சடலத்தை உறுதிப்படுத்தியுள்ளனர்.

அதேவேளை, இந்திய மீனவர்கள் மூவர் காணாமற்போயுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவர்களின் உறவினர்களும் நேற்றுக் கண்டெடுக்கப்பட்ட சடலத்தை அடையாளம் காட்டுவதற்காக அழைக்கப்பட்டிருந்தனர் என்று இராமேஸ்வரம் தகவல்கள் தெரிவித்தன. (ற-14)


## மரண அறிவித்தல்

### கதிர்காமு செல்லத்ததம்பி



மாவை கலட்டியைப் பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர் காமு செல்லத்தம்பி நேற்று (13.09.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கண்மணியின் அன்புக் கணவரும் வசந்திராதேவி, மஞ்சு(சுவிஸ்), ஜீவன்(சுவிஸ்), சத்தியநாதன், பாப்பா, ஐங்கரநாதன்(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சீவரத்தினம், ஈசன் (சுவிஸ்), கலா(சுவிஸ்), கலா, ஜெயா, காஞ்சி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் பிருந்தா, விதுசா, பிறேமி, வியாசன், வசி, நிவேது, துஷாரா, சிந்து, துளசி, டிலக்ஷன், தாரணி, யசிதரன், தாட்ஷாயினி, யஷ்ரின், வைஷ்ணவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(14.09.2014) ஞாயிற்றுக் கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சேச்லேன் தாவடி கிழக்கு,**
**கொக்குவில்**

தகவல்:
**பாப்பா** (மகன்).
T.P. 077 318 0760

(52270)

## இறுதியாட்டத்திற்கு முன்னேறிய பிரதேச செயலக அணிகள்



கரணவாய்,செப்.14

யாழ். மாவட்ட செயலக அணிகளுக்கிடையில் நடத்தப்படும் அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்துக்கான வலைப்பந் தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ். பிரதேச செயலக அணியும் தெல்லிப் பழை பிரதேச செயலக அணியும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன.

யாழ். மாவட்ட செயலகத்துக் குட்பட்ட 15 அணிகள் பங்கு பற்றிய அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்கான வலைப்பந் தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதியாட்டங்கள் நேற்று மாலை இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றன.

இதில் முதலாவதாக இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் யாழ். பிரதேச செயலக அணியும் சங்கானைப் பிரதேச செயலக அணியும் மோதின. முதல் பாதி ஆட்டத்தில் இரு அணியினரும் சமபலத்துடன் மோதியபோதும் இடைவேளையின் பின்னர் மிகவும் நிதானமாக விளையாடிய யாழ். பிரதேச செயலக அணி 16 : 7 என்றபுள்ளிகள் அடிப் படையில் சங்கானை பிரதேச செயலக அணியை வீழ்த்தி இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது

அடுத்து இடம்பெற்ற இரண்டாவது அரை யிறுதியாட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் வேலணைப் பிரதேச செயலகஅணியும்மோதின. ஆரம்பம் முதல் இறுதிவரை ஆதிக்கம் செலுத்திய தெல்லிப் பழை பிரதேச செயலக அணி 24 : 7 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு முன்னேறியது. (ரி-108)

# கல்கோபன் அதிரடி

## வென்றது ஜொலிஸ்ரார்

யாழ்ப்பாணம்,செப்.14

கல்கோபனின் அதிரடி ஆட்டத்தின் மூலம் ஸ்ரான்லி விளையாட்டுக்கழகத்தை 8 இலக்குகளால் வெற்றி கொண்டது ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி.

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றும் 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண் டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணி 30 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சந்திர பிரசன்ன 42 ஓட்டங்களையும், சம்சண் 28 ஓட்டங்களையும், விதூர்சன், கஜதீபன் ஆகியோர் தலா 17 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி சார்பில் சாரங்கன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 25 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், மதுஷன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 23 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும், சோபன் ஒரு பந்துப் பரிமாற்றம் பந்துவீசி 8 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

162 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியினர் 14 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தனர். இதில் கல்கோபன் 86 ஓட்டங்களையும், மதுஷன் 30 ஓட்டங்களையும், சஜிகன், மணிவண்ணன் ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 24, 13 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் ஸ்ரான்லி விளையாட்டுக்கழக அணி சார்பில் மதன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 23 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும், வசிகரன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 40 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் வீழ்த்தினர். (ரி- 23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,செப்.14

பொற்பதி விளையாட்டுக்கழகம் நடத்தும் சிவகுரு ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை புத்தூர் எவ ரெஸ்ட் விளையாட்டுக்கழக மைதானத்தில் பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. இறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோத வுள்ளது. (ரி- 23-108)

யாழ்ப்பாணம்,செப்.14

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றும் 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக் கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

காலை 8.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சென்ற லைட்ஸ் புளுஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஸ்கந்தஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மதியம் ஒரு மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சென்ற லைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.சென்றல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி- 23)

கரணவாய்,செப்.14

திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை கழக மைதானத்தில் இடம் பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு :

பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் வடமராட்சி கிழக்கு சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகமும், பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வலிகாமம் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (ரி- 108)

# கோல் மழையால் அடுத்த சுற்றுக்கு முன்னேறின சமரபாகு நியூட்டன், கற்கோவளம் உதயதாரகை



கரணவாய்,செப்.14

மனோகரன் தொடர்ச்சியாக மூன்று கோல்களை அடித்து ஹற்றிக் கோல் மழை பொழிய 6:0 என்ற கோல்கள் அடிப்படையில் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் கரவை சுடர் விளையாட் டுக்கழகத்தை தோற்கடித்து அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. அத்துடன் மற்றொரு ஆட்டத்தில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் 4:0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் கரவைச்சுடர் விளையாட்டுக்கழகமும், சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழகமும் மோதின.

ஆட்டம் ஆரம்பத்தில் மிகவும் பரபரப்பாக இடம்பெற்ற போதும் பின்னர் நியூட்டன் அணியினரே முழுமையான ஆதிக்கம் செலுத்தினர். ஆட்டம் ஆரம்பமாகி 15 மற்றும் 17 ஆவது நிமிடங்களில் நியூட்டன் அணி வீரர்களான தார்மீகன், மனோகரன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் போட கரவைச்சுடரின் விளையாட்டில் சற்று சோர்வு நிலை ஏற்பட்டது. இதனால் 2:0 என்ற நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகியதும் எதிரணியினர் தம்மை தயார் நிலைக்கு கொண்டு வருவதற்குள் நியூட்டன் அணியின் மனோகரன் 3 ஆவது மற்றும் 6 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து கோல்களைப் போட எதிரணியினர் நிலை குலைந்தனர். இதனை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி நியூட்டன் அணியின் ரதீஸ், தார்மீகன் ஆகியோர் 12 ஆவது, 20 ஆவது நிமிடங்களில் மேலும் இரண்டு கோல்களை அணிக்காகப் போட 6:0 என்ற கோல்கள் அடிப்படையில் நியூட்டன் அணி வெற்றி பெற்றது.

அடுத்து இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகமும், கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகமும் மோதின. போட்டி ஆரம்பம் முதலே அமர்க்களமாக இருந்தது. இரு அணியினரும் கோல் போடுவதற்கு கடுமையான முயற்சிகளை மேற்கொண்ட போதும் அவை பயனளிக்காத நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் தமது ஆட்டத்தின் போக்கினை மாற்றியமைத்த உதயதாரகை அணியினர் முன்னேறித் தாக்கும் முயற்சிகளில் முனைப்புக் காட்டினர். அதற்கு கைமேல் பயனும் கிடைத்தது. இடைவேளையின் பின் 2 ஆவது, 9 ஆவது நிமிடங்களில் மனோகரன், தர்சன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும், 5 ஆவது, 10 ஆவது நிமிடங்களில் பிரணவன் இரண்டு கோல்களையும் போட 4:0 என்ற கோல் கணக்கில் உதயதாரகை அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (ரி- 108)

# பாரதிதாசன் கிண்ணத்தை கைப்பற்றியது உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக்கழகம்

கரணவாய், செப்.14

அல்வாய் பாரதிதாசன் சனசமூக நிலைய பொன் விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட அணிக்கு 5 பேர் பங்குபற்றும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக்கழகம் பொன்விழா வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

பொன் விழாவை முன்னிட்டு அல்வாய் பாரதி தாசன் விளையாட்டுக்கழகம் நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி மற்றும் இறுதியாட்டங்கள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு கழக மைதானத்தில் இடம் பெற்றன.

இதில் முதலில் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் உபய கதிர்காமம் யூ.கே. விளையாட்டுக் கழகமும், கூவில் தீபஜோதி விளையாட்டுக்கழகமும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் 10:8 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று தீபஜோதி அணி இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

அடுத்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக்கழகமும் மாதனை இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதின. மிகவும் விறுவிறுப்பாகவும், பரபரப்பாகவும் இடம் பெற்ற ஆட்டத்தில் எந்த அணி வெற்றி பெறும் என்று கூறமுடியாத வகையில் இரு அணியினரும் அபாரமாக விளையாடினர். ஒரு கட்டத்தில் இரு அணியினரும் 5:5 என்று சமநிலையில் இருந்தனர். தொடர்ந்தும் மாறி மாறிப் புள்ளிகளைப் பெற்ற போதும் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக்கழகம் இறுதி நேரத்தில் அதிரடியாக ஆடி 11:10 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தெரிவானது.

தொடர்ந்து இடம்பெற்ற இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக்கழகமும் கூவில் தீபஜோதி விளையாட்டுக்கழகமும் மோதின. இரு அணியினரும் சமபலம் கொண்டவையாக காணப்பட்டதால் ஆட்டம் கண்ணுக்கு விருந்தாக அமையும் என பார்வையாளர்கள் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் ஆட்டத்தில் சிவகுமரன் அணி ஆதிக்கம் செலுத்தியது. இதில் 35:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக்கழகம் கூவில் தீபஜோதி விளையாட்டுக்கழகத்தைவீழ்த்தி வெற்றி பெற்றதுடன் பாரதிதாசன் கிண்ணத்தையும் சுவீகரித்தது. (ரி- 108)

# விலகினார் மோர்க்கல்



சம்பியன் லீக் தொடரிலிருந்து கொல்கத்தா அணியின் வேகப்பந்து வீச்சாளர் மோர்னே மோர்க்கல் தோள்பட்டை காயம் காரணமாக விலகினார்.

ஆறாவது சம்பியன் லீக் ரி - 20 தொடரின் தகுதியாட்டங்கள் நேற்று ஆரம்பமாகின. தொடரின் முதன்மைச் சுற்றுக்கள் எதிர்வரும் 17ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளன.

இந்த நிலையில் தொடர்ச்சியான தோள்பட்டை காயத்தால் அவதிப்பட்டு வரும் கொல்கத்தா அணியின் வேகப்பந்து வீச்சாளர் மோர்னே மோர்க்கல் தொடரிலிருந்து விலகியுள்ளார். இந்த ஆண்டுக்கான தொடரில் கொல்கத்தா அணியிலிருந்து விலகும் மூன்றாவது வெளிநாட்டு வீரர் இவர் ஆவார். ஏற்கனவே ஆஸ்திரேலியாவின் கிறிஸ் லயன் தோள்பட்டையில் மேற்கொள்ள வேண்டிய சத்திர சிகிச்சை காரணமாகவும், பங்களாதேஷின் சகிப் அல் ஹசன் தடை காரணமாகவும் விலகியுள்ளனர்.

மோர்க்கல் அணியிலிருந்து விலகியுள்ளதை அடுத்து அவருக்குப் பதிலாக இலக்குக் காப்பாளரும், துடுப்பாட்ட வீரருமான மன்விந்தர் பிஸ்லா தெரிவு செய்யப்பட்டுள்ளார். தற்போது கொல்கத்தா அணியில் கலிஸ், சுனில் நரைன், டஸ்காட்டே, அன்ட்ரு ரசல், பட் கம்மின்ஸ் உள்ளிட்ட ஐந்து வெளிநாட்டு வீரர்கள் சம்பியன் லீக் தொடரில் விளையாடவுள்ளனர். (ரி)

# டோனிக்கு கௌரவம் கிடைக்கவில்லை

## ரவி சாஸ்திரி

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் மகேந்திர சிங் டோனியின் தகுதிக்கு உரிய கௌரவம் அவருக்கு இன்னும் கிடைக்கவில்லை என்று கருதுவதாக முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரரும், இந்திய அணியின் இயக்குநருமான ரவி சாஸ்திரி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது : இந்திய கிரிக்கெட் அணிக்கு தலைவராக இருந்தவர்களில் இதுவரை யாருக்குமே கிடைக்காத பாராட்டுகள் டோனிக்கு கிடைத்துள்ளன. அதற்கு அவர் முழுத் தகுதியானவர்தான். அவரது தலைமையில்தான் இந்திய அணி பல சாதனைகளைப் படைத்துள்ளது. இப்போதும் கூட டோனியின் தகுதிக்குரிய கௌரவம் அவருக்கு இன்னும் கிடைக்கவில்லை என்றே கூற வேண்டும் என்று அவர் கூறினார். (ரி)



# அஜ்மலின் தடைக்கு வட்சன் காரணம்?

பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் சயீட் அஜ்மல் பந்து வீசத் தடை விதித்ததற்கு ஆஸ்திரேலிய வீரர் ஷேன் வட்சன் தொடர்ச்சியாக அளித்த புகார்களே காரணம்என்று கூறப்படுகிறது. இலங்கைஅணிக்கெதிரான டெஸ்ட் தொடரின் போது சயீட் அஜ்மலின் பந்து வீச்சில் எழுந்த சர்ச்சை காரணமாக சர்வதேச கிரிக்கெட் சபை அவருக்குத் தடை விதித்தது. இந்த நிலையில் தற்போது இதற்குக் காரணம் ஆஸ்திரேலிய வீரர் ஷேன் வட்சனின் புகார்கள் தான் என்று கருத்துக்கள் கிளம்பியுள்ளன. 2009 ஆம் ஆண்டு டுபாயில் நடந்த ஒருநாள் ஆட்டம் ஒன் றின் போது ஷேன் வட்சன், சயீட் அஜ்மலின் பந்து வீச்சு எறிவது போல் உள்ளது என்று ஆட்ட நடுவர்களிடம் தொடர்ச்சியாக வாதாடியபடி இருந்தார். அந்த ஆட்டத்தில் தொடர்ந்து நியூசிலாந்தின் பில்லி பௌடன் மற்றும் பாகிஸ்தான் நடுவர் ஆசாத் ராபிடம் வட்சன் புகார் அளித்தபடியே இருந்தார். மேலும் வட்சன் தொடர்ந்து நடுவர்களிடம் பேசியதால் அஜ்மல் பந்து வீச்சில் பிரச்சினைகள் இருக்கிறது என்று பாகிஸ்தான் அணி நிர்வாகத்திற்கும் அறிவுறுத்தப்பட்டது. தேவையில்லாத பிரச்சினைகளை வட்சன் கிளப்புகிறார் என்று அப்போது அஜ்மல் கூறியிருந்தார். இந்த சம்பவங்கள் நடந்து 3 ஆண்டுகள் கழித்து அந்த அணிகளுக்கு இடை யிலான ரி- 20 ஆட்டத்தின் போது இருவருக்கும் மோதல் ஏற்பட்டுள்ளது. அந்த சமயம் மீண்டும் வட்சன் அவரது பந்து வீச்சு மீது சந்தேகம் எழுப்பினார். அந்த ரி- 20 ஆட்டத்தில்வட்சனை ஆட்டமிழக்கச் செய்த அஜ்மல் பவிலியனை நோக்கிக் கை காண்பித்து இருந்தார். (ரி)



# வில்லியம்சனின் அதிரடியில் சவுத்தேர்னை வீழ்த்தியது நோர்தன்



வில்லியம்ஸ்

நேற்று ஆரம்பமான ஆறாவது சம்பியன் லீக் ரி- 20 இலங்கையின் சவுத்தேர்ன் எக்ஸ்பிரஸ் மற்றும் நியூஸிலாந்தின் நோர்தன் நைட்ஸ் அணிகளுக்கிடையில் நடைபெற்ற ஆட்டத்தில் நோர்தன் அணி 7 இலக்குகளால் வெற்றி பெற்றது.

ஆடுகளம் ஈரமாகக் காணப்பட்ட காரணத்தால் ஆட்டம் தாமதமாகவே ஆரம்பமானது. இரு அணிகளுக்கும் தலா 10 ஓவர்கள் கொண்டதாக ஆட்டம் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நோர்தன் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சவுத்தேர்ன் அணிக்கு சிறந்த தொடக்கத்தை ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் வழங்கினர். பின்னர் வந்த வீரர்கள் சோபிக்கத் தவற அந்த அணி 10 ஓவர்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 92 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான குசால் பெரேரா, தனுஸ்க குணதிலக ஆகியோர் முறையே 37, 39 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் நோர்தன் அணியின் ரென்ற் போல்ற் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

93 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நோர்தன் அணி 3 பந்துகள் மீதமிருக்க 7 இலக்குகளால் வெற்றியீட்டியது. ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடிய கேன் வில்லியம்சன் 52 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் பர்வீஷ் மஹரூவ் 2 இலக்குகளைக் கைப்பற்றினார். ஆட்டநாயகனாக நோர்தன் நைட்ஸ் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் வில்லியம்சன் தெரிவானார். (ரி)

# ரி- 20க்கு முக்கியத்துவமா? மறுக்கிறார் இர்பான் பதான்

முதல் தர கிரிக்கெட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் 20 ஓவர் கிரிக்கெட்டிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார் இர்பான் பதான் என்ற விமர்சனம் எழுந்துள்ளது.

அணியில் யாராவது எனது நம்பகத்தன்மையை சந்தேகித்தால் அது என்னை மிகவும் காயப்படுத்துகிறது. ஆனால் அதைப் பற்றி பெரிதாகச் சிந்திப்பதில்லை. முதல் தர கிரிக்கெட் தொடர்களில் நான் பங்கேற்காதது பற்றி சிலர் விமர்சித்து வருகின்றனர். ஆனால் உடற்தகுதி நிபுணர் எனது காயத்தைக் கருத்தில் கொண்டு என்னை காத்திருக்கும் படி கூறியும் நான் ஒரு துடுப்பாட்ட வீரராக ரஞ்சிக் கிண்ணப் போட்டிகளில் விளையாடியதை இவர்கள் ஒருபோதும் குறிப்பிடுவதில்லை.

ஆனால் பரோடா அணிக்காக எனது கடமைகளை நான் செய்வதை முதன்மையாகக் கருதினேன். நான் சுலபமாக முழு உடல்தகுதி பெற்றவுடன் பந்துவீச்சு சகலதுறை வீரராக ஆட விரும்புகிறேன் என்று கூறியிருக்கலாம். ஆனால் நான் செய்யவில்லை. இது தவிர ஒருநாள் கிரிக்கெட், முஷ்டாக் அலி டிராபி ஆகியவற்றிலும் விளையாடினேன். முஷ்டாக் அலி டிராபியில் விளையாடும் போது காய்ச்சலுடன் ஆடினேன் என்பதை எனது நெருங்கிய சகாக்கள் அறிவர். எனக்கு கடவுள் நம்பிக்கை இருக்கிறது. எனது நேர்மை மீது எனக்கு ஒரு போதும் சந்தேகம் எழுந்ததில்லை. நாட்டிற்காக மீண்டும் ஆடும் குறிக்கோள்தான் எனது தீவிரம் அடங்கியுள்ளது. அதை உடனடியாக நிறைவேற்றுவேன். மக்கள் என்ன பேசுகிறார்களோ பேசட்டும்.

உலகக்கிண்ணக் கிரிக்கெட்டில் ஆட வேண்டும். அது என் மனதில் இருக்கிறது. அதற்கு முன்பாக முழு ரஞ்சிக் கிண்ணத் தொடரிலும் முழு உடற்தகுதியுடன் ஆட வேண்டும். நிறைய ஆட்டங்களை ஆட ஆட முன்னேற்றம் ஏற்படும். உலகக் கோப்பைக்கு முன்பாக இந்திய அணியில் இடம்பிடிக்க வேண் டும் இதுவே எனது குறிக்கோள். ஆனால் நிச்சயம் அணியில் இடம்பிடிப்பது உறுதி என்று இர்பான் பதான் கூறியுள்ளார். (ரி)

## இன்றைய CLT-20 ஆட்டங்கள்

| தகுதியாட்டம் 3 | தகுதியாட்டம் 4 |
|---|---|
| நோர்தன் நைட்ஸ் VS லாகூர் லயன்ஸ் | மும்பை இந்தியன்ஸ் VS சவுத்தேர்ன் எக்ஸ்பிரஸ் |
| மாலை 4 மணி | இரவு 8 மணி |

## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்.
ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்
**S.N குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா, வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.

காலை 9 மணி முதல் மாலை 5.00 மணி வரை.

இல.97/8, கண்ணகி அம்மன் கோயில் ஒழுங்கை, கோப்பாய் வீதி, உரும்பிராய், யாழ்ப்பாணம்.
(உரும்பிராய் சந்திக்கு அருகில்) (50509) (4.3.6)
T.P: 072 681 6681, 072 681 6691

## After A/L...

75% நேரடி கட்டணக் கழிவு

கணினி ஆங்கில கல்விக்கு

DMI COMPUTER EDUCATION




அனைத்து கிளைகளிலும் புதிய பிரிவுகள் ஆரம்பம்
15/9/2013 காலை
20/9/2013 9.30

தரமானதும் முழுமையானதுமான கல்விக்கு
**DMI COMPUTER EDUCATION**

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | No.113, கஸ்தூரியார் வீதி, Tel. 021-222 4403 |
| நெல்லியடி | M.M.V. வீதி, Tel. 021-226 2470 |
| சாவகச்சேரி | No.174, கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775 |
| சுன்னாகம் | No.130, கே.கே.எஸ் வீதி, (NSB வங்கி அருகில்) Tel.:021-224 1970 |

## லக்ஸ்மி ஸ்பீட் சேவிஸ்



உலக நாடுகளுக்கான துரித பார்சல் சேவைகள் குறைந்த கட்டணத்தில்.
கொழும்பு- யாழ்ப்பாணம் ஆகியவற்றுக்கும் செய்து தரப்படும்.
(உங்கள் வீடுகளில் வந்து பார்சல்கள் பெற்றுக்கொள்ளப்படும்.)

No.118, Point Pedro Road,
Ariyakulam Junction, Jaffna.
T.P : 076 625 5093

## உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## LONDON METROPOLITAN COLLEGE

சர்வதேச தரத்திலான ஆங்கில கற்கைநெறிகளை நடத்தும் யாழ்ப்பாணத்தின் முன்னிலை ஆங்கில கல்வி நிறுவனம்.

**IELTS (ACADEMIC & GENERAL)**
Duration: 60hours, Week/ Week ends

- ஒவ்வொரு மாணவர் மீதும் தனிப்பட்ட கவனம்
- முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட கற்பித்தல் வசதி
- IELTS 5.5-7.0 Band பெறுவதற்கான உத்தரவாதம்

**City& Guilds A1, B1 -Duration: 60 hours, Week/ Week ends**

- UK அரசாங்கத்தினால் சிபாரிசுசெய்யப்பட்டது.
- இதுவரை நடந்த பரீட்சையில் 100% சித்தி.
- காலவரையறையற்ற சான்றிதழ் பெறமுடியும்
- ESOL, SESOL பரீட்சைகளைதனித்தனியாகதோற்றமுடியும்

**Certificate In SPOKEN ENGLISH WITH GRAMMAR**
(Quick learning program)-Duration: 48hours,Week/ Week ends

- ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனைவளர்த்து கொள்ள விரும்புவோர்க்கான கற்கைநெறி.
- ஆங்கில உரையாடல் புலமையை வளர்ப்பது தொடர்பான பூரண விளக்கங்களுடன் கூடிய கற்கைநெறி.

**DIPLOMA IN ENGLISH- Duration: 3 Months, Week/ Week ends**
Writing - 60Hrs , Reading - 48Hrs,Listening - 48Hrs,Speaking - 48Hrs

- தொழில் தேடுவோர். தொழில் புரிவோர். A/L பரீட்சைக்கு தோற்றியோர் ஆங்கில புலமையை வளர்த்து கொள்வதற்கான கற்கைநெறி.
- Speaking, Reading, Listening, Writing ஆகியன விசேட செயன்முறை மூலம் விரிவாககற்பிக்கப்படும்
- 2014 A/L எழுதிய மாணவர்களிற்கு தனிப்பட்டரீதியில் கற்கைநெறி ஒழுங்கு செய்யப்படும்

அனைத்து கற்கை நெறிகளிலும் புதியபிரிவுகள் ஆரம்பம்
தவணைஅடிப்படையிலான மிகக்குறைந்த கட்டணம்.

Week days: 15.09.2014 | 22.09.2014
Week ends: 14.09.2014 | 20.09.2014

#197, Arasady Road, Jaffna, Sri Lanka.
Tel: 021 222 7230 | 021 753 8395
E mail: info@lmcjaffna.edu.lk Web: www.lmcjaffna.edu.lk.
(C/16542)(10.6.3)

## வேலைவாய்ப்பு
(அலுவலகப் பொறுப்பதிகாரி)

வவுனியாவில் உள்ள உதயன் கிளைக் காரியாலயத் திற்கு அலுவலகப் பொறுப்பதிகாரி தேவை.
அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வுபெற்றவர்களுக்கு முன்னுரிமை.
அனுபவம், தகைமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.
ஆர்வமுள்ளவர்கள் தங்கள் விண்ணப்பங் களை கீழ்வரும் முகவரிக்கு 20.09.2014 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.




அனுப்ப வேண்டிய முகவரி :
விள.இல. - 5012
மே/பா உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## அனைத்து வைத்திய சேவைகளுக்கும் நொதன் சென்றல் வைத்தியசாலை


Northern Central Hospitals

இருதய மார்புச் சத்திர சிகிச்சை
ByPass சத்திர சிகிச்சை, இருதய துவாரம் மூடுதல், போன்ற இருதய, மார்புச் சத்திர சிகிச்சைகள் நடைபெறுகின்றன.



நொதன் சென்றல் வைத்தியசாலை – திருநெல்வேலி
தொ.பே.:021 221 9988 / 021 221 9977 பக்ஸ் 021 2222263

## After AL?



கற்கை நெறி ஒன்றிற்கு கட்டணம் செலுத்தி விரும்பிய கற்கை நெறிகள் அனைத்தையும் கற்றிடுங்கள்
**18000/=**

இச்சலுகை 19 வரை முற்பதிவுகளிற்கு:

BIT
CIMA
MCSE
Ms office
English
Web design
Shingalam

**MCS**

Type 18<Name><DateofBirth><District> & send to 772395895

## யாழ்ப்பாண மருத்துவச் சங்கத்துக்கு காணி தேவை

யாழ்ப்பாணம் மருத்துவச் சங்கம் அதற்கான காரியாலயம், நூலகம் மற்றும் முதன்முறையாக மருத்துவ ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றை அமைப்பதற்குரிய கட்டடத்தை யாழ்ப்பாணத்தில் நிர்மாணிப்பதற்குப் பரோபகாரிகளிடம் இருந்து நன்கொடையாக நிலத்தை எதிர்பார்க்கின்றது. ஆர்வமுள்ளோர் 0776569601 அல்லது யாழ்.போதனா வைத்தியசாலையில் இயங்கிவரும் தற்காலிக அலுவலகத்துடன் (JMA Library) தொடர்பு கொள்ளவும்.
(52222)(12.3.6)

## இலவச கணினிப்பயிற்சி

**Web design Multimedia Networking**

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு 15 வருடங்களைப் பூர்த்தி செய்த எமது நிறுவனம் பாடசாலைக்கல்வியை பூர்த்தி செய்த மாணவர்களிற்கு மேற்படி பயிற்சி நெறியினை **கற்கை நெறிக்கட்டணமின்றி** வழங்கவுள்ளோம். விண்ணப்பிக்க விரும்புவோர் Free<Name> <Date.of.Birth><District> என்பவற்றை 772395895 என்ற இலக்கத்திற்கு sms செய்யவும்.
Registered:இளைஞர் திறன் விருத்தி அமைச்சு, மூன்றாம் நிலை தொழிற்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு

**MCS**

## தேவை

யாழ்.நகர், கிளிநொச்சி அறிவியல்நகர், பம்பைமடு போன்ற இடங்களில் பல்கலைக்கழகங்களுக்கான கட்டட நிர்மாணப் பணிகள் ஆரம்பமாகவுள்ளன. கீழ்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு வேலையாள்கள்/உபகொந்திராத்துகாரர்கள் தேவை.

- மேசன் கொந்திராத்துகாரர்
- Form Work கொந்திராத்துகாரர்
- கம்பி கொந்திராத்துகாரர்
- ரைல் கொந்திராத்துகாரர்


தொடர்புகளுக்கு:

| | |
|---|---|
| கோண்டாவில் | - 071 257 9347 |
| கிளிநொச்சி | - 071 257 9327 |
| பம்பைமடு (வவுனியா) | - 071 257 8482 |
| திருநெல்வேலி | - 071 238 7106 |
| வவுனியா | - 071 238 7076 |
| பொது | - 077 375 1803 |

(சி16590)(12.3.6)

## நிலப்பதிப்புக்கற்களின் சிறந்த தெரிவுகளுக்கு

**Inter Lock Paving Stone**



உறுதியான பல வடிவங்களில் கறுப்பு, சிவப்பு, வெள்ளை நிற நிலப்பதிப்புக்கற்களை (Interlock) எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
(52082)(4.3.6)

தொடர்புகளுக்கு
077 3818799
உங்கள் இருப்பிடத்திற்கு இறக்கித்தரப்படும்.

**பிரணவன் என்ரபிறைசஸ்**
635, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
வவுனியா காட்சியறையிலும் பார்வையிடலாம்

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. (யாழில் 1976 முதல்). 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், சரியான உச்சரிப்பு, நேரடியாக பிரெஞ் ஆசிரியரிடம் படிக்கலாம். இலங்கையில் AF மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF A1, A2) ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழிபெயர்புகள், AUDIO CDs & BOOKS இலவசமாக பாவிக்கலாம். யாரும் படிக்கலாம். ஓரிரு மாதங்களும் படிக்கலாம். LETTRE & PHOTOCOPIES இலவசம். உடன் பதியுங்கள்

குறிப்பு :வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு உத்தியோகபூர்வ நிறுவனம் AF மட்டுமே. பொய் விளம்பரங்களை நம்பாதீர்கள்.
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்...
கச்சேரி → புகையிரதகடவை → AF or ஆரியகுளத்திலிருந்து நக்கா றோட் → AF

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெற் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.